# கற்போம் எழுதுவோம் இயக்கம்

## அடிப்படை எழுத்தறிவு நூல்




Non Formal Book_1-14.indd 1 10-11-2020 13:13:07

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு - 2019

திருத்திய பதிப்பு - 2020

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்







காப்புரிமை
பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர்
கல்வி இயக்ககம் சென்னை – 600006
© DNFAE 2019

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

## பொருளடக்கம்


| பாட எண் | தலைப்பு | எழுத்துகள் | | குறியீடுகள் | பக்க எண் |
|---|---|---|---|---|---|
| | | உயிர் | உயிர்மெய் | | |
| 1 | படமும் பாடமும்<br>எண்கள் அறிவோம் (1 – 10) | | ப, ட, ம |  | 05 |
| 2 | சமூகம் – பூச்சியம் (0) அறிமுகம் | | க, ச |  | 11 |
| 3 | நிருவாகம் – டிஜிட்டல் எண்கள் | | ந, வ, ர |  | 16 |
| 4 | முயற்சியும் மூலதனமும்<br>முயன்றால் முடியும் பாடல்<br>எண்கள் அறிவோம் (11 – 30) | | ல, த, ன,<br>ய, ற |  | 21 |
| 5 | வாழ்வியலும் ஆளுமையும்<br>எண்கள் அறிவோம் (31 – 100) | ஆ | ழ, ள |  | 28 |
| | **மதிப்பீடு – 1** | | | | |
| 6 | இயற்கையோடு இணைவோம்<br>எண்கள் 101 முதல் 200 வரை | இ | ண |  | 34 |
| 7 | ஐயமின்றி ஈதல் அஃது அழகு –<br>எண்ணும் எண்ணுப்பெயரும் (1 – 20) | அ, ஈ,<br>ஐ, ஃ | | | 37 |
| 8 | ஊரும் ஏரும் – இட மதிப்பு<br>(ஒன்றுகள், பத்துகள், நூறுகள்) | ஊ, ஏ | | | 42 |
| 9 | ஓதுவது ஒழியேல்<br>கல்வி தொடர்பான பாடல் –<br>அதிகம் – குறைவு, ஓரிலக்கக்<br>கூட்டல், ஓரிலக்கக் கழித்தல் | ஒ, ஓ | |  | 45 |
| 10 | என் உள்ளங்கையில் விஞ்ஞானம்<br>ஈரிலக்கக் கூட்டல், ஈரிலக்கக் கழித்தல் | எ, உ | ங, ஞ | | 50 |
| | **மதிப்பீடு – 2** | | | | |
| 11 | ஔவையும் நெல்லிக்கனியும்<br>பெருக்கல், வகுத்தல் | ஔ | |  | 57 |
| 12 | நூலகப் பூக்கள்<br>இருபரிமாண வடிவங்களின் பண்புகள்,<br>அமைப்புகள் (சதுரம், முக்கோணம்,<br>வட்டம், செவ்வகம்) | | |  | 61 |
| 13 | கூடித் தொழில் செய்வீர்<br>நீட்டல் அளவை | | |  | 65 |
| 14 | கிரந்த எழுத்துகள் அறிமுகம்<br>நிறுத்தல் அளவை, முகத்தல் அளவை | ஜ, ஸ, ஷ,<br>ஹ, க்ஷ, ஸ்ரீ | | | 69 |




Non Formal Book_1-14.indd 3 10-11-2020 13:13:08

| | | | | |
|---|---|---|---|---|
| | மதிப்பீடு – 3 | | | |
| 15 | சட்டம் அறிவோம் –<br>காலம் – கடிகாரம் பார்த்து நேரம் கூறுதல் | | | 75 |
| 16 | வாக்களிப்பது நம் கடமை<br>12 மணிநேரம் – 24 மணிநேரம் | | | 81 |
| 17 | நம் தொழில் . . நம் வளர்ச்சி . .<br>வாரத்தின் நாள்கள், நாள்காட்டி,<br>ஆங்கில மாதங்கள், பருவங்கள் | | | 84 |
| 18 | பாலினப் பாகுபாடு<br>தொடர்வண்டி – முன்பதிவு பயணச்சீட்டு | | | 90 |
| 19 | உடல்நலம் காக்கும் உணவுகள்<br>பயணச்சீட்டு – வாங்குதல்<br>உரிய கட்டணம் செலுத்துதல், மீதிப்பணம் பெறுதல் | | | 95 |
| | மதிப்பீடு – 4 | | | |
| 20 | இணையவழிச் சேவை<br>பணம் – அறிமுகம் | | | 101 |
| 21 | பேரிடர் மேலாண்மை<br>பணம் – கூட்டல், கழித்தல் | | | 107 |
| 22 | பணமில்லாப் பரிமாற்ற உலகம் –<br>காசோலை | | | 113 |
| 23 | பசுமைத் தோட்டம் – அஞ்சலகத்தில் பணம்<br>எடுக்கும் படிவம் | | | 117 |
| 24 | சாலைப் பாதுகாப்பு – முதலுதவி –<br>அஞ்சலகத்தில் பணம் போடும் படிவம் | | | 122 |
| | மதிப்பீடு – 5 | | | |
| 25 | பெண்கல்வி – படவிளக்கக் காட்சி – தகவல் திரட்டுதல் | | | 129 |
| 26 | திருவிழாவில் ஒரு விழா<br>அலைபேசி ரீசார்ஜ் திட்டங்களை அறிதல் | | | 134 |
| 27 | தூய்மை பாரதம், பீம்செயலி – (BHIM) | | | 138 |
| | மதிப்பீடு – 6 | | | |
| 28 | விண்ணப்பம் | | | 145 |
| | கற்போர் இறுதி மதிப்பீட்டு வினாத்தாள் | | | |
| | கற்போம் எழுதுவோம் இயக்கம் – கற்றல் விளைவுகள் | | | 151 |




Non Formal Book_1-14.indd 4 10-11-2020 13:13:08

பாடம் 1

# படமும் பாடமும்



| | | |
|---|---|---|
| ப | படம் | பட்டம் |
| ட | படபட | பப்படம் |
| ம | மடம் | மட்டம் |
| ◌் | பட்டா | டம்டம் |
| ◌ா | பாடம் | மாடம் |
| ◌ு | பாட்டு | முட்டம் |

படம் மாட்டு

பாட்டு பாடு

மாடு முட்டும்

பாப்பா பாட்டு

பாப்பா பாட்டு பாடு

மாமா படம் மாட்டு



Non Formal Book_1-14.indd 6 10-11-2020 13:13:09

# கணக்கு

F3Q5N4

## எண்கள் அறிவோம். (1–10)

| பெயர் | எண்கள் |
|---|---|
|  | 1 |
|  | 2 |
|  | 3 |
|  | 4 |
|  | 5 |
|  | 6 |
|  | 7 |
|  | 8 |
|  | 9 |
|  | 10 |



Non Formal Book_1-14.indd 7 10-11-2020 13:13:18

## பயிற்சிகள்

1. வட்டமிட்ட எழுத்தைப்போல் இருக்கும் எழுத்தை வட்டமிட்டுக் காட்டுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ப) | ம | ப | பா | ட் | ப |
| (ம) | டா | பா | மா | ம | மா |
| (டா) | ட் | டா | ட | ம | டா |

2. பின்வரும் சொற்களைப் படித்துக்காட்டுக.

| | | | |
|---|---|---|---|
| படம் | மடம் | பட்டம் | மட்டம் |
| பாடம் | மாடம் | பாட்டு | மாட்டு |
| பாடு | மாடு | படு | மடு |
| பட்டு | மட்டு | முட்டு | முட்டம் |

3. குறியீட்டைச் சேர்த்து எழுதுக.

| | ப | ட | ம |
|---|---|---|---|
| ◌் | | | |
| ◌ா | | | |
| ெ◌ | | | |

4. பின்வரும் படத்தில் விடுபட்ட எழுத்துகளை எழுதுக.



_ ட ம்



ப _ ட ம்



_ ப் பா




Non Formal Book_1-14.indd 8 10-11-2020 13:13:18

5. எழுதிப் பழகுவோம்

ட ப ம ட் ப் ம்

6. எண்ணிப் பொருத்துக.


5



7



8



9






Non Formal Book_1-14.indd 9 10-11-2020 13:13:19

7. நிரப்புக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 3 | | 5 | | | 8 | | 10 |

8. சமமாக உள்ளதைப் பொருத்துக.





Non Formal Book_1-14.indd 10 10-11-2020 13:13:21

பாடம்
2

# சமூகம்





Non Formal Book_1-14.indd 11 10-11-2020 13:13:22

| | | | |
|---|---|---|---|
| க | கட்டு | பக்கம் | பாகம் |
| ச | மச்சம் | சட்டம் | சாகசம் |
| ழ | சமூகம் | மூட்டு | மூக்கு |

பாசம் காட்டு

கட்டடம் கட்டு

பாப்பா முகம் காட்டு

கடுகு கசக்கும்

மூடம் சாடு

குடும்பக் கட்டுப்பாடு

## கணக்கு

### பூச்சியம் (0) – அறிமுகம்

3 கிளிகள்




2 கிளிகள்



1 கிளி



0 பூஜ்ஜியம்





Non Formal Book_1-14.indd 12 10-11-2020 13:13:25

## பயிற்சிகள்

**1. பின்வரும் சொற்களை ஒலிப்புமுறைக்கேற்றவாறு (குறில்/நெடில்) படித்துக்காட்டுக.**

| | | |
|---|---|---|
| படம் – பாடம் | மடம் – மாடம் | முட்டு – மூட்டு |
| கட்டு – காட்டு | முக்கு – மூக்கு | படு – பாடு |
| மட்டு – மாட்டு | முட்டம் – மூட்டம் | பட்டு – பாட்டு |

**2. எழுத்துகளை அடையாளம் கண்டு வட்டமிடுக.**

| | | | |
|---|---|---|---|
| க | பாகம் | கடம் | பக்கம் |
| ச | சக்கரம் | கசடு | மச்சம் |
| மூ | மூக்கு | தைமூர் | பனிமூட்டம் |

**3. கோடிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை நிரப்புக.**

1. கட்டடம் -------------- (கட்டு/ முட்டு)
2. சமூகச்---------------- (சகடம் / சட்டம்)
3. படச் ------------------ (சட்டம்/ கட்டம்)
4. பாப்பா ---------------- (முக்கு/ மூக்கு)
5. சட்டப் -----------------(படம் / பாடம்)

**4. கொடுக்கப்பட்ட சொல்லிலிருந்து வேறு புதிய சொற்கள் மூன்று எழுதுக.**

**எடுத்துக்காட்டு –** கட்டுப்பாடு – கட்டு, பாடு, கடு, பாட்டு

படச்சட்டம் – --------, --------, --------

சமூகப்படம் – --------, --------, --------



Non Formal Book_1-14.indd 13 10-11-2020 13:13:25

5. எழுதிப் பழகுக.

ச சா ச்

க கா க்



Non Formal Book_1-14.indd 14 10-11-2020 13:13:25


6. மூன்று பூ பூத்திருக்கும் செடி – மூவர் வந்து பூக்களைப் பறித்துச் சூடிக்கொள்ளுதல்

## செடியில் எத்தனை பூக்கள் உள்ளன?





7. எண்களுக்கேற்ப மணிகள் வரைக.

| | |
|---|---|
| 5 |  |
| 3 | |
| 0 | |
| 2 | |



Non Formal Book_1-14.indd 15 10-11-2020 13:13:26

பாடம்
3

# நிருவாகம்






Non Formal Book_1-14.indd 16 10-11-2020 13:13:28

| | | | |
|---|---|---|---|
| ந | நகம் | நம்பி | நகரம் |
| வ | வட்டம் | பருவம் | வடகம் |
| ர | காரம் | கரகம் | பம்பரம் |
| ி | சிரி | கிடா | மாமி |

நம் நாடு

நாகம் பார்

வாட்டம் விடு

சக்கரம் மாட்டு

நாடகம் பார்

பம்பரம் விடு

நகர நாகரிகம்

கரகாட்டம் பார்

## கணக்கு

டிஜிட்டல் எண்கள்






Non Formal Book_1-14.indd 17 10-11-2020 13:13:28

## பயிற்சிகள்

1. பின்வரும் எழுத்துகளை ஒழுங்குபடுத்திச் சொல்லாக்குக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ட | ம | ம் | | – | மடம் |
| ர | க | ம் | க | – | |
| க | ம் | கா | | – | |
| க | ட | நா | ம் | – | |
| ட | ப | கு | | – | |

2. முதல் படத்திலிருந்து ஓர் எழுத்தை மாற்றி, இரண்டாம் படத்திற்குரிய பெயரைக் கண்டுபிடித்து எழுதுக.



படம்



குடம்



பாகம்



_ _ _ _



பாக்கு



_ _ _ _




Non Formal Book_1-14.indd 18 10-11-2020 13:13:28

3. நடு வட்டத்திலுள்ள எழுத்துடன் மற்ற எழுத்துகளை இணைத்து எழுதுக.





பாடு
__________
__________
__________
__________
__________


4. பின்வரும் எடுத்துக்காட்டைப்போல் எழுதுக.




நாடு

பாகு






Non Formal Book_1-14.indd 19 10-11-2020 13:13:28

5. எழுதிப் பழகுக.

ந வ ர ந் வ் ர்

நா வா ரா

6. டிஜிட்டல் எண்களைப் படித்துக்காட்டுக.

1 2 3 4 5 6 7 8 9 0

7. உங்களுடைய கைபேசி எண்ணை எழுதுக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |




நீங்கள் எழுதிய எண்ணில் ஒருமுறைக்குமேல் இடம்பெற்றிருக்கும் எண்களை வட்டமிடுக.



Non Formal Book_1-14.indd 20 10-11-2020 13:13:28


பாடம்
4

# முயற்சியும் மூலதனமும்





Non Formal Book_1-14.indd 21 10-11-2020 13:13:29

| | | | |
|---|---|---|---|
| ல | காலம் | நிலா | தாலாட்டு |
| த | தட்டு | தாகம் | புத்தகம் |
| ன | கனா | தானம் | கன்னி |
| ய | யார் | காய் | வயல் |
| ற | புறா | மன்றம் | முயற்சி |
|  | புவி | வாயு | கனிவு |

பயம் தவிர்

கற்க கசடற

கடிதம் படித்தான்

மன்னன் மகன்

வனம் காப்பாய்

புத்தகம் வாசி



Non Formal Book_1-14.indd 22 10-11-2020 13:13:30

# முயன்றால் முடியும்

முயற்சி தானே மூலதனம்
முயலாவிட்டால் ஏது பணம்?
மூளை கூட மூலதனம்
மூடிய கதவையும் திறந்துவிடும்

வாடிய பயிருக்கு நீருண்டு
வாசல் தோறும் வழியுண்டு
சும்மா இருந்தால் எதுவுண்டு?
சோம்பேறிப் பட்டம் தானுண்டு

விரைந்து தொழிலைத் தொடங்கிடு
வெற்றிப் பாதையில் நடந்திடு
வேண்டும் பொருளை ஈட்டிடு
வறுமை நிலையை ஒழித்திடு

வாய்ப்பு உலகம் என்பது
வானம் போலே பரந்தது
சிறகை விரித்து எழுந்திடு
சிறப்பாய் வாழ்வை நடத்திடு










சொந்தக் காலில் நின்றிட
சோலைக் காற்றாய் வீசிட
உந்து சக்தி உழைப்புதான்
உயர்ந்து நின்று வென்றிடு



Non Formal Book_1-14.indd 23 10-11-2020 13:13:30






# கணக்கு

## எண்கள் அறிவோம் (11 – 30)


| | | | |
|---|---|---|---|
|  | 11 |  | 21 |
|  | 12 |  | 22 |
|  | 13 |  | 23 |
|  | 14 |  | 24 |
|  | 15 |  | 25 |
|  | 16 |  | 26 |
|  | 17 |  | 27 |



Non Formal Book_1-14.indd 24 10-11-2020 13:13:30

| | | | |
|---|---|---|---|
|  | 18 |  | 28 |
|  | 19 |  | 29 |
|  | 20 |  | 30 |

**1. பின்வரும் படத்திற்குரிய பெயர்களை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| | | | |

**2. சொற்களை முறைப்படுத்தித் தொடர் அமைக்க.**

**எடுத்துக்காட்டு :** கட்டியவர் பாலம் யார் – பாலம் கட்டியவர் யார்?

1. தாலாட்டு தாய் பாடிய – ---------------------.
2. மயில் வயலில் நின்ற – ---------------------.
3. நின்றான் மரப்பாலத்தில் மன்னன் – ---------------------.
4. படித்தான் கடிதம் கந்தன் – ---------------------.
5. நாயகன் வனம் காத்த – ---------------------.



Non Formal Book_1-14.indd 25 10-11-2020 13:13:30

3. பின்வரும் அட்டவணையிலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பொருத்தமான சொற்றொடர் உருவாக்குக.

| | | |
|---|---|---|
| புத்தகம் | பாலம் | கதவு |
| முகம் | பால் | பாட்டு |
| கரும்பு | பக்கம் | தயவு |

| | | |
|---|---|---|
| பார் | வா | பாடு |
| குடி | தின் | படி |
| கட்டு | திற | காட்டு |

1. புத்தகம் படி 2. ------------------ 3. ------------
4. ------------- 5. ------------------ 6. ------------
7. ------------- 8. ------------------ 9. ------------

4. குழுவில் சேராத சொல் எது? வட்டமிட்டுக் காட்டுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | காகம் | புறா | மயில் | புலி |
| 2. | கனி | வானம் | மரம் | காய் |
| 3. | முகில் | நிலவு | வாரம் | வானம் |
| 4. | சிரிப்பு | தானம் | பயம் | வருத்தம் |
| 5. | பாப்பா | வாட்டம் | தாய் | தாலாட்டு |

5. எழுதிப் பழகுக.

ல த ன ய ற

ல் த் ன் ய் ற்

6. எண்களுக்கேற்ப மணிகள் வரைக

| | |
|---|---|
| 17 | |
| 19 | |
| 22 | |
| 11 | |

7. தொடர்ந்து எழுதுக

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | 15 | | |



Non Formal Book_1-14.indd 27 10-11-2020 13:13:30

பாடம் 5

# வாழ்வியலும் ஆளுமையும்

| | | | |
|---|---|---|---|
| ழ | தமிழ் | கழுகு | பழகு |
| ள | மிளகு | குளிர் | பள்ளம் |
| ஆ | ஆடு | ஆழம் | ஆவல் |
| □ு | காற்று | வாத்து | முறுக்கு |
| ை□ | சிலை | வாழை | வைகை |

தை மாதம்

கிழக்குவாசல்

பல்லுயிர் காத்திடு

தமிழைப் படி

முயன்றால் முடியும்

வளத்துடன் வாழ்க

குலுக்கலில் பரிசு விழுந்தது

ஆழ்கடலில் முத்து கிடைத்தது



Non Formal Book_1-14.indd 28 10-11-2020 13:13:30

# கணக்கு

## எண்கள் அறிவோம் (31 – 100)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |

### பயிற்சிகள்

1. எழுத்தை வட்டமிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| ழ | பழம் | பவழம் | தமிழகம் | பழகு |
| ள | பள்ளம் | களம் | குளவி | கவளம் |
| லு | துவரை | முறுக்கு | வாத்து | குலுக்கல் |
| ளை | வளை | தளை | மழை | தரை |
| ஆ | ஆட்டம் | ஆமை | ஆடு | ஆவல். |

2. படித்துப் பழகுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ழ | ள | ஆ | து | று | லு |
| லை | கை | மை | ழை | ளை | ரை |



Non Formal Book_1-14.indd 29 10-11-2020 13:13:30

3. படித்துப் பொருள் அறிக.

வாழை



வாளை



வால்



வாள்



குழவி



குளவி



பழம்



பலம்



கரை



கறை





Non Formal Book_1-14.indd 30 10-11-2020 13:13:31

4. படித்துக்காட்டுக.

1. குழலி பிட்டு சாப்பிட்டாள்

2. வாழைப்பழம் வழுக்கிவிட்டது.

3. தம்பி பழம் பறித்தான்.

5. எழுதிப் பழகுக

ழ ள ஆ று லை

6. 31–100 விடுபட்ட இடத்தை நிரப்புக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 36 | | 38 | | | 41 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 43 | 44 | | | | 48 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 87 | | | 90 | | |



Non Formal Book_1-14.indd 31 10-11-2020 13:13:31

## மதிப்பீடு – 1

**1. வட்டமிட்ட எழுத்தைப்போல் இருக்கும் எழுத்தை வட்டமிட்டுக் காட்டுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ப) | ம | ப | பா | ட் | ப |
| (ச) | க | ச | கா | சா | ச |
| (டா) | ட் | டா | ட | ம | டா |

**2. எழுத்துகளை அடையாளம் கண்டு வட்டமிடுக.**

| | | | |
|---|---|---|---|
| க | பாகம் | கடம் | பக்கம் |
| வ | பருவம் | வட்டம் | வடகம் |
| ள | மிளகு | பள்ளம் | பவளம் |
| லா | பலா | தாலாட்டு | நிலா |

**3. குறியீட்டைச் சேர்த்து எழுதுக.**

| | க | ட | ம |
|---|---|---|---|
| □் | | | |
| □ா | | | |
| ெ□ | | | |
| ை□ | | | |

**4. படித்துக்காட்டுக**

| | | | |
|---|---|---|---|
| படம் | மூக்கு | பட்டம் | மாடு |
| பாடம் | மாடம் | பாட்டு | கரகம் |
| பாடு | நாகம் | சக்கரம் | பம்பரம் |
| முகம் | மட்டு | நாகரிகம் | நாடு |



Non Formal Book_1-14.indd 32 10-11-2020 13:13:31

5. பின்வரும் படத்தில் விடுபட்ட எழுத்துகளை எழுதுக.



_ டம்



ப _ டம்



_ ப்பா

6. எண்ணிப் பொருத்துக.

6




7



10



9



7. எண்களுக்கேற்ப மணிகள் வரைக

| | |
|---|---|
| 17 | |
| 19 | |
| 22 | |
| 11 | |

8. விடுபட்ட இடத்தை நிரப்புக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 51 | | 53 | | | 55 | | | 59 | |



Non Formal Book_1-14.indd 33 10-11-2020 13:13:32

பாடம்
6

# இயற்கையோடு இணைவோம்

J6J8I3



| | | | |
|---|---|---|---|
| இ | இசை | இந்தியா | இயற்கை |
| ண | பணம் | திண்ணை | கணுக்கால் |
| ே□ா | தோடு | மோர் | கோட்டம் |

வாசலில் கோலம் போடு

தினைமாவுக்கு இணையேது

இரவலர்க்கு இரக்கம் காட்டு

வாழைப்பழம் சத்துமிக்கது

இயற்கையோடு இணைவோம்

பனைமரம் நமது தமிழகத்தின் அடையாளச் சின்னம்



Non Formal Book_1-14.indd 34 10-11-2020 13:13:34

# கணக்கு

## எண்கள் அறிவோம் (101 – 200)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 101 | 102 | 103 | 104 | 105 | 106 | 107 | 108 | 109 | 110 |
| 111 | 112 | 113 | 114 | 115 | 116 | 117 | 118 | 119 | 120 |
| 121 | 122 | 123 | 124 | 125 | 126 | 127 | 128 | 129 | 130 |
| 131 | 132 | 133 | 134 | 135 | 136 | 137 | 138 | 139 | 140 |
| 141 | 142 | 143 | 144 | 145 | 146 | 147 | 148 | 149 | 150 |
| 151 | 152 | 153 | 154 | 155 | 156 | 157 | 158 | 159 | 160 |
| 161 | 162 | 163 | 164 | 165 | 166 | 167 | 168 | 169 | 170 |
| 171 | 172 | 173 | 174 | 175 | 176 | 177 | 178 | 179 | 180 |
| 181 | 182 | 183 | 184 | 185 | 186 | 187 | 188 | 189 | 190 |
| 191 | 192 | 193 | 194 | 195 | 196 | 197 | 198 | 199 | 200 |

## நீங்களும் எழுதலாம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 201 | 202 | | | 205 | | | | | 210 |
| | 212 | | | 215 | | | 218 | | |
| 221 | | 223 | | | | | | 229 | 230 |
| 231 | | 233 | | | | | | 239 | |
| | 242 | | | 245 | | | 248 | | |
| 251 | | | | | | 257 | | | |
| | | | 264 | | 266 | | | | 270 |

## பயிற்சிகள்

1. **எழுத்தை அடையாளம் கண்டு வட்டமிடுக.**

| | | | |
|---|---|---|---|
| இ | இரும்பு | இது | இன்று |
| ண | பணம் | கணம் | மனம் |
| கோ | போட்டி | தோகை | கோலம் |

2. **பின்வரும் எழுத்துகளைப் படித்துக்காட்டுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இ | ண | ணை | தோ | போ | கோ |



Non Formal Book_1-14.indd 35 10-11-2020 13:13:34

3. படத்தையும் சொல்லையும் பொருத்துக.

| | | |
|---|---|---|
|  | | ஆணி |
|  | | சோளம் |
|  | | கோட்டை |
|  | | மணி |
|  | | இலை |

4. எழுதிப் பழகுக.

இணைகோடுகள்

5. விடுபட்ட எண்களைப் பூர்த்திசெய்க.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 341 | | 343 | | | 346 | | 348 |
| 410 | | 412 | | | 415 | | |
| 945 | | | | 949 | | | |
| 896 | | | | | | 901 | |



Non Formal Book_1-14.indd 36 10-11-2020 13:13:34

பாடம் 7

# ஐயமின்றி ஈதல் அஃது அழகு



| | | | |
|---|---|---|---|
| ஐ | ஐயம் | ஐயா | ஐந்து |
| ஈ | ஈசல் | ஈரம் | ஈட்டி |
| அ | அம்மா | அப்பா | அத்தை |
| ஃ | அ ஃ து | எ ஃ கு | இ ஃ து |

அச்சம் தவிர்

ஈச்சம்பழம் இனிக்கும்

ஈடுபாட்டுடன் படி

அம்மா அன்புமிக்கவர்

அஃகம் சுருக்கேல்

எஃகு போல் உடல்

அளவான குடும்பம் வளமாக வாழும்

அயராத முயற்சி வருமானம் ஈட்டும்



Non Formal Book_1-14.indd 37 10-11-2020 13:13:35

பாடல்

அம்மா என்று அழைத்தேதான்
ஆசை மகளும் வந்தாளே
இன்சுவை என்றே பெயரிட்டு
ஈர்ப்புடன் இறுக அணைத்தேனே
உள்ளன்போடு என்கைப் பிடித்து
ஊஞ்சல் ஆடி மகிழ்ந்தாளே
என்றும் இன்பம் தங்கிடவே
ஏக்கம் அகற்றிட வந்தாளே
ஐயம் ஏதும் எனக்கில்லை
ஒளிர்மதி போல வானில்தான்
ஓயா அலைகடல் போலத்தான்
ஔவைபோலப் புகழ் பெறுவாள்
அஃதே என் எதிர்பார்ப்பாகும்

S2F2R6



# கணக்கு

**எண்ணும் எண்ணுப்பெயரும் (1 – 20)**

| எண் | எண்ணுப்பெயர் |
|---|---|
| 1 | ஒன்று |
| 2 | இரண்டு |
| 3 | மூன்று |
| 4 | நான்கு |
| 5 | ஐந்து |
| 6 | ஆறு |
| 7 | ஏழு |
| 8 | எட்டு |
| 9 | ஒன்பது |
| 10 | பத்து |

| எண் | எண்ணுப்பெயர் |
|---|---|
| 11 | பதினொன்று |
| 12 | பன்னிரண்டு |
| 13 | பதின்மூன்று |
| 14 | பதினான்கு |
| 15 | பதினைந்து |
| 16 | பதினாறு |
| 17 | பதினேழு |
| 18 | பதினெட்டு |
| 19 | பத்தொன்பது |
| 20 | இருபது |



Non Formal Book_1-14.indd 38 10-11-2020 13:13:35

10 – 100 பத்து பத்தாக எண்ணுவோம் எழுதுவோம்.

| | |
|---|---|
| 10 | பத்து |
| 20 | இருபது |
| 30 | முப்பது |
| 40 | நாற்பது |
| 50 | ஐம்பது |
| 60 | அறுபது |
| 70 | எழுபது |
| 80 | எண்பது |
| 90 | தொண்ணூறு |
| 100 | நூறு |

இருபது
முப்பது
நாற்பது
ஐம்பது
அறுபது
எழுபது
எண்பது
தொண்ணூறு

ஒன்று
இரண்டு
மூன்று
நான்கு
ஐந்து
ஆறு
ஏழு
எட்டு
ஒன்பது

21. இருபத்து ஒன்று

22. இருபத்து இரண்டு

23. இருபத்து மூன்று

24. ____________

25. ____________

26. ____________

27. ____________

28. ____________

29. ____________

நூறு, நூறாக எண்ணுவோம்.

| | |
|---|---|
| 100 நூறு | 600 அறுநூறு |
| 200 இருநூறு | 700 எழுநூறு |
| 300 முந்நூறு | 800 எண்ணூறு |
| 400 நானூறு | 900 தொள்ளாயிரம் |
| 500 ஐநூறு | 1000 ஆயிரம் |



Non Formal Book_1-14.indd 39 10-11-2020 13:13:35

## பயிற்சிகள்

**1. எழுத்துகளை அடையாளம் கண்டு வட்டமிடுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| ஐ | ஐவிரல் | ஐவர் | ஐந்து | ஐயா |
| ஈ | ஈச்சமரம் | ஈயம் | ஈறு | ஈதல் |
| அ | அம்மா | அப்பா | அன்பு | அறிவு |
| ஃ | அஃது | எஃது | அஃகம் | இஃது |

**2. ஒலித்துக்காட்டுக.**

ஐ ஈ அ ஃ

**3. சரியான எழுத்தை நிரப்பிப் படிக்க.**

| | | |
|---|---|---|
| [ஐ] வர் | [ ] ந்து | [ ] யா |
| [ஈ] சல் | [ ] ரம் | [ ] ட்டி |
| [அ] ப்பா | [ ] ம்மா | [ ] த்தை |

**4. ஃ எழுத்து உள்ள வட்டங்களை இணைத்து, அதன் வடிவத்தைக் காண்க.**

அஃது

ஐவர்

ஐயம்

அண்ணன்

எஃகு

இஃது

ஈரம்



Non Formal Book_1-14.indd 40 10-11-2020 13:13:35

5. எழுதிப் பழகுக.

ஐயமின்றி ஈதல் அழகு

6. கீழ்க்காணும் பேருந்துகளிலுள்ள எண்ணுக்கு ஏற்ற எண்ணுப்பெயர் எழுதுக.




__________ __________ __________

7. எண்ணையும் எண்ணுப்பெயரையும் பொருத்துக.

| | |
|---|---|
| ஒன்பது | 7 |
| ஏழு | 5 |
| ஐந்து | 9 |

8. எண்ணுப்பெயருக்கேற்ற எண்களை எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பன்னிரண்டு | = | ________ | பதினைந்து | = | ________ |
| எட்டு | = | ________ | பதினாறு | = | ________ |
| இருபது | = | ________ | பத்தொன்பது | = | ________ |

9. விடுபட்ட எண் பெயரை நிரப்புக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 75 | = | எழுபத்து ________ | 79 | = | ________ |
| 82 | = | எண்பத்து ________ | 88 | = | ________ எட்டு |
| 93 | = | ________ மூன்று | 41 | = | ________ ஒன்று |
| 60 | = | ________ | 35 | = | ________ ஐந்து |



Non Formal Book_1-14.indd 41 10-11-2020 13:13:36

பாடம் 8

# ஊரும் ஏரும்



| | | | |
|---|---|---|---|
| ஊ | ஊர் | ஊட்டி | ஊத்தப்பம் |
| ஏ | ஏடு | ஏர் | ஏரி |

நாட்டில் ஏரிகள் ஏராளம்

ஏட்டுக்கல்வி உயர்வு தரும்

ஊராட்சி நமது ஊன்றுகோல்

ஊக்கம் கை கொடுக்கும்

ஏலக்காய் மணம் மிக்கது

ஊட்டி ஏரியில் படகுப்போட்டி



Non Formal Book_1-14.indd 42 10-11-2020 13:13:37

# கணக்கு

**இட மதிப்பு (ஒன்றுகள், பத்துகள், நூறுகள்)**

45 என்ற ஈரிலக்க எண்ணைக் கருதுவோம். இதனை உருவாக்க 40 மற்றும் 5 என்ற இரண்டு எண் அட்டைகள் தேவை.

54 என்ற ஈரிலக்க எண்ணைக் கருதுவோம். இதனை உருவாக்க (45இல் உள்ள இலக்கம் மாறுபட்டுள்ளது). 50 மற்றும் 4 என்ற அட்டைகளைத் தேர்ந்தெடுப்போம்.




4 பத்துகள் + 5 ஒன்றுகள் = 40 + 5 = 45

5 பத்துகள் + 4 ஒன்றுகள் = 50 + 4 = 54

## பயிற்சிகள்

V1K9X5

**1. சரியான எழுத்தை அடையாளம் காண்க.**

| | | | |
|---|---|---|---|
| ஊ | ஊட்டி | ஊக்கம் | ஊத்தப்பம் |
| ஏ | ஏணி | ஏற்றம் | ஏலக்காய் |

**2. பின்வரும் எழுத்துகளைச் சரியாக ஒலித்துக்காட்டுக.**

ஊ ஏ

**3. படித்துப் பழகுக.**

1. வண்டியில் ஊர்வலம் போகலாம்
2. கற்போர் வாழ்வில் ஏற்றம் உண்டு
3. ஏலக்காய் மணம் மிக்கது
4. ஊருணி நிறைந்தால் ஊருக்கே மகிழ்ச்சி

**4. பின்வரும் சொற்களில் விடுபட்ட ஒரே எழுத்து அனைத்திற்கும் பொருந்தும். அந்த எழுத்தைக் கண்டுபிடித்து எழுதுக.**

1. ☐ முமலை ☐ ணி ☐ ரி ☐ ழு
2. ☐ ரார் ☐ ட்டி ☐ ர்வலம் ☐ ராட்சி



Non Formal Book_1-14.indd 43 10-11-2020 13:13:37

5. எழுதிப் பழகுக.


ஏட்டுக்கல்வி ஏற்றம் தரும்

6. நிரப்புக.

23 = ________ பத்துகள் ________ ஒன்றுகள்

54 = ________ பத்துகள் ________ ஒன்றுகள்

**சிந்திக்க**






Non Formal Book_1-14.indd 44 10-11-2020 13:13:37

பாடம் 9

# ஓதுவது ஒழியேல்



| | | | |
|---|---|---|---|
| ஒ | ஒன்று | ஒட்டு | ஒட்டகம் |
| ஓ | ஓடு | ஓடம் | ஓவியம் |
| தே□ | தேதி | தேன் | தேவை |

ஒயிலாட்டம் ஆடுவோம்

பேருந்து நிறுத்தம்

புள்ளிமான் துள்ளி ஓடியது

ஒற்றுமை பேணுவோம்

பேரிக்காய் பச்சை நிறம்

ஒற்றுமையே வலிமை



Non Formal Book_1-14.indd 45 10-11-2020 13:13:38

## கல்வி தொடர்பான பாடல்



X9L1R6

அறிவு என்னும் பாடத்தையே
அழகாகக் கற்றுக்கொள்வோம்
தன்னானே னானே

ஒற்றுமையாய் வாழ்ந்திடுவோம்
ஒருமைப்பாட்டைக் காத்திடுவோம்
தில்லாலே லேலோ

சாலையிலே நடக்கும்போது
சாலைவிதியைக் கடைப்பிடிப்போம்
தன்னானே னானே

வாழ்க்கை என்னும் பயணத்தையே
வளத்தோடு கடந்திடுவோம்
தில்லாலே லேலோ

கடமையையும் உரிமையையும்
கண்ணாகப் போற்றிடுவோம்
தன்னானே னானே

பழமையையும் புதுமையையும்
பண்புடனே ஏற்றிடுவோம்
தில்லாலே லேலோ

அன்போடு அனைவரையும்
அரவணைத்தே மகிழ்ந்திடுவோம்
தன்னானே னானே

பெரியோரை மதித்திடுவோம்
பெருமையுடன் வாழ்ந்திடுவோம்
தில்லாலே லேலோ

பெண்கல்வி போற்றிடுவோம்
பேரும்புகழும் பெற்றிடுவோம்
தன்னானே னானே


உண்மையையே பேசிடுவோம்
உறவுகளைப் பேணிடுவோம்
தில்லாலே லேலோ



Non Formal Book_1-14.indd 46 10-11-2020 13:13:39

# கணக்கு

**அதிகம் – குறைவு**

| 7 தக்காளி | 9 தக்காளி |
|---|---|
|  |  |
| குறைவு<br>சிறிய எண் 7 | அதிகம்<br>பெரிய எண் 9 |

**ஓரிலக்கக் கூட்டல் மற்றும் கழித்தல்**




3 + 4 = 7

**கூட்டுக**


| | | | | |
|---|---|---|---|---|
| 7 | 4 | 2 | 6 | 5 |
| + 4 | + 9 | + 8 | + 1 | + 5 |
| ____ | ____ | ____ | ____ | ____ |

D5D3M1

**கழித்தல்**



5



5 – ☐ = 1

**கழிக்க**

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | 6 | 8 | 5 | 4 |
| – 4 | – 3 | – 2 | – 5 | – 0 |
| ____ | ____ | ____ | ____ | ____ |

H8V6Y1



Non Formal Book_1-14.indd 47 10-11-2020 13:13:40

## பயிற்சிகள்

1. சரியான எழுத்தை அடையாளம் காண்க.

| | | | |
|---|---|---|---|
| ஒ | ஒருவர் | ஒற்றுமை | ஒட்டகம் |
| ஓ | ஓலை | ஓடம் | ஓதல் |
| ே□ | சேவல் | வேலை | தேடு |

2. படித்துப் பழகுவோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒ | ஓ | வே | சே | தே | பே |

3. பின்வரும் படத்துக்குரிய சரியான சொல்லை எழுதுக.

| | | |
|---|---|---|
|  |  |  |
| | | |

| | | |
|---|---|---|
|  |  | 1 |
| | | |

4. ஒ – ஓ வேறுபாடு அறிந்து படித்துக்காட்டுக.

ஒட்டு ——— ஓட்டு

ஒடி ——— ஓடி

1. கிழிந்த தாளைப் பசையால் ஒட்டு
2. ஈயைத் தூர ஓட்டு
3. ஓட்டுநர் பேருந்தை இயக்கினார்
4. விறகை நன்றாய் ஒடி
5. ஓட்டப் போட்டியில் ஓடிப் பரிசு வாங்கினான்
6. ஓதுவது ஒழியேல்
7. ஒப்புரவு ஒழுகு

5. எழுதிப் பழகுக.

ஒற்றுமையே வலிமை

6. கூட்டுக

| | | | |
|---|---|---|---|
| 4 | 2 | 3 | 5 |
| + 4 | + 3 | + 7 | + 0 |
| ____ | ____ | ____ | ____ |

2 + 4 = ☐ ●● + ●●●●

3 + 5 = ☐ ●●● + ●●●●●

7. கழிக்க

| | | | |
|---|---|---|---|
| 7 | 6 | 5 | 4 |
| − 4 | − 3 | − 5 | − 0 |
| ____ | ____ | ____ | ____ |

9 − 2 = ☐ ●●●●●●●●●

8 − 4 = ☐ ●●●●●●●●

8. செயல்பாடு

(இருவர்) 2 பகடைகளை உருட்டச் செய்து அதில் வரும் எண்களைக் கூட்டிப் பதியச் செய்தல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கண்ணன் | 4 | | | | |
| அறிவழகன் | | | | | |
| கூடுதல் | | | | | |





Non Formal Book_1-14.indd 49 10-11-2020 13:13:41

பாடம் 10

# என் உள்ளங்கையில் விஞ்ஞானம்





| | | | |
|---|---|---|---|
| உ | உலகம் | உள்ளம் | உருவம் |
| எ | எறும்பு | எழில் | எடை |
| ங | சங்கு | பங்கு | மங்கை |
| ஞ | ஞாயிறு | ஞாலம் | ஞானம் |

தஞ்சைப் பெரிய கோவில்

பொங்கல் விழா

கலங்கரை விளக்கம்

சிங்கம் முழங்கும்

மங்கை தங்கையுடன் நுங்கு சாப்பிட்டாள்

சாலையில் அங்குமிங்கும் ஓடாதே

ஒட்டகச்சிவிங்கி உயரமானது

இஞ்சிச் சாறு நெஞ்சுச் சளி கரைக்கும்



Non Formal Book_1-14.indd 50 10-11-2020 13:13:42

# கணக்கு

### ஈரிலக்கக் கூட்டல்

| | ப | ஒ |
|---|---|---|
| | | |
| | 3 | 5 |
| + | 4 | 2 |
| | 7 | 7 |

| | ப | ஒ |
|---|---|---|
| | 1 | |
| | 2 | 8 |
| + | 5 | 7 |
| | 8 | 5 |

### வாழ்க்கைக் கணக்கு

முதல்நாள் மாலா 14 கூடைகள் பின்னினாள். இரண்டாம் நாள் 16 கூடைகள் பின்னினாள். எனில் (இரண்டு நாளும்) அவள் பின்னிய மொத்தக் கூடைகள் எவ்வளவு?





14 + 16 = ____

### ஈரிலக்கக் கழித்தல்


| | ப | ஒ |
|---|---|---|
| | | |
| | 7 | 5 |
| – | 4 | 3 |
| | 3 | 2 |

| | ப | ஒ |
|---|---|---|
| | 8 | 16 |
| | ~~9~~ | ~~6~~ |
| – | 5 | 7 |
| | 3 | 9 |

### வாழ்க்கைக் கணக்கு

சிறுவன் 22 பூக்களும் சிறுமி 18 பூக்களும் வைத்துள்ளார்கள். இருவரிடமும் உள்ள பூக்களின் எண்ணிக்கையின் வேறுபாடு எத்தனை?

22 – 18 = ____





Non Formal Book_1-14.indd 51 10-11-2020 13:13:44

## பயிற்சிகள்

1. பின்வரும் கதையைப் படித்துக்காட்டி, வினாக்களுக்கு வாய்மொழியாக விடை கூறச் செய்க.

**கந்தனுக்குப் பிள்ளைகள் நால்வர் இருந்தனர். அவர்கள் எப்போதும் தமக்குள் சண்டையிட்டுக்கொண்டே இருப்பார்கள். இதனை நினைத்துக் கந்தன் கவலைப்பட்டான். பிள்ளைகளைத் திருத்த நினைத்தான். நால்வரையும் அழைத்தான். ஆளுக்கொரு குச்சியைக் கொடுத்து, உடைக்கச் சொன்னான். எல்லாரும் எளிதாக உடைத்தனர். இப்போது, கந்தன் அவர்களிடம், பல குச்சிகள் கொண்ட கட்டு ஒன்றைக் கொடுத்து உடைக்கச் சொன்னான். பிள்ளைகள் உடைக்க முடியாமல் திணறினர். இதிலிருந்து நீங்கள் என்ன புரிந்து கொண்டீர்கள் என்று கேட்டான். பிள்ளைகளுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. பல குச்சிகள் கொண்ட கட்டை எளிதாக உடைக்க முடியாததுபோல், நீங்கள் நால்வரும் சண்டையின்றி ஒற்றுமையாக வாழ்ந்தால், மற்றவர்களால் உங்களுக்கு எந்தக் கெடுதலும் நேராது. தனியாக இருந்த குச்சியை எளிதாக உடைக்க முடிந்ததுபோல், நீங்கள் நால்வரும் உங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தால், மற்றவர்கள் உங்களை எளிதாகப் பிரித்துவிடுவர். என்பதையே இஃது உணர்த்துகிறது என்று கந்தன் கூறினான். பிள்ளைகள் இனி, ஒற்றுமையாக வாழ்வோம் என உறுதி கூறினர்.**

1. கந்தனுக்கு எத்தனை பிள்ளைகள் இருந்தனர்?
2. கந்தன் கவலைப்படக் காரணம் என்ன?
3. பிள்ளைகளைத் திருத்த கந்தன் பயன்படுத்திய பொருள் எது?
4. பல குச்சிகள் கொண்ட கட்டைப் பிள்ளைகள் எளிதில் உடைத்தார்களா? இல்லையெனில் என்ன காரணம்?
5. ஒற்றுமையை வலியுறுத்தும் இதுபோன்ற வேறொரு கதையைக் கூறுக.

### 2. உரிய எழுத்தை வட்டமிடுக

| | | | |
|---|---|---|---|
| 1. உ | உள்ளம் | உதவு | உரிமை |
| 2. எ | எள் | எலி | எருது |
| 3. ங் | சங்கு | தங்கு | நுங்கு |
| 4. ஞா | ஞாயிறு | ஞாலம் | ஞானம் |

### 3. பின்வரும் எழுத்துகளை ஒலித்துக்காட்டுக.

| | | | |
|---|---|---|---|
| உ | எ | ங் | ஞா |

### 4. விடுகதையைப் படித்துச் சரியான விடையைப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. காற்றில் பறக்கும் | – | உணவு |
| 2. உழைத்தால் கிடைக்கும் | – | ஞாயிறு |
| 3. இரவில் தேவை | – | சிங்கம் |
| 4. காட்டின் அரசன் | – | உறக்கம் |
| 5. வாரத்தின் முதல் நாள் | – | ஊதியம் |
| 6. உயிர் வாழத் தேவை | – | பஞ்சு |

5. படம் பார்த்துப் பெயர் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| | | | |
|  |  |  |  |
| | | | |

6. எழுதிப் பழகுக.

உலகம் மதிக்க வாழ்

7. கூட்டி விடை காண்க.

கீழே உள்ள எண்களைக் கூட்டுக.

| ப | ஒ |
|---|---|
| | |
| 5 | 4 |
| | 7 |
| | |

+

| ப | ஒ |
|---|---|
| | |
| 6 | 2 |
| | 8 |
| | |

+

| ப | ஒ |
|---|---|
| | |
| 3 | 7 |
| | 7 |
| | |

+

| ப | ஒ |
|---|---|
| | |
| 4 | 9 |
| 5 | 2 |
| | 5 |
| | |



Non Formal Book_1-14.indd 53 10-11-2020 13:13:45

### வாழ்க்கைக் கணக்குகள்

1. இரவி 15 வாழைப்பழங்களும் 10 மாம்பழங்களும் வாங்கினார்? அவர் வாங்கிய மொத்தப்பழங்கள் எத்தனை?
2. சாந்தா 28 கீரைக்கட்டுகளும் 17 வாழைத்தண்டுகளும் விற்றார். அவர் விற்ற மொத்தப்பொருள்கள் எத்தனை?
3. ஒரு வரிசையில் 35 ஆண்களும் மற்றொரு வரிசையில் 49 பெண்களும் நின்றனர். எனில், இரண்டு வரிசைகளிலும் மொத்தம் எத்தனைபேர் உள்ளனர்?
4. அலமேலு தன் தோட்டத்தில் 18 தென்னங்கன்றுகளும் 20 கொய்யாமரக்கன்றுகளும் நட்டார் எனில் அவர் நட்ட மொத்த மரக்கன்றுகள் எத்தனை?
5. இராம் ஒரு போட்டியில் 68 புள்ளிகளும் மற்றொரு போட்டியில் 39 புள்ளிகளும் எடுத்தார். அவர் எடுத்த மொத்தப்புள்ளிகள் எத்தனை?

### 8. கழித்து விடை காண்க.

கீழே உள்ள ஈரிலக்க எண்களைக் கழிக்க.

| | ப | ஒ |
|---|---|---|
| | | |
| | 2 | 2 |
| - | 1 | 8 |
| | | |

| | ப | ஒ |
|---|---|---|
| | | |
| | 3 | 7 |
| - | 2 | 9 |
| | | |

| | ப | ஒ |
|---|---|---|
| | | |
| | 4 | 0 |
| - | 3 | 5 |
| | | |

| | ப | ஒ |
|---|---|---|
| | | |
| | 9 | 2 |
| - | 8 | 0 |
| | | |

| | ப | ஒ |
|---|---|---|
| | | |
| | 7 | 0 |
| - | 2 | 7 |
| | | |

| | ப | ஒ |
|---|---|---|
| | | |
| | 8 | 4 |
| - | 7 | 8 |
| | | |

| | ப | ஒ |
|---|---|---|
| | | |
| | 6 | 3 |
| - | 5 | 6 |
| | | |

| | ப | ஒ |
|---|---|---|
| | | |
| | 8 | 0 |
| - | 5 | 2 |
| | | |

32 - 28 = ____  94 - 59 = ____  72 - 46 = ____

46 - 17 = ____  50 - 36 = ____  85 - 67 = ____

### வாழ்க்கைக் கணக்குகள்

1. அழகன் 45 பழங்களில் 28 ஐ விற்றுவிட்டால் மீதம் உள்ள பழங்கள் எத்தனை?
2. ஒரு தோப்பில் 96 தென்னைமரங்களும் 45 மாமரங்களும் உள்ளன எந்தவகைமரம் அதிகம் உள்ளது? எவ்வளவு அதிகம்?



Non Formal Book_1-14.indd 54 10-11-2020 13:13:45

## மதிப்பீடு – 2

**1. பின்வரும் எழுத்துகளைப் படித்துக்காட்டுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| இ | கோ | ஆ | மை | ஐ |
| ஊ | ஒ | ஓ | ஞ | வே |

**2. சரியான எழுத்தை நிரப்பிப் படிக்க.**

| | | |
|---|---|---|
| ஐ வர் | ☐ ந்து | ☐ யா |
| ஈ சல் | ☐ ரம் | ☐ ட்டி |
| அ ப்பா | ☐ ம்மா | ☐ த்தை |

**3. விடுகதையைப் படித்துச் சரியான விடையைப் பொருத்துக.**

1. காற்றில் பறக்கும் – உணவு
2. உழைத்தால் கிடைக்கும் – ஞாயிறு
3. இரவில் தேவை – சிங்கம்
4. காட்டின் அரசன் – உறக்கம்
5. வாரத்தின் முதல் நாள் – ஊதியம்
6. உயிர் வாழத் தேவை – பஞ்சு

4. படம் பார்த்துப் பெயர் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| | | | |
|  |  |  |  |
| | | | |

5. விடை காண்க.

| | ப | ஒ |
|---|---|---|
| | | |
| | 5 | 4 |
| + | | 7 |
| | | |

| | ப | ஒ |
|---|---|---|
| | | |
| | 6 | 2 |
| + | 3 | 8 |
| | | |

| | ப | ஒ |
|---|---|---|
| | | |
| | 5 | 7 |
| – | | 4 |
| | | |

| | ப | ஒ |
|---|---|---|
| | | |
| | 7 | 3 |
| – | 2 | 6 |
| | | |

6. பின்வரும் கூற்றுகளைப் படித்து, விடை காண்க.

1. இரவி 15 வாழைப்பழங்களும் 10 மாம்பழங்களும் வாங்கினார்? அவர் வாங்கிய மொத்தப்பழங்கள் எத்தனை?

2. சாந்தா 28 கீரைக்கட்டுகளும் 17 வாழைத்தண்டுகளும் விற்றார். அவர் விற்ற மொத்தப்பொருள்கள் எத்தனை?

3. அழகன் 45 பழங்களில் 28 ஐ விற்றுவிட்டால் மீதம் உள்ள பழங்கள் எத்தனை?



Non Formal Book_1-14.indd 56 10-11-2020 13:13:45

பாடம் 11

# ஔவையும் நெல்லிக்கனியும்



| | | | |
|---|---|---|---|
| ஔ | ஔவை | ஔவியம் | ஔடதம் |
| ெ□ | வெற்றி | பெட்டி | நெல்லி |
| ெ□ள | கௌரவம் | வௌவால் | மௌனம் |

சின்னக் கண்ணன் வெண்ணெய் தின்றான்.

வெல்லம் இரும்புச்சத்து மிக்கது.

நல்லெண்ணெய் உடல்சூட்டைத் தணிக்கும்.


வானில் வெண்ணிலா தோன்றியது.

பெருமழை பெய்ததால் செடிகள் சாய்ந்தன.

# கணக்கு

P2H7F9

## பெருக்கல்



2 + 2 + 2 + 2 + 2 =10        5 x 2 =10

**X பெருக்கல் குறி**

தொடர்கூட்டலின்சுருக்கமேபெருக்கலாகும்.

3 + 3 + 3 + 3 = 4 x 3  =12

5 + 5 + 5 + 5 + 5 + 5  = 6 முறை 5 கள்

= 6 x 5

= 30

## வகுத்தல்

கமலா, வினயன், அன்பு, விஜயன் நால்வரும்  பாட்டி வீட்டிற்குச் சென்றனர். பாட்டி 8 லட்டுகளை அவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார். ஒருவருக்கு எத்தனை லட்டுகள் கிடைக்கும்?





ஒருவேளை, பாட்டி 8 லட்டுகளை இரண்டு பேருக்குப் பகிர்ந்து கொடுத்தால் ஒருவருக்கு எத்தனை லட்டு கிடைக்கும்?

**÷ வகுத்தல் குறி**

U9N6F9

| | |
|---|---|
| 12 ÷ 2 = 6 | 12 ÷ 4 = 3 |



Non Formal Book_1-14.indd 58 10-11-2020 13:13:47

## பயிற்சிகள்

**1. எழுத்தை அடையாளம் காண்க.**


A5F8B4

1. ஔ ஔடதம் ஔவை ஔவியம்
2. வெ வெற்றி பெட்டி நெல்லி

**2. பின்வரும் எழுத்துகளை ஒலித்துக்காட்டுக.**

ஔ பௌ வௌ கெ நெ பெ

**3. சொல் உருவாக்குக.**




1. தாயம் 2. ________ 3. ________ 4. ________ 5. ________

**4. விடுகதையைப் படித்து விடை காண்க.**

1. பச்சைப் பெட்டியில் முத்துச் சரம்
   எடுத்துப் பார்க்கலாம் – ஆனால்
   தொடுத்துப் போட முடியாது. – அது என்ன? ------------
2. குட்டி போடும். ஆனால் எட்டப் பறக்கும். – அது என்ன? -----------
3. நிலத்தை நோக்கி வருவான்
   நுரையைக் கக்கிச் செல்வான். – அவன் யார்?
4. ஈரப் புடைவைக்காரி இருபத்தெட்டுச் சுற்றுக்காரி. – அவள் யார்? ----------
5. தாளைக் கொடுத்தால் தின்னும் தண்ணீர் கொடுத்தால் மடியும். – அது என்ன? ----------

(வௌவால், வெண்டைக்காய், கடல் அலை, வெங்காயம், நெருப்பு)



Non Formal Book_1-14.indd 59 10-11-2020 13:13:47

5. எழுதிப் பழகுக.

வெல்லம் இரும்புச்சத்து மிக்கது

6. பெருக்கல் கணக்குகள்

பொருத்துக.

| | |
|---|---|
| 7 + 7 + 7 + 7 + 7 | 4 x 9 |
| 2 + 2 + 2 | 5 x 7 |
| 4 + 4 + 4 + 4 + 4 | 3 x 2 |
| 9 + 9 + 9 + 9 | 5 x 4 |

7. கூட்டல் விவரங்களைப் பெருக்கலாக மாற்றுக.

| | |
|---|---|
| 6 + 6 + 6 + 6 + 6 | ____ |
| 3 + 3 + 3 + 3 | ____ |
| 1 + 1 + 1 | ____ |
| 5 + 5 | ____ |

8. வகுத்தல் கணக்குகள்

பூர்த்தி செய்க.

10 ÷ 2 = ☐ 10 ÷ 5 = ☐ 5 ÷ 1 = ☐

8 ÷ 4 = ☐ 6 ÷ 3 = ☐

9. விடை காண்க.


1. மணி தன்னிடம் உள்ள 8 மிட்டாய்களைத் தன் நண்பர் இருவருக்குப் பகிர்ந்து கொடுத்தால், ஒவ்வொரு நண்பருக்கும் எத்தனை மிட்டாய்கள் கிடைக்கும்?
2. நிர்மலா 20 மரக்கன்றுகளை ஒரு வீட்டிற்கு 2 வீதம் கொடுத்தால் எத்தனை வீடுகளுக்கு கொடுப்பாள்?



Non Formal Book_1-14.indd 60 10-11-2020 13:13:47

பாடம் 12

# நூலகப் பூக்கள்




| | | | |
|---|---|---|---|
| நூ | நூல் | நூறு | நூல்கண்டு |
| பூ | பூச்சரம் | பூக்கூடை | பூண்டு |

நூலகம் செல்வோம் நூல் பல கற்போம்




பொன்னூஞ்சலில் ஆடினாள் தூளியில் குழந்தை தூங்குகிறது

கிணற்றைத் தூர் வாருவோம் தாமரைப்பூ காலையில் மலரும்



# கணக்கு

**இருபரிமாண வடிவங்களின் பண்புகள், அமைப்புகள்**




சதுரம்

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| இந்த அஞ்சல் வில்லை சதுர வடிவில் உள்ளது. | சதுரம் ஒரு மூடிய வடிவமாகும். இதற்கு நான்கு பக்கங்கள் உண்டு. | இதற்கு நான்கு முனைகள் உண்டு. | நான்கு பக்கங்களும் சமம். |




செவ்வகம்

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| ஐம்பது ரூபாய் நோட்டு செவ்வக வடிவில் உள்ளது. | செவ்வகம் ஒரு மூடிய வடிவமாகும். இதற்கு நான்கு பக்கங்கள் உண்டு. | இதற்கு நான்கு முனைகள் உண்டு. | எதிர்ப்பக்கங்கள் சமம். |

முக்கோணம்

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| சாலைக் குறியீடு முக்கோண வடிவில் உள்ளது. | முக்கோணம் ஒரு மூடிய வடிவமாகும். இதற்கு மூன்று பக்கங்கள் உண்டு. | இதற்கு மூன்று முனைகள் உண்டு. | பக்கங்கள் சமமாகவும், சமம் அற்றும் இருக்கும் |

வட்டம்

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| நாணயம் வட்ட வடிவில் உள்ளது. | வட்டம் மூடிய வளைவாகும். | | |

## பயிற்சிகள்

**1. எழுத்துகளை அடையாளம் காண்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| நூ – | நூல் | நூறு | நூதனம் | நூலகம் |
| பூ – | பூமாலை | பூண்டு | பூவிழி | பூரிப்பு |

**2. பின்வரும் எழுத்துகளை ஒலித்துக்காட்டுக.**

நூ பூ

**3. குறிப்புகளைப் படித்து, மலர்களால் கட்டத்தை நிரப்புக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |

1. பல வண்ணம் என் சொந்தம். பலருக்கும் என்னைப் பிடிக்கும்.
2. கதிரவனைக் கண்டு மலர்வேன். கயத்தின் நடுவில் நிற்பேன்.
3. இரவில் மலர்வேன். மணத்தைப் பரப்புவேன்.
4. மஞ்சள் நிறத்தில் இருப்பேன். மங்களப் பொருளாய் மணப்பேன்
5. என்னிடம் மணம் இல்லை. ஆனால், கண்ணைக் கவரும் நிறம் உண்டு.

**4. பொருத்தமான எழுத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பொன் —— ஞ்சல் ( னூ / ணூ )
2. செம்பருத்திப் —— ( பு / பூ)
3. —— க்கணாங்குருவி ( தூ / து )
4. கல் —— ரி ( லு / லூ )
5. —— லகம் ( நு / நூ )




Non Formal Book_1-14.indd 63 10-11-2020 13:13:55

5. எழுதிப் பழகுக.

நூல் பல கல்

6. வடிவங்களை உற்றுநோக்கிக் கோடிட்ட இடத்தை தொடர்ந்து வரைக.





Non Formal Book_1-14.indd 64 10-11-2020 13:13:55

பாடம்
13

# கூடித் தொழில் செய்வீர்






| | | | |
|---|---|---|---|
| □ூ | கூரை | கூலி | கூடை |
| ெ□ா | கொடு | தொழில் | பொடி |
| □ீ | நீர் | மீதி | தீவு |

கூட்டுக்குடும்பம்

கூழானாலும் குளித்துக் குடி

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

கூடா நட்பு கேடாய் முடியும்

கூட்டுமுயற்சி வெற்றி தரும்

பெரியோரைக் கண்டால் கை கூப்பி வணங்கு



Non Formal Book_1-14.indd 65 10-11-2020 13:13:58

# கணக்கு

## நீட்டல் அளவை

கண்ணனும் கோபியும் சந்தைக்குச் சென்றனர். சந்தையில் வெவ்வேறு கடைகளில் விற்பனையில் உள்ள பொருள்கள் மற்றும் அப்பொருள்களை அளவிடும் முறைகள் பற்றியும் கண்டு களித்தனர். கோபி, தன் தங்கைக்கு 2 முழம் பூவும், 1 கூறு கத்தரிக்காயும், 4 முழம் ரிப்பனையும் வாங்கினான். கண்ணன் தன் தம்பி விஷாலுக்கு 500 கிராம் (½ கிலோகிராம்) இனிப்பும், 1½ மீட்டர் (1.மீட்டர் 50சென்டிமீட்டர்) சட்டைத்துணியும், 250 மில்லிலிட்டர் (¼ லிட்டர்) தேனும் வாங்கினான். வரும் வழியில் இருவரும் 2 உழக்கு வேர்க்கடலையும் வாங்கிக்கொண்டனர்.



| | | |
|---|---|---|
| ஒருகிலோ மீட்டர் | = | 1000 மீட்டர் |
| ஒரு மீட்டர் | = | 100 சென்டிமீட்டர் |
| முக்கால் மீட்டர் | = | 75 சென்டிமீட்டர் |
| அரை மீட்டர் | = | 50 சென்டிமீட்டர் |
| கால் மீட்டர் | = | 25 சென்டிமீட்டிர் |

| | | |
|---|---|---|
| ஒரு மீட்டர் வெள்ளைத்துணியின் விலை | = | ரூ136 |
| முக்கால் மீட்டர் துணியின் விலை | = | ரூ102 |
| அரை மீட்டர் துணியின் விலை | = | ரூ 68 |
| கால் மீட்டர் துணியின் விலை | = | ரூ.34 |

ஒரு மீட்டர் கால்சட்டை துணியின் விலை = ரூ 48

5 மீட்டர் கால்சட்டை துணியின் விலை = ரூ 48 x 5

= ரூ 240



Non Formal Book_1-14.indd 66 10-11-2020 13:13:58

## பயிற்சிகள்

**1. குறியீடுகளை அடையாளம் காண்க.**

| | | | |
|---|---|---|---|
| □ூ | கூடு | கூண்டு | கூரை |
| ெ□ா | பொடி | தொழுவம் | கொல்லை |
| □ீ | நீர் | கீரி | மீதி |

**2. ஒலித்துக்காட்டுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| கூ | தொ | பொ | மொ | கொ |
| தீ | நீ | பீ | மீ | யீ |

**3. எதற்கு எது தேவை? இணைத்துக் காட்டுக.**

1. கிளி – முதலுதவி
2. தீக்காயம் – தொழுவம்
3. கூழ் – மேடை
4. கால்நடை – கேழ்வரகு
5. நாடகம் – கூடு

**4. முதல் எழுத்தை மாற்றி படத்திற்குரிய சொல் உருவாக்குக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | நாடு |  | ___டு |
| 2. | தோட்டம் |  | ___ட்டம் |
| 3. | ஈவு |  | ___வு |
| 4. | தடி |  | ___டி |
| 5. | கோடை |  | ___டை |

5. எழுதிப் பழகுக.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

6. நிரப்புக.

ஒருமீட்டர்துணியின்விலை = ரூ 160 எனில்,

1. அரைமீட்டர்துணியின்விலை = ரூ ____

2. கால்மீட்டர்துணியின்விலை = ரூ ____

3. $1\frac{1}{2}$ மீட்டர்துணியின்விலை = ரூ ____



Non Formal Book_1-14.indd 68 10-11-2020 13:13:59

பாடம் 14

# கிரந்த எழுத்துகள் அறிமுகம்

| | | | |
|---|---|---|---|
| ஜ | ஜான்சி | ஜாதகம் | நேதாஜி |
| ஸ | சர்க்கஸ் | சரஸ்வதி | ஸர்ப்பம் |
| ஷ | காஷ்மீர் | பாதுஷா | இஷ்டம் |
| ஹ | ஹிருதயம் | ஹிமாலயா | ஹாஸ்யம் |
| க்ஷ | சுரக்ஷா | க்ஷணம் | தீக்ஷா |
| ஸ்ரீ | ஸ்ரீநகர் | ஸ்ரீஹரிகோட்டா | ஸ்ரீதர் |

ஷாஜஹான் தாஜ்மஹால் கட்டினார்

எவரெஸ்ட் மிக உயரமான சிகரம்

ஜாங்கிரி இனிப்பாக இருக்கும்

ரோஜாப்பூ எனக்குப் பிடிக்கும்



Non Formal Book_1-14.indd 69 10-11-2020 13:13:59


## நிறுத்தல் அளவை

ஒருகிலோ = 1000 கிராம்

முக்கால்கிலோ = 750 கிராம்

அரைகிலோ = 500 கிராம்

கால்கிலோ = 250 கிலோ







## காய்கறி விலைகள்

கத்தரிக்காய் 1 கிலோ = 15 ரூ

வெண்டைக்காய் 1 கிலோ = 20 ரூ

உருளைக்கிழங்கு 1 கிலோ = 40 ரூ

முள்ளங்கி 1 கிலோ = 30 ரூ



## முகத்தல் அளவை

1 லிட்டர் = 1000 மில்லி லிட்டர் (1000ml)

½ லிட்டர் = 500 மில்லி லிட்டர் (500ml)

¼ லிட்டர் = 250 மில்லி லிட்டர் (250ml)

¾ லிட்டர் = 750 மில்லி லிட்டர் (750ml)

1 லி பாலின் விலை = ₹ 40.00

¼ லி பாலின் விலை = ₹ 10.00

½ லி பாலின் விலை = ₹ 20.00

¾ லி பாலின் விலை = ₹ 30.00



Non Formal Book_1-14.indd 70 10-11-2020 13:14:00

## பயிற்சிகள்

1. எழுத்துகளை அடையாளம் காண்க.

| | | | | |
|---|---|---|---|---|
| ஜா | ஜான்சி | ஜாடி | ஜாங்கிரி | ஜானகி |
| ஸ் | சர்க்கஸ் | பனாரஸ் | சரஸ்வதி | மஸ்லின் |
| ஸ்ரீ | ஸ்ரீநகர் | ஸ்ரீஹரி கோட்டா | ஸ்ரீதர் | ஸ்ரீரங்கம் |
| ஷ | பாதுஷா | ஷீரடி | திருஷ்டி | இலஷ்மி |
| ஹ | ஹரி | ஹர்ஷர் | ஹீப்ரு | ஹீலியம் |

2. படித்துப் பழகுக.

| | | | |
|---|---|---|---|
| ஜ் | ஜ | ஜா | ஜி |
| ஷ் | ஷ | ஷா | ஷி |
| ஸ் | ஸ | ஸா | ஸி |
| ஹ | ஹா | ஹி | ஹீ |

Z2U2H8

3. படம் பார்ப்போம் பெயர் எழுதுவோம்.









Non Formal Book_1-14.indd 71 10-11-2020 13:14:02

### 4. பொருத்தமான எழுத்தினை நிரப்புக

1. --------- நகர் (ஜீ / ஸ்ரீ )

2. கா ----- மீர் (ஷ் / ஸ் )

3. ரோ -------- ( ஹா / ஜா )

4. -------- ஜஹான் ( ஷா / ஸா )

5. சிவா ---------- (ஜி / ஹி )

### 5. நிறுத்தல் அளவைப் பயிற்சிகள்

பிரேமா வாங்கிய பொருள்களின் விலைகள்

வெண்டைக்காய் அரைகிலோ = ----------- ரூ

உருளைக்கிழங்கு 1 1/2 கிலோ = ---------- ரூ

முள்ளங்கி அரைகிலோ = ----------ரூ

### 6. முகத்தல் அளவைப் பயிற்சிகள்

1லிட்டர் தேங்காய் எண்ணெய் விலை=ரூ 260.00

½ லி தேங்காய் எண்ணெய் விலை =ரூ-------

பிரபு ரூ500.00 எடுத்துச் சென்று 1லி தேங்காய் எண்ணெய் வாங்கினால் மீதி இருக்கும் பணம் எவ்வளவு?------------



Non Formal Book_1-14.indd 72 10-11-2020 13:14:02

## மதிப்பீடு – 3

**1. எழுத்துகளை அடையாளம் காண்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| நூ – | நூல் | நூறு | நூதனம் | நூலகம் |
| பூ – | பூமாலை | பூண்டு | பூவிழி | பூரிப்பு |

**2. குறிப்புகளைப் படித்து, மலர்களால் கட்டத்தை நிரப்புக.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |
| 5 | | | | | | |

1. பல வண்ணம் என் சொந்தம். பலருக்கும் என்னைப் பிடிக்கும்.
2. கதிரவனைக் கண்டு மலர்வேன். கயத்தின் நடுவில் நிற்பேன்.
3. இரவில் மலர்வேன். மணத்தைப் பரப்புவேன்.
4. மஞ்சள் நிறத்தில் இருப்பேன். மங்களப் பொருளாய் மணப்பேன்
5. என்னிடம் மணம் இல்லை. ஆனால், கண்ணைக் கவரும் நிறம் உண்டு.

**3. பொருத்தமான எழுத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பொன் – ஞ்சல் ( னூ / ணூ )
2. செம்பருத்திப் –– ( பு / பூ)
3. – க்கணாங்குருவி ( தூ / து )

**4. எதற்கு எது தேவை? இணைத்துக் காட்டுக.**

| | | |
|---|---|---|
| 1. கிளி | – | முதலுதவி |
| 2. தீக்காயம் | – | தொழுவம் |
| 3. கூழ் | – | மேடை |
| 4. கால்நடை | – | கேழ்வரகு |
| 5. நாடகம் | – | கூடு |



Non Formal Book_1-14.indd 73 10-11-2020 13:14:02

**5. விடுகதையைப் படித்து விடை காண்க.**

1. பச்சைப் பெட்டியில் முத்துச் சரம்

   எடுத்துப் பார்க்கலாம். ஆனால்,

   தொடுத்துப் போட முடியாது. – அது என்ன? -----------

2. ஈரப் புடைவைக்காரி இருபத்தெட்டுச் சுற்றுக்காரி. – அவள் யார்? ---------

**6. பொருத்துக.**

| | |
|---|---|
| 7 +7 + 7+ 7 + 7 | 4 x 9 |
| 2 + 2 + 2 | 5 x 7 |
| 4 + 4 + 4 + 4 + 4 | 3 x 2 |
| 9 + 9 + 9 + 9 | 5 x 4 |

**7. பூர்த்தி செய்க.**

10 ÷ 2 ☐ = ☐ 10 ÷ 5 =

**8. விடை காண்க.**

1. மணி தன்னிடம் உள்ள 8 மிட்டாய்களைத் தன் நண்பர் இருவருக்குப் பகிர்ந்து கொடுத்தால், ஒவ்வொரு நண்பருக்கும் எத்தனை மிட்டாய்கள் கிடைக்கும்?
2. நிர்மலா 20 மரக்கன்றுகளை ஒரு வீட்டிற்கு 2 வீதம் கொடுத்தால் எத்தனை வீடுகளுக்கு கொடுப்பாள்?

**9. நிரப்புக.**

1. ஒருமீட்டர் துணியின் விலை = ₹ 160 எனில், அரைமீட்டர்துணியின்விலை = ₹. ....
2. கால்மீட்டர்துணியின்விலை. = ₹......
3. 1 லிட்டர் தேங்காய் எண்ணெய் விலை ₹ 260 எனில், ½ லி தேங்காய் எண்ணெய் விலை ₹. --------.
4. பிரபு ₹300 எடுத்துச் சென்று 1லி. தேங்காய் எண்ணெய் வாங்கினால் மீதி அவனிடம் இருக்கும் பணம் ------------.




Non Formal Book_1-14.indd 74 10-11-2020 13:14:02

பாடம் 15


# சட்டம் அறிவோம்











Non Formal Book_15-19.indd 75 10-11-2020 13:04:57

**(அன்பழகி, ஊருக்கு வந்திருக்கிறாள். அவளுடன் அத்தை உரையாடுகிறார்.)**

அத்தை : வாம்மா, அன்பழகி! எப்படி இருக்கிறாய்? படிப்பை முடித்துவிட்டாயா?

அன்பழகி : நன்றாக இருக்கிறேன், அத்தை. படிப்பை முடிக்க இன்னும் ஓர் ஆண்டு இருக்கிறது.

அத்தை : அப்படியா? என்ன படிப்பு படிக்கிறாய்?

அன்பழகி : சட்டம் படிக்கிறேன், அத்தை.

அத்தை : வக்கீல் படிப்பா? சரி, நமக்கு என்னென்ன சட்டம் ரொம்ப அவசியமானது? சொல்லும்மா.

அன்பழகி : சொல்கிறேன், அத்தை. **இலவசக் கல்வி உரிமைச் சட்டம் 2009** இச்சட்டத்தின்படி, 1 முதல் 8 வகுப்புவரை அனைத்துக் குழந்தைகளும் இலவசமாகப் படிக்கலாம்.

அத்தை : அப்படியா? சரி, வேறு என்ன சட்டம் இருக்கிறது?

அன்பழகி : **போக்சோ சட்டம் 2012** இருக்கிறதே!

அத்தை : **போக்சோவா?** அப்படியென்றால் என்ன?

அன்பழகி : பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம்.

அத்தை : இந்தச் சட்டம் கட்டாயம் இருக்கணும்மா. அப்போதுதான் குழந்தைகளுக்கு எதிராகக் குற்றங்கள் நடப்பது குறையும். சரி, நம்ம பக்கத்து வீட்ல பொன்னியோட அப்பாவுக்கு ஏதோ ஓய்வூதியம் கிடைப்பதிலே பிரச்சனையாம். அது என்ன ஏதுன்னு தெரிந்துகொள்ள ஏதாவது சட்டம் இருக்கிறதா?

அன்பழகி : அதுதான் **தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005** இருக்கிறதே. (Right to Information Act 2005) நாம் கேட்க விரும்பும் கேள்விகளை முறையான விண்ணப்பத்தில் எழுதி, உரிய அலுவலருக்கு அனுப்பினால், 30 நாளில் தகவல் கிடைத்துவிடும். ஓய்வூதியம் பற்றி மட்டும்தான் கேட்க முடியும்னு நினைக்காதீங்க, இந்தச் சட்டத்தின் மூலம் இலவசச் சட்ட உதவி, காப்பீட்டுப் பணம் பெறுவது, சான்றிதழ் தொடர்பானது, கருணை அடிப்படையில் உதவி பெறுவது, காவல்துறை, ஊராட்சி, நகராட்சி, மின்வாரியம், வாரிசுரிமை, சொத்துரிமை போன்ற எத்துறை சார்ந்த முறையீடாக இருந்தாலும் தகவல் பெறலாம்.

அத்தை : பரவாயில்லையே, இவ்வளவும் இந்தச் சட்டத்தின் மூலம் அறிந்துகொள்ள முடியுமா? அதுசரி, அன்பழகி நான் போனவாரம் ஒரு மிக்ஸி வாங்கினேன். இப்ப அது சரியா வேலை செய்ய மாட்டேங்குது, கடைக்காரர்கிட்ட கொண்டுபோனா, நான் என்ன செய்வது? அந்தக் கம்பெனிக்காரர்கள் கிட்டதான் கேட்கணும்னு சொல்றாங்க. இதுக்கு ஏதாவது வழியிருக்கிறதா?

அன்பழகி : ஏன் இல்லை? அதற்குத்தான் **நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்** இருக்கிறதே. இப்படி ஒரு சட்டம் இருப்பதை யாரும் பயன்படுத்தாமலேயே இருக்கிறார்கள். நாம் கடையில் வாங்கும் எந்த ஒரு பொருளும் தரமாக இல்லையெனில், இந்தச் சட்டத்தின் மூலம், நுகர்வோர் நீதிமன்றத்தை அணுகி, அந்தப் பொருளுக்குரிய இழப்பீட்டைப் பெறலாம்.



Non Formal Book_15-19.indd 76 10-11-2020 13:04:57

அத்தை : உண்மையாகவா?

அன்பழகி : ஆமாம். அத்தை. இன்னுங்கூட நிறைய சட்டங்கள் இருக்கின்றன. அவைபற்றிய விழிப்புணர்வு நமக்கு வேண்டும்.

அத்தை : சரி, அன்பழகி. எனக்கு ஒரு சின்ன நெருடல் இருக்கிறது. அதாவது, குழந்தைகளைப் பாதுகாக்க சட்டம் இருக்கிறது. ஆனால், சின்ன வயசுப் பிள்ளைங்க சிலர் அறியாமையால் தப்பு செய்துவிட்டுக் கஷ்டப்படுறாங்களே, அவர்களைத் திருத்துவதற்கு ஏதாவது சட்டம் இருக்கிறதா?

அன்பழகி : இருக்கிறது அத்தை. அதற்கு **இளைஞர் நீதிச் சட்டம்** என்று பெயர். இதன்மூலம், அவர்களை நெறிப்படுத்தலாம்.

அத்தை : சிலர், பொது இடத்தில் பெண்களைக் கேலி செய்வது, பின்தொடர்ந்து வந்து பாட்டு பாடுவது, தெரியாத மாதிரி வந்து உரசிக்கொண்டு செல்வது. இந்த மாதிரியெல்லாம் செய்றாங்களே, பொறுக்க முடியலே, இவர்களைத் தண்டிப்பதற்கு சட்டம் இருக்கிறதா?

அன்பழகி : இருக்கிறது அத்தை. **பாலியல் தொல்லைகள் தடுப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டம் 2013**இன் படி, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாம்.

அத்தை : அப்படியா! அதுசரி, அன்பழகி. சிலபேரு அதிகப் பேராசையால நிறைய நகை, பணம் கேட்டுத் திருமணத்திலே தொல்லை செய்றாங்களே, அதைத்தடுக்க ஏதாவது சட்டம் இருக்கிறதா?

அன்பழகி : ஓ! இருக்கிறதே. அதற்கு **வரதட்சணை தடுப்புச் சட்டம்** என்று பெயர். சட்டப்படி ஒருவர் வரதட்சணை வாங்குவதும் கொடுப்பதும் குற்றம்.

அத்தை : சரி, அன்பழகி. எனக்குப் பதினாறு வயசிலேயே கலியாணம் ஆகிவிட்டது. இப்பக்கூட பெற்றோர் சிலர், தம் பெண்களுக்குச் சின்ன வயசிலேயே கலியாணம் செய்றாங்களே, அதைத் தடுக்க முடியாதா?

அன்பழகி : ஏன் முடியாது? அதற்குத்தான், **குழந்தைத் திருமணத் தடுப்புச் சட்டம்** இருக்கிறதே. இந்தச் சட்டத்தின் மூலம் தவறு செய்பவர்கள் பெற்றோர்களாகவே இருந்தாலும் தண்டனைக்கு உரியவர்கள்தாம்.

அத்தை : அடடா! நீ சட்டப் படிப்பு படிப்பதால் எவ்வளவு நன்மை பார்த்தாயா? ஒவ்வொரு சட்டத்தையும் பற்றியும் தெளிவாக எடுத்துச் சொல்கிறாய். உன்மூலமாக நான் நிறைய தெரிந்துகொண்டேன். மற்றவர்களுக்கும் இவற்றைப் பற்றிக் கூறி விழிப்புணர்வு ஊட்டப்போகிறேன்.

அன்பழகி : மிக்க மகிழ்ச்சி, அத்தை. வேறு பல சட்டங்களைப் பற்றி, நான் பிறகு சொல்கிறேன். இப்போது நான் வீட்டுக்குப் போகட்டுமா?

அத்தை : நல்லது. போய் வா, அன்பழகி.



Non Formal Book_15-19.indd 77 10-11-2020 13:04:57

# கணக்கு

## காலம் – கடிகாரம் பார்த்து நேரம் கூறுதல்

கமலி : வணக்கம், ராகுல்.

ராகுல் : வணக்கம். கமலி .காலை உணவை எப்பொழுது சாப்பிட்டாய்?

கமலி : காலை 8.00 மணிக்குச் சாப்பிட்டேன் ராகுல்.

ராகுல் : நீ எவ்வாறு நேரத்தைக் கணக்கிட்டாய்?

கமலி : நான் சாப்பிடும் பொழுது கடிகாரம் ஒலித்து நேரத்தையும் வெளிப்படுத்தியது.

ராகுல் : உனக்குக் கடிகாரம் பார்த்து நேரம் சொல்லத் தெரியுமா?

கமலி : எனக்குத் தெரியாது, ராகுல்.

ராகுல் : கமலி, உனக்கு நான் இன்று கடிகாரம் பார்த்து நேரத்தைக் கணக்கிடச் சொல்லித் தருகிறேன்.

**பெரிய முள், நிமிட முள் ஆகும். சிறிய முள், மணி முள் ஆகும்.**

**சிறியமுள் 3 இல் உள்ளது .பெரியமுள் 12 இல் உள்ளது. எனவே, நேரம் 3மணி ஆகும்.**




**கடிகாரத்தில் 1 முதல் 12 வரை எண்கள் குறிக்கப்பட்டிருக்கும்.**



Non Formal Book_15-19.indd 78 10-11-2020 13:04:57

## பயிற்சிகள்

**1. கீழ்க்காணும் சட்டங்களின் பெயர்களைப் படித்துக்காட்டுக.**

1. இலவசக் கல்வி உரிமைச் சட்டம்
2. போக்சோ சட்டம்
3. தகவல் அறியும் உரிமைச் சட்டம்
4. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
5. இளஞ்சிறார் சீர்திருத்தச் சட்டம்
6. பாலியல் தொல்லைகள் தடுப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டம்
7. வரதட்சணை தடுப்புச் சட்டம்
8. குழந்தைத் திருமணத் தடுப்புச் சட்டம்

**2. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. இலவசக் கல்வி உரிமைச் சட்டம் | – | அ) | 2013 |
| 2. போக்சோ சட்டம் | – | ஆ) | 2005 |
| 3. தகவல் அறியும் உரிமைச் சட்டம் | – | இ) | 2012 |
| 4. பாலியல் தொல்லை மற்றும் தடுப்புச் சட்டம் | – | ஈ) | 2009 |

**3. பின்வரும் தொடர்களைப் படித்துச் சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.**

1. வரதட்சணை வாங்குவதும் கொடுப்பதும் குற்றமாகா. ☐
2. 1 முதல் 8 வகுப்புவரை இலவசமாகக் கல்வி பெறலாம். ☐
3. குழந்தைகளுக்கு எதிராகக் குற்றங்கள் நடப்பதைத் தடுப்பது, போக்சோ சட்டம். ☐
4. குழந்தைத் திருமணத்தைத் தடைசெய்ய சட்டம் இல்லை. ☐
5. நுகர்வோரின் நலம் காப்பது, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம். ☐



Non Formal Book_15-19.indd 79 10-11-2020 13:04:57

**4. பின்வரும் நிகழ்வைப் படித்து, வினாக்களுக்கு விடை தருக.**

கண்மணி, உணவு உண்டாள். சிறிதுநேரத்திற்குப் பின் வயிறு வலிப்பதாக உணர்ந்தாள். அதனால், அருகிலுள்ள மருத்துவமனைக்குச் சென்றாள். மருத்துவர், குறிப்பிட்ட ஒரு மருந்தை, மருந்துச்சீட்டில் எழுதித் தந்தார். கண்மணி, மருந்தகத்திற்குச் சென்றாள். மருந்துக் கடைக்காரர், அந்த மருந்து இல்லாததால், வேறு ஒரு மருந்தை மாற்றிக் கொடுத்தார். இதை அறியாத கண்மணி, அந்த மருந்தைச் சாப்பிட்டாள். வயிற்று வலி மேலும் கடுமையானது. வலி தாங்கமுடியாமல், மீண்டும் அதே மருத்துவரிடம் சென்றாள். அவள் சாப்பிட்ட மருந்தை வாங்கிப் பார்த்தார் மருத்துவர். அது, அவர் எழுதித் தந்த மருந்து இல்லை. அதனால், மருந்துக் கடைக்காரர் செய்த தவற்றைக் கண்மணியிடம் மருத்துவர் கூறினார்.


**வினாக்கள்**

1. கண்மணிக்கு என்ன நேர்ந்தது?
2. கண்மணி யாரைப் பார்க்கச் சென்றாள்?
3. கண்மணிக்கு வயிற்றுவலி ஏன் கடுமையானது?
4. தனக்கு ஏற்பட்ட நிலைமைக்காகக் கண்மணி யார்மீது வழக்குத் தொடுக்கலாம்?
5. கண்மணியின் குறை தீர்ப்பதற்கு எந்தச் சட்டம் உதவும்?

**5. மணிமுள் இருக்கும் இடத்தைப் பார்த்து நேரத்தைக் கீழே உள்ள கட்டங்களில் எழுதுக.**



**6. கொடுக்கப்பட்டுள்ள நேரத்தைக் காட்ட கடிகாரங்களில் முட்களை வரைக.**



| 11 மணி | 1 மணி | 5 மணி | 7 மணி | 6 மணி |
| --- | --- | --- | --- | --- |



Non Formal Book_15-19.indd 80 10-11-2020 13:04:58

பாடம் 16

# வாக்களிப்பது நம் கடமை

"மஞ்சு... மஞ்சு...".

"என்ன லதா?" வெளியே வந்தாள் மஞ்சு.

"சீக்கிரம் வா, மஞ்சு. காலையிலேயே போனால் கூட்டம் இல்லாமல் இருக்கும். ஓட்டுப் போட்டுவிட்டு வரலாமா?."

"இரு, லதா. இங்கே பார்!" என்று தன் இடக்கை ஆள்காட்டி விரலைக் காட்டினாள் மஞ்சு. வாக்கு அளித்ததற்கு அடையாளமாக, அவ்விரலில் மை வைக்கப்பட்டு இருந்தது.

"அட, என்ன மஞ்சு. நான் வருவதற்குள் நீ தனியாகப் போய்விட்டாயே?"

"ஆமாம் லதா. எனக்குத்தான் கையெழுத்து போடத் தெரியாதே! கைரேகைத்தானே வைக்கத்தெரியும். அதை நினைக்கும்போது, எனக்கு வெட்கமாகவும் வருத்தமாகவும் இருக்கிறது."

"மஞ்சு, முதலில் உன் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றியதற்கு என் வாழ்த்துகள். உன் வருத்தத்தை நீக்குவதற்கு நான் வழி சொல்கிறேன்" என்றபடி திண்ணையில் உட்கார்ந்தார் லதா.

"மஞ்சு, எந்தச் செயலைச் செய்வதற்கும் வயது ஒரு தடையில்லை. சிறுவயதில் நீ படிக்க ஆசைப்பட்டாய். ஆனால், சூழ்நிலையால் படிக்க முடியவில்லை. ஆனால், இப்போது நீ நினைத்தால் நன்கு எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்ளமுடியும், தெரியுமா?"

"அப்படியா லதா? மாலை சமையலுக்குப் பின் எனக்குச் சிறிதுநேரம் கிடைக்கும். அந்த நேரத்தில் கற்றுக் கொள்கிறேன். ஆனால், யார் கற்றுக் கொடுப்பார்கள்.?"

கற்போம் எழுதுவோம் இயக்கம் நம்ம ஊரிலும் நடக்கிறதே! பள்ளிக் கூடத்தில் மணிமொழி அக்கா சொல்லித் தருகிறார்கள். அங்கே சேர்ந்து படிக்கக் கற்றுக் கொள்ளலாம், அல்லவா?"

"சரி, லதா. ஆனால் புத்தகம், நோட்டு இவையெல்லாம் வாங்க வேண்டுமா? "

"எதுவும் தேவையில்லை. இது அரசு ஏற்படுத்திய திட்டம். புத்தகமெல்லாம் இலவசம்தான். நாளையே உன் படிப்பைத் தொடங்கு மஞ்சு."

"நல்லது, லதா. அடுத்தமுறை நான் வாக்குச்சீட்டைப் படித்துப் பார்த்து என் கையெழுத்தைப் போடுவேன்" என்றாள் நம்பிக்கையுடன் மஞ்சு..

**மஞ்சு மட்டுமா? நாமும்கூடப் போடலாம். என்ன நான் சொல்வது சரிதானே!**



Non Formal Book_15-19.indd 81 10-11-2020 13:04:58

# கணக்கு

## 12 மணிநேரம் – 24 மணிநேரம்





காலை (முற்பகல்) 4.00 மணி



மாலை (பிற்பகல்) 4.00 மணி

மேலே உள்ள இரண்டு கடிகாரங்களும் 4 மணியைக் காண்பிக்கின்றன.

**நள்ளிரவு முதல் நண்பகல் வரை 12 மணி நேரம் (00.00 முதல் 11.59 வரை)**

**நண்பகல் முதல் நள்ளிரவு வரை 12 மணி நேரம் 12..00 முதல் 23.59)**




**24 மணி நேர கடிகாரத்தில் நேரம்–மணி, நிமிடம் கணக்கிடல்**

**இங்கு 21 மணி 17 நிமிடம் என்பதை 12 மணிநேர கடிகாரத்தில் எவ்வாறு காண்பது**

**12 மணி நேர கடிகாரத்தில் நேரம் 9.மணி 17 நிமிடம் (பிற்பகல்)**

21 : 17
12 : 00
9 : 17

### பயிற்சிகள்

1. **பின்வரும் தொடர்களைப் படித்துக்காட்டுக.**
   1. வாக்களிப்பது நம் உரிமையும் கடமையும் ஆகும்.
   2. பதினெட்டு வயது நிரம்பியவர்கள் வாக்களிக்கத் தகுதியுடையவர் ஆவர்.
   3. ஓட்டுப் போடுவதற்கு அடையாளமாக விரலில் மை வைக்கப்படும்.



Non Formal Book_15-19.indd 82 10-11-2020 13:04:58

4. எழுத, படிக்கக் கற்றுக் கொள்வதற்கு வயது தடையில்லை.

5. வயது வந்தோர் கல்வித் திட்டம், கல்வி கற்க உதவுகிறது.

**2. சரியான விடையைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. நாம் வாக்களிக்கச் செல்லும் இடம் --------------. (மருத்துவமனை / வாக்குச்சாவடி)
2. வாக்கு போட்டதற்கான அடையாள மையைத் தன் விரலில் வைத்திருந்தவர் ----------- (மஞ்சு / லதா)
3. வாக்குச் சீட்டில் தன் கையெழுத்தைப் போடத் தெரிந்தவர் -----------. ( லதா / மஞ்சு)
4. இளவயதில் படிப்பைத் தவறவிட்டவர்களுக்கு உதவுவது -----------. (பள்ளிக்கல்வி / வயது வந்தோர் கல்வி)

**3. வாக்காளருக்கான பெயர் சேர்ப்புக்கான விண்ணப்பத்தில் தேவைப்படும் தகவல்களை நிரப்புக.**

| | |
|---|---|
| **பெயர்** | ----------------------- |
| **வயது** | ----------------------- |
| **பிறந்த தேதி** | ----------------------- |
| **பாலினம்** | ----------------------- |
| **வீட்டு முகவரி** | ----------------------- |

**4. பாடப்பகுதியைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

1. லதா, மஞ்சுவை எங்குச் செல்ல அழைத்தாள்?
2. மஞ்சு, தன் வாக்கைச் செலுத்திவிட்டாள் என்பதை லதா எப்படித் தெரிந்துகொண்டாள்?
3. மக்கள் கூட்டம் சேர்வதற்கு முன்பே, மஞ்சு வாக்குச் சாவடிக்குச் சென்றதேன்?
4. கற்போம் எழுதுவோம் இயக்கத்தினால் விளையும் நன்மை என்ன?
5. உங்கள் கையெழுத்தை அருகிலுள்ள கட்டத்தில் எழுதுக.


**5. பின்வரும் பயிற்சிகளைச் செய்க.**

1. 20 மணி 20 நிமிடம் என்பதன்  12 மணி நேர கடிகாரத்தில் கூறவும்
2. பிற்பகல் 5 மணி 15 நிமிடம் என்பதை 24 மணி நேரமாக எழுதவும்.

- **நேரத்தை 12 மணி நேரமாக மாற்ற 24 மணி நேரத்திலிருந்து 12 ஐக்கழிக்கவேண்டும்.**
- **நேரத்தை 24 மணி நேரமாக மாற்ற 12 மணி நேரத்துடன் 12 ஐக்கூட்டவேண்டும்.**

பாடம் 17

# நம் தொழில் . . நம் வளர்ச்சி . .





Non Formal Book_15-19.indd 84 10-11-2020 13:04:59

"அடடே, மணியா! வா, வா. எப்போது ஊரிலிருந்து வந்தாய்? நலமா?" என்றான் பிரபு.

நண்பனைப் பார்த்ததும், தன் இருசக்கர வண்டியை நிறுத்திவிட்டு, அருகில் வந்தான் மணி.

"ரொம்ப நல்லாயிருக்கேன் பிரபு. நீ எப்போது ஊருக்கு வந்தாய்? உன் வேலையெல்லாம் எப்படிப் போகிறது?" என்றான் மணி.

"உனக்குத்தான் தெரியுமே, எங்க அப்பாவோட மளிகைக் கடையைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அது சரி, மணி. இது என்ன, புது வண்டியா? நல்லாயிருக்கே." என்றான் பிரபு.

"ஓ! இந்த வண்டியா? வாங்கி 3 மாதம் ஆகிறது நண்பா, என் தொழிலுக்குத் தேவைப்படுகிறது." என்றான் மணி.

"தொழிலா? ஊர்ல பார்த்த வேலை என்னாச்சு மணி?" என்றான் பிரபு.

"குடும்பத்தைப் பிரிந்து வெளியூரில் வாழ்வது சங்கடமாக இருக்கிறது. அம்மாவிற்கும் வயசாகுது. நான்கூடவே இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். என் மனைவியையும் பிள்ளைகளையும் பார்த்துக்கொண்டு கூடுதல் பளுவைச் சுமக்கிறார்கள்." வருத்தத்துடன் சொன்னான் மணி.

"அதுசரி, அப்படியென்றால், உன் குடும்பத்தை நீ நகரத்துக்கே அழைத்துக்கொண்டு போகலாமே?" என்றான் பிரபு.

"இல்லை நண்பா. பசு மாடுகளும், ஆடுகளும் இருக்கின்றன. அவை மட்டுமில்லாமல் தோட்டம் வேறு இருக்கிறது. அம்மா இவற்றையெல்லாம் விட்டுவிட்டு வரமாட்டாங்க. அம்மாவைத் தனியாகக் கிராமத்தில் இருக்கச் சொல்லவும் மனசில்லே"...என்றான் மணி.

"அதனால, ஊர்ல பார்த்துக்கொண்டிருந்த வேலையை விட்டுவிட்டாயா? என்று வியப்புடன் கேட்டான் பிரபு.

"ஆமாம், பசுவின் பாலும் அதன் பயனாகிய தயிரும் எங்கள் தேவையை ஈடுசெய்கின்றன. ஆடு, மாடு இவற்றின் சாணம் தோட்டத்துக் காய்கறிச் செடிகளுக்கு உரமாகிறது." என்ற மணியிடம், "ஆமாம், தெரியுமே" என்றான் பிரபு.

"அதனால் அம்மாவும், மனைவியும் நான் இங்கேயே இருக்க வேண்டும் என்பதை மனத்தில் வைத்துக்கொண்டு, ஒரு யோசனை சொன்னார்கள்." என்று மணி கூற,

"அப்படியா? அது என்ன யோசனை?" என்று கேட்டான் பிரபு.

"நூறுநாள் வேலைத் திட்டத்திற்கு அம்மா சென்றபோது, அங்கு மகளிர் சுயஉதவிக் குழு நடத்தும் பூர்ணிமா அக்காவிடம் கலந்து பேசியிருக்காங்க. மாடுகள் வாங்கிப் பால் வியாபாரம் செய்யப் போவதாகச் சொல்லி இருக்காங்க. அக்கா, சரி. கடனுக்கு நான் உதவுகிறேன்னு சொல்லவும் அம்மா என்னிடம் கலந்து பேசி, பால் வியாபாரம் செய்யலாமா? என யோசனை கூறினார்கள்." என்று கூறினான் மணி.



Non Formal Book_15-19.indd 85 10-11-2020 13:04:59

"அதுசரி, நீ என்ன முடிவு செய்தாய்?" என்று ஆவலுடன் கேட்டான் பிரபு.

"எனக்கும் சரியெனப்பட்டது. ஒரு பால் பண்ணை தொடங்கி, இப்போது நன்றாகப் போகிறது." என்று கூறினான் மணி.

"பரவாயில்லை, நல்ல முடிவுதான். சரி, இப்போது எங்கே கிளம்பிவிட்டாய்?" என்று கேட்ட பிரபுவிடம்,

"நகரத்து உணவகம் ஒன்றில் நாளொன்றுக்கு 25 லிட்டர் பால் வேண்டும் என்று கேட்டதாக அங்கு வேலை செய்யும் மூர்த்தி மாமா சொன்னார். அதற்காக உணவக முதலாளியைச் சந்திக்கச் செல்கிறேன்." என்று மகிழ்ச்சியுடன் கூறினான் மணி.

"நல்லது நண்பா, உண்மையில் உன்னை நினைத்துப் பெருமையாகவும் மகிழ்வாகவும் உணர்கிறேன்" என்றான் பிரபு.

"போய் வருகிறேன் பிரபு" என்றவாறே தன் இரு சக்கர வண்டியை நகர்த்தினான் மணி.

# கணக்கு

## வாரத்தின் நாள்கள்

**வாரத்திற்கு ஏழு நாள்கள்**

ஞாயிறு
திங்கள்
செவ்வாய்
புதன்
வியாழன்
வெள்ளி
சனி

### 2020 நாள் காட்டி

ஜனவரி

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

பிப்ரவரி

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

மார்ச்

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

ஏப்ரல்

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

மே

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

ஜூன்

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

ஜூலை

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

ஆகஸ்ட்

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

செப்டம்பர்

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | | | |

அக்டோபர்

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

நவம்பர்

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

டிசம்பர்

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## ஆங்கில மாதங்கள்

ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன், ஜூலை,

ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர்

N8H1J7

| | |
|---|---|
| 30 நாள் கொண்ட மாதங்கள் | ஏப்ரல், ஜூன், செப்டம்பர், நவம்பர் |
| 31 நாள் கொண்ட மாதங்கள் | ஜனவரி, மார்ச், மே, ஜூலை, ஆகஸ்ட், அக்டோபர், டிசம்பர் |
| 28 அல்லது 29 நாள் கொண்ட மாதம் | பிப்ரவரி |



Non Formal Book_15-19.indd 86 10-11-2020 13:05:02

# பருவங்கள்

## கோடைக்காலம், மழைக்காலம், குளிர்காலம்

| | |
|---|---|
| **கோடைக்காலம்**<br>மார்ச்<br>ஏப்ரல்<br>மே<br>ஜூன் |  |
| **மழைக்காலம்**<br>ஜூலை<br>ஆகஸ்ட்<br>செப்டம்பர்<br>அக்டோபர் |  |
| **குளிர்காலம்**<br>நவம்பர்<br>டிசம்பர்<br>ஜனவரி<br>பிப்ரவரி |  |

## பயிற்சிகள்

**1. பின்வரும் சொற்களைச் சொல்லக் கேட்டு எழுதுக.**

1. வளர்ச்சி
2. வெளியூர்
3. நூறு நாள் வேலை
4. பால் பண்ணை
5. முதலாளி
6. புது வண்டி
7. காய்கறி
8. மகளிர் சுய உதவிக்குழு
9. உணவகம்
10. இருசக்கர வண்டி

**2. பின்வரும் தொடர்களுக்குப் பொருத்தமானதைத் தேர்ந்தெடுக்க.**

1. ஊரிலிருந்து வந்தவர்

அ) மணி ஆ) பிரபு இ) மணியின் அம்மா

2. மணி, தான் பார்த்த வேலையை விட்டுவிட்டு ஊருக்கு வரக் காரணம்

அ) வேலை கடுமையாக இருந்ததால்

ஆ) குடும்பத்தை விட்டுப் பிரிந்திருந்ததால்

இ) ஊதியம் குறைவாக இருந்ததால்

3. மணி தொடங்கிய சுயதொழில்

அ) தையல் தொழில் ஆ) சிற்றுண்டி உணவகம் இ) பால் பண்ணை

4. நகரத்து உணவகத்துக்கு நாளொன்றுக்குத் தேவைப்படும் பாலின் அளவு

அ) 5 லிட்டர் ஆ) 25 லிட்டர் இ) 15 லிட்டர்

5. மகிழ்ச்சி என்பதைக் குறிக்கும் வேறு சொல்

அ) துன்பம் ஆ) வருத்தம் இ) இன்பம்

**3. பின்வரும் கட்டங்களில் விடுபட்ட எழுத்தை நிரப்புக.**

| | | | | |
|---|---|---|---|---|
| | | பு | | |
| | | து | | |
| உ | ண | | க | ம் |
| | | ண் | | |
| | | டி | | |

| | | | | |
|---|---|---|---|---|
| சு | | | | |
| ய | | | | |
| உ | | | | |
| த | | | | |
| | யா | பா | ர | ம் |



Non Formal Book_15-19.indd 88 10-11-2020 13:05:02

4. நாட்காட்டியில் குறிப்பிட்ட நாள்களைக் குறித்தல்



1. காந்தி ஜெயந்தி எந்த நாளில் குறிப்பிடப்பட்டுள்ளது?
2. அக்டோபர் 2019 மாதத்தில் வரும் 3 ஆவது ஞாயிற்றுக்கிழமை எந்தத் தேதியில் உள்ளது?
3. APJ அப்துல்கலாம் பிறந்தநாள் எந்தத் தேதியில் வரும்?
4. அக்டோபர் 2019இல் மொத்தம் எத்தனை நாள்கள் உள்ளன?

தமிழ் மாதங்கள்

1. சித்திரை
2. வைகாசி
3. ஆனி
4. ஆடி
5. ஆவணி
6. புரட்டாசி
7. ஐப்பசி
8. கார்த்திகை
9. மார்கழி
10. தை
11. மாசி
12. பங்குனி



Non Formal Book_15-19.indd 89 10-11-2020 13:05:02

பாடம்
18

# பாலினப் பாகுபாடு



மாலை நேரம். பள்ளியிலிருந்து புவனாவும் பாலாவும் வீட்டிற்கு வந்தனர். பையை வைத்துவிட்டு, கை கால் கழுவினர். இருவரும் அம்மா, அம்மா என்று குரல் கொடுத்தவாறே சமையலறைக்குச் சென்றனர். "அம்மா, பசிக்கிறது" என்றான் பாலா. புவனாவுக்கும் பசிதான் ஆனால், அவள் எதுவும் சொல்லாமல் அம்மாவைப் பார்த்தாள்.

அம்மா, பாலாவின் கன்னத்தை வருடிக்கொண்டே, கொஞ்சநேரம் இருடா கண்ணு, சூடா வடை தருகிறேன்" என்று கூறினாள். அவன் உடனே, "சரிம்மா" என்று கூறியவாறே ஓடிச்சென்று நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்துகொண்டு தொலைக்காட்சி பார்க்கத் தொடங்கினான்.

புவனாவும் ஓட நினைக்கும்போது, அம்மாவின் குரல் அவளை நிறுத்தியது. புவனாக் கண்ணு, வீட்டைக் கொஞ்சம் பெருக்கிவிட்டுத் துணிமணியை மடித்துவைம்மா, அப்பா வந்தால் வீடு குப்பையாக இருக்கிறது என்று திட்டுவார்களே" என்று அம்மா கூற, புவனா, "செய்கிறேன் அம்மா" என்று தலையை ஆட்டினாள்.

"பாலா பசிதாங்க மாட்டானே" என்று எண்ணியவாறே அவனுக்கு ஆறேழு வடையைத் தட்டில் வைத்த அம்மா, ஒரு குவளையில் பால் பாயாசமும் எடுத்துக்கொண்டு வந்தாள். பாலா தொலைக்காட்சித் தொடர் பார்த்துக் கொண்டிருக்க, புவனா தரையைப் பெருக்கிவிட்டுத் துணியை மடித்துக் கொண்டிருந்தாள். அம்மா, புவனாவைப் பார்த்து, "புவனா, பாத்திரத்தைக் கொஞ்சம் அலசி வைச்சுடும்மா, ஆங்.... உனக்குக்கூட இரண்டு வடை வெச்சிருக்கேன், அதை அப்புறமாகச் சாப்பிடுகிறாயா?" என்று கேட்டாள். அப்போது, அங்கு வந்த பக்கத்து வீட்டு உமா, "என்ன கமலா, என்ன விசேஷம்? வடை, பாயாசம்னு ஒரே அமர்க்களமாக இருக்கிறதே?" என்று கேட்டாள்.

"வா, உமா. அதெல்லாம் ஒன்றுமில்லை. பிள்ளை பசிக்கிறது என்றான். அதான், அரைமணி நேரத்திலே செய்து கொடுத்தேன்" என்று கூறிய அம்மா, "புவனா, உமா அக்கா வந்திருக்காங்க பார். அவங்களுக்கு அந்த வடையை எடுத்துக்கொண்டு வாம்மா" என்றார்.

புவனா, எதுவும் பேசாமல், சமையலறையில் இருந்த இரண்டு வடையைத் தட்டில் வைத்து உமாவிடம் கொடுத்தாள். "புவனா, இரு, இரு எங்கே போகிறாய்? வா, நீயும் சாப்பிடு" என்று உமா அழைக்க, புவனா தயங்கி நின்றாள்.

"அட, நீ சாப்பிடு உமா. புவனாவுக்கு வடை பிடிக்காது. ஆமாதானே புவனா" என்று அம்மா, கண்சாடை காட்டினாள். புவனா, ஆமாம் என்று தலையாட்ட, "இல்லேக்கா, புவனாவுக்கு வடை என்றால் மிகவும் பிடிக்கும். அம்மா பொய் சொல்றாங்க" புவனாவுக்கு வைத்திருந்த வடையைத்தான் உங்களுக்குக் கொடுத்திட்டாங்களே, அப்புறம் அவளுக்கு எப்படிக் கிடைக்கும்?" என்றான் பாலா.

"அடடா, அப்படியா சேதி? இங்கே வா புவனா, நாம் சேர்ந்து சாப்பிடலாம்" என்று அழைத்தாள் உமா. "அக்கா, அம்மா எது செய்தாலும் எனக்கு நிறைய கொடுத்திட்டுப் புவனாவுக்குக் கொஞ்சமாக் கொடுப்பாங்க. இப்பவும் அப்படித்தான். அதனாலே, எங்கிட்ட அதிகமாக இருக்கிற வடையை நானே புவனாவுக்குக் கொடுத்திடறேன். அதனாலே, நீங்க சாப்பிடுங்க அக்கா" என்றான் பாலா.

"என்ன கமலா? இரண்டு பேரும் உன் பிள்ளைகள்தானே? ஏன் இந்தப் பாகுபாடு? நான் எப்போது வந்தாலும் புவனாதான் வீட்டுவேலையெல்லாம் செய்கிறாள். பாலாவை எந்த வேலையும் நீ செய்யச் சொல்றதில்லையா? அதுமட்டுமில்லாம, ஆண் பெண் இரண்டு குழந்தைகளுக்குமே ஊட்டச்சத்து தேவை. ஆண் குழந்தைக்கு அதிகமாகவும் பெண் குழந்தைக்குக் குறைவாகவும் கொடுக்கவேண்டும் என்று உனக்கு யார் கூறினார்கள்? நான் வடையை மட்டும் சொல்லவில்லை. சத்தான உணவு எதுவாக இருந்தாலும் இருவருக்குமே சமமாக அளிக்கவேண்டும் என்றுதான் கூறுகிறேன். வீட்டுவேலைகளை இருவருக்குமே பகிர்ந்து அளிக்கவேண்டும், இருவருக்குமே சமமான கல்வி, நல்ல ஆரோக்கியம் எல்லாமே தேவை. சரியா, கமலா?" என்றாள் உமா.

"வீட்டுக்கு வெளியே பெரிய பெரிய வேலையெல்லாம் செய்வதற்கு ஆண்பிள்ளைகளுக்கு நல்ல உடல் வலிமை தேவைன்னு நினைத்துத்தான் மகளைவிட மகனை நல்லாக் கவனிக்கிறேன். நான் நினைக்கிறது தப்பா, உமா" என்றாள் கமலா.

"ஆமாம், கமலா. நீ இன்னும் உலகம் தெரியாமல் இருக்கிறாயே, இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியிலே ஆண், பெண் இருவருமே எல்லா வேலையையும் சமமாகச் செய்கிறார்கள். நீ என்னடாவென்றால், வீட்டுவேலையைப் பெண்தான் செய்யணும், வெளிவேலைய ஆண்தான் செய்யணும்னு நினைத்துக் கொண்டிருக்கிறாய். இந்தப் பாலினப் பாகுபாட்டை முதலில் உன் வீட்டிலிருந்தே களைய வேண்டும். அப்போதுதான் உன்னைப்போல் அறியாமையில் இருக்கும் பெண்களெல்லாம் புரிந்துகொள்வார்கள்." என்று உறுதிபடக் கூறினாள் உமா.

"என்னை மன்னிச்சிடு உமா. இனிமேல், பாலாவும் புவனாவும் என் கண்களைப் போன்றவர்கள். இருவரையும் சமமாக நடத்துவேன், சரியா" என்ற கமலா, " பாலா, வடை சாப்பிட்ட தட்டைக் கழுவி வைத்துவிட்டு, அப்படியே நம்ம உமா அக்காவுக்குத் தண்ணீர் கொண்டு வாப்பா" என்றாள்.

**கமலா வீட்டில் ஆண்பெண் பாலின வேறுபாடு இனி இல்லை, நம்ம வீட்டிலும்தானே!**

# கணக்கு

**தொடர்வண்டி – முன்பதிவு பயண சீட்டு**

1. பெயர்
2. வயது
3. சேருமிடம்
4. பாலினம்: ஆண் / பெண்



## பயிற்சிகள்

**1. கீழ்க்காணும் சொற்களைப் படித்துக்காட்டுக.**

1. மாலை நேரம்
2. சமையலறை
3. தொலைக்காட்சி
4. உடல்நலம்
5. அறியாமை
6. உடல் வலிமை
7. வீட்டுவேலை
8. ஊட்டச்சத்து
9. தொழில்நுட்பம்
10. பாலினப் பாகுபாடு

**2. பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.**

**( சத்தான உணவு, பாலா, வடை, உமா, தொலைக்காட்சி)**

1. பாலா ------------பார்த்துக் கொண்டிருந்தான்.
2. கமலாவின் வீட்டுக்கு வந்தவர் --------------.
3. புவனாவுக்கு ---------என்றால் மிகவும் பிடிக்கும்.
4. ஆண், பெண் இருவருக்குமே---------- தேவை.
5. உமாவுக்குத் தண்ணீர் கொண்டு வந்தவர்------.

**3. பின்வரும் தொடர்களில் எது சரி? எது தவறு?**

1. வீட்டைத் தூய்மை செய்வது, பெண்ணின் வேலை. ☐
2. விமானம் ஓட்ட ஆண்களால் மட்டுமே இயலும். ☐
3. ஆண் குழந்தைக்கு மட்டும்தான் சத்துணவு தேவை. ☐
4. ஒரு பெண்ணால் மருத்துவராக இயலாது. ☐
5. உயர்கல்வி பெற ஆணால் மட்டுமே முடியும். ☐

**4. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

1. கமலாவின் பிள்ளைகள் பெயரை எழுதுக.
2. கமலா, தம் பிள்ளைகளை எப்படி நடத்தினார்?
3. ஆணும் பெண்ணும் சமம் என்பதை உமா எவ்வாறு விளக்கினார்?

**5. பயணம், நேரம் கணக்கிடுதல் பெட்டி, இருக்கை எண், தூரம், நேரம் பயணச்சீட்டு படம்**

<table>
<tr><td>பயணிகள்<br>பெயர்<br>பதிவு எண்<br>446-4391519</td><td>வண்டி எண்<br><br>12694</td><td colspan="2">தேதி<br><br>18.10.19</td><td colspan="2">கி.மீ<br><br>514</td><td colspan="2">பெரியவர்கள்<br><br>2</td><td>சிறியவர்கள்<br><br>0</td><td>பயணச்சீட்டு<br>எண்<br>98473342</td></tr>
<tr><td>வகுப்பு<br>படுக்கை<br>வசதி</td><td colspan="8">முன்பதிவு – இருந்து வரை திருமங்கலம் சென்னை எழும்பூர்</td><td></td></tr>
<tr><td>பெட்டி<br>எஸ் 9</td><td colspan="2">இருக்கைஎண்<br>57<br>60</td><td colspan="2">படுக்கை<br>கீழ்ப்படுக்கை<br>கீழ்ப்படுக்கை</td><td colspan="2">இனம்<br>ஆண்<br>பெண்</td><td>வயது<br>63<br>59</td><td colspan="2">மொத்தம்<br>415</td></tr>
<tr><td>வண்டியின் பெயர்</td><td colspan="2">ஏறுமிடம்</td><td colspan="2">புறப்படும் நாள்</td><td colspan="2">நேரம்</td><td>வருகை நாள்</td><td colspan="2">நேரம்</td></tr>
<tr><td>முத்துநகர் விரைவு வண்டி</td><td colspan="2">திருமங்கலம்</td><td colspan="2">18.10.19</td><td colspan="2">22.16</td><td>19.10.19</td><td colspan="2">07.44</td></tr>
</table>


1. வண்டியின் எண் என்ன?
2. இந்தப் பயணச்சீட்டில் எத்தனை பெரியவர்கள் வண்டியில் பயணிக்கின்றனர்?
3. பயணிக்கும் வண்டியின் பெட்டி (கோச்) எண்ணைக் குறிப்பிடுக.
4. பயணிகள் எங்கிருந்து, எதுவரை பயணம் செய்கின்றனர்?
5. வண்டி வந்துசேரும் நாள் மற்றும் நேரத்தைக் குறிப்பிடுக.
6. வண்டியின் பெயரைக் குறிப்பிடுக?



Non Formal Book_15-19.indd 94 10-11-2020 13:05:04

பாடம் 19

# உடல்நலம் காக்கும் உணவுகள்



"அரசி, யாரோ கதவைத் தட்டறாங்க, யாருன்னு போய்ப் பாரு" என்றார் அரசியின் அம்மா பொன்னம்மாள். "சரிம்மா" என்றவாறே விரைந்து சென்று கதவைத் திறந்தாள் அரசி. அங்கே ஆன்லைனில் பதிவு செய்து கொண்டுவந்த உணவுப் பொட்டலத்தோடு ஒருவர் நின்றிருந்தார். அரசி, அவரிடம் "நான்தான் ஆர்டர் செய்தேன். இதுதான் என் செல்பேசி எண்" என்று அவளுடைய செல்பேசி எண்ணைக் கூறினாள். உணவுப்பொட்டலத்தை அவளிடம் கொடுத்துவிட்டு, அந்த ஆள் சென்றபின், உள்ளே வந்த அரசியைப் பொன்னம்மா முறைத்துப் பார்த்தாள்.

"ஏன், அரசி இப்படிச் செய்யறே? உனக்கு எத்தனைமுறை அறிவுறுத்தினாலும் புரிந்துகொள்ள மாட்டாயா?"

"என்னம்மா, நீங்க, இதைப் போய் பெரிதாக எடுத்துக்கொண்டு.. . . . எப்போது பார்த்தாலும் சொல்லிக்கொண்டே இருக்கிறீர்கள்" என்றாள் அரசி.



Non Formal Book_15-19.indd 95 10-11-2020 13:05:05

அப்போது, பள்ளியிலிருந்து வீட்டுக்கு வந்த முகில், "அம்மா ... என்று ஆசையுடன் அரசியிடம் ஓடி வந்தான். "வாடா கண்ணு, போய் கை காலைக் கழுவிவிட்டு வா, அம்மா உனக்காகச் சுடச்சுட சாப்பிட வைச்சிருக்கேன்" என்று கூறினாள் அரசி.

முகில் வந்ததும் அவனுக்குத் தட்டில் ஃபிரைடு ரைசை வைத்தாள். ஹையா, ஃபிரைடு ரைசா? அம்மான்னா அம்மாதான்" என்று கூறிய முகில், அந்தத் தட்டை எடுத்துக்கொண்டு தன் அறைக்குள் ஓடினான்.

"அரசி, நீ தப்பு மேல தப்பு செய்றே. இந்த மாதிரி உணவெல்லாம் உடலுக்கு நன்மை செய்யாது. தீங்கைத்தான் விளைவிக்கும். "

"என்னம்மா, நீங்க? முகில் கேட்கற அவசரத்துக்கு என்னால உடனே ஏதாவது செஞ்சு தரமுடியுமா? அதான், கடையிலே கொடுத்து வாங்கறேன். அதுமட்டுமில்லாம, நான் திரும்பத் திரும்ப ஒரேமாதிரியான உணவைத்தான் செஞ்சு தரேன்னு முகில்கிட்டயிருந்து ஒரே புலம்பல். இப்பப் பாருங்க, விதவிதமா எவ்வளவு உணவுப் பொருள் கிடைக்குது" என்றாள் அரசி.

"இல்லே, அரசி. இது குழந்தைமீது உன்னோட அக்கறை இல்லாத நிலையைத்தான் காட்டுது. நேரம் ஆனாலும் பரவாயில்லே, குழந்தைகளுக்குச் சத்தான உணவோட உடல்நலத்திற்கு ஆரோக்கியம் தரும் உணவுகளையும் நீயே தயார் செய்து கொடு."

"அம்மா, நீங்க இன்னும் அந்தக் காலமாவே இருக்கிறீங்க"

அரசி, நீ நினைத்த நேரத்தில், நினைத்த உணவுப்பொருளை வாங்க முடியும்னு சொல்கிறாய். அந்த உணவுல எவ்வளவு கலப்படம் இருக்குன்னு தெரியுமா உனக்கு? கண்ணைப் பறிக்கிற வண்ணத்தில இருக்கும் உணவுகளில் எத்தனை நச்சுப்பொருள் கலந்திருக்குன்னு தெரியுமா? நீ வாங்கிக் கொடுக்கின்ற துரிதவகை உணவுகள் அத்தனையும் சத்தில்லாத உணவுப்பொருள்கள். இதனால, உடலுக்கு எந்த நன்மையும் கிடைக்காது."

"அப்படின்னா, பிள்ளைக்கு நான் என்னதான் கொடுப்பது?"

"அரசி, நாம உண்கின்ற உணவு உடல் வளர்ச்சிக்கு மட்டுமின்றி, உடலைப் பாதுகாக்கவும் வேண்டும். அதனால் உடல் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்து மிக்க உணவுகளை உன் பிள்ளைக்குக் கொடு. காய்கறி, பழம், தானிய உணவு பால், கீரை இவையெல்லாம் சேர்த்துக்கொள். நார்ச்சத்து உள்ள உணவு நம் குடலில் கழிவு தங்காமல் பாதுகாக்கும். ஆனால், நீ வாங்கித் தரும் துரித உணவுகள் வயிற்றுக்குக் கெடுதல் ஏற்படுத்தும்; உடலைப் பருமானக்கும்; செரித்தலைத் தாமதமாக்கும்; ஒபிசிட்டி என்கின்ற உடற்பருமன் நோயை உண்டாக்கும்".

"அட, இதில இவ்வளவு விஷயம் இருக்கா? இனிமே நீங்க சொல்றமாதிரி செய்யறேன்மா. ஆனா, முகிலைப் பாருங்க, நேற்றுக்கூட நூடுல்ஸ் ரொம்ப சுவையா இருக்குன்னு சொல்லிச் சீக்கிரமாச் சாப்பிட்டுவிட்டான்" என்றாள் அரசி.

"இங்க பாரு அரசி, எந்த உணவையும் சுவைக்காகச் சாப்பிடக் கூடாது. உடல் ஆரோக்கியத்திற்காகவும் வளர்ச்சிக்காகவும் சாப்பிடணும். நான் சொல்றதை நீ முதல்ல புரிந்துகொண்டால்தானே உன் பையனுக்கு எடுத்துச்சொல்ல முடியும். அதனால, நம் பாரம்பரிய உணவுகளை, நமது தட்பவெப்ப சூழலுக்கு ஏற்ப மண்ணில் விளையும் பொருள்களைப் பயன்படுத்துவதுதான் நமக்கு ஏற்றது" என்று பொன்னம்மாள் கூற, "சரிம்மா, என் பிள்ளையின் ஆரோக்கியம்தான், எனக்கு முக்கியம்" என்று கூறிப் புன்னகைத்தாள் அரசி.



Non Formal Book_15-19.indd 96 10-11-2020 13:05:05

"ஆரோக்கியத்துக்குச் சத்தான உணவுகள் மட்டுமல்ல, நல்ல உடற்பயிற்சியும் தேவை. உன் பிள்ளையை நன்றாக ஓடி ஆடி விளையாடவிடு. பள்ளியிலிருந்து வந்தவுடன் அவனைக் கவனி. கொஞ்சநேரம் தொலைக்காட்சி பார்க்கட்டும் தப்பில்லே. ஆனா, எப்போ பார்த்தாலும் செல்பேசியில வீடியோ கேமை ஆடவிடாதே. உடல் எப்படி வளர்ச்சியடையும்? நமது பாரதப் பிரதமர் உலக யோகா தினத்தை அறிவித்திருக்காரு. உலகே கொண்டாடும் யோகாவை உன் பையன் மட்டுமின்றி நாமும் நாள்தோறும் செய்தால், நலமோடு வாழ்வோம்" என்றார் பொன்னம்மாள்.

**என்னம்மா, எல்லாரும் பொன்னம்மாவோட பேச்சைக் கேட்டீங்களா? அப்புறம் என்ன யோசனை? இனி, நம் உடல்நலம் காக்க சத்தான உணவுகளோட உடற்பயிற்சியும் செய்வோம். சரிதானே!**

**உணவே மருந்து**

| **மருந்தாகும் உணவுப்பொருள்** | **–** | **மருத்துவக் குணம்** |
|---|---|---|
| கீழாநெல்லி | – | மஞ்சள் காமாலை |
| செம்பருத்தி | – | இதய கோளாறு நீக்கும் |
| கேரட் | – | கண் பார்வை |
| வேப்பிலை | – | அம்மை நோய் எதிர்ப்பு |
| மஞ்சள் | – | கிருமி நாசினி |
| மஞ்சள் | – | கிருமி நாசினி |
| முருங்கை | – | இரும்புச் சத்து |
| கரிசலாங் கண்ணி | – | கண்பார்வை |
| பொன்னாங்கண்ணி | – | கண்பார்வை |
| அகத்திக்கீரை | – | வயிற்றுப் புண் |
| வெந்தயம் | – | உடல்சூடு குறைக்கும் |
| மணித்தக்காளி | – | வயிற்றுப் புண், வாய்ப்புண் நீக்கும் |
| தூதுவளை | – | சளி |

# கணக்கு

**பயணச்சீட்டு – வாங்குதல் (உரியகட்டணம் செலுத்துதல் மீதிப்பணம் பெறுதல்)**

மணி மற்றும் அவரது குடும்பத்தினர் சென்னை எழும்பூரிலிருந்து தொடர்வண்டியில் தாம்பரம்வரை செல்ல இருந்தனர். அதற்கான பயணச்சீட்டு வாங்குவதற்குத் தொடர்வண்டி நிலையத்திற்குச் சென்றனர். அவர் ,ஐந்து பயணச்சீட்டுகள் வாங்கினார். எழும்பூரிலிருந்து தாம்பரம்வரை ஒரு பயணச்சீட்டுக்கான கட்டணம் ரூ.10 ஆகும். ஐந்து பயணச்சீட்டுக்கான கட்டணம்ரூ.50 ஆகும். அவர் ரூ.100 ஐச்செலுத்தினார். மீதிரூ.50 ஐப் பெற்றுக்கொண்டார்.



## பயிற்சிகள்

**1. பின்வரும் தொடர்களைப் படித்துக் காட்டுக.**

1. உடல்நலம் காக்கும் உணவுகளை உண்ணவேண்டும்.
2. துரித வகை உணவுகள், உடல் நலத்திற்குத் தீங்கு செய்யும்.
3. வண்ணப் பொருள்கள் சேர்க்கப்பட்ட உணவுகள் வயிற்றுக்குக் கெடுதல் செய்யும்.
4. நாம் சுவைக்காக உணவு உண்ணுதல் கூடாது.
5. இயற்கை உணவுகளே நம் உடலுக்கு மருந்தாகவும் அமைகின்றன.

**2. பின்வரும் சொற்களைச் சொல்லக் கேட்டு எழுதுக.**

| | |
|---|---|
| 1. உணவே மருந்து | 6. உணவுப்பொருள் |
| 2. அறிவுரை | 7. ஊட்டச்சத்து |
| 3. உடல்நலம் | 8. தானியங்கள் |
| 4. கலப்படம் | 9. பாரம்பரிய உணவு |
| 5. தட்பவெப்ப நிலை | 10. உடற்பயிற்சி |

**3. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. முருங்கைக் கீரை | – | அ) வாய்ப்புண் நீக்கும் |
| 2. கீழாநெல்லி | – | ஆ) கிருமி நாசினி |
| 3. பொன்னாங்கண்ணி | – | இ) இரும்புச்சத்து மிக்கது |
| 4. மஞ்சள் | – | ஈ) கண் பார்வை |
| 5. மணித்தக்காளி | – | உ) மஞ்சள் காமாலை நீக்கும் |

**4. நம் உடலுக்குப் பொருந்தாததை வட்டமிடுக.**

| | | |
|---|---|---|
| 1. பழச்சாறு | கரும்புச்சாறு | குளிர்பானம் |
| 2. அரிசி | மைதா | கம்பு |
| 3. தக்காளி சாதம் | ஃபிரைடு ரைஸ் | புளி சாதம் |
| 4. நூடுல்ஸ் | சோளப் பிட்டு | கம்பங்களி |
| 5. காய்கள் | ஃபிரெஞ்ச் ஃபிரை | பழங்கள் |

**5. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

1. பொன்னம்மாள் அரசியை ஏன் கடிந்து கொண்டார்?
2. உணவுப்பொருளை வெளியிலிருந்து வாங்கியதற்கு அரசி கூறிய காரணம் என்ன?
3. துரிதவகை உணவுகளால் உடலுக்கு ஏற்படும் தீங்குகளுள் இரண்டை எழுதுக.
4. உடல்நலத்திற்கு எவை இரண்டும் தேவை எனப் பொன்னம்மாள் கூறினார்?



Non Formal Book_15-19.indd 98 10-11-2020 13:05:06

## மதிப்பீடு – 4

**1. கீழ்க்காணும் சட்டங்களின் பெயர்களைப் படித்துக்காட்டுக.**

1. இலவசக் கல்வி உரிமைச் சட்டம்
2. போக்சோ சட்டம்
3. தகவல் அறியும் உரிமைச் சட்டம்
4. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
5. குழந்தைத் திருமணத் தடுப்புச் சட்டம்

**2. பின்வரும் தொடர்களைப் படித்துச் சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.**

1. வரதட்சணை வாங்குவதும் கொடுப்பதும் குற்றமாகா.
2. 1 முதல் 8 வகுப்புவரை இலவசமாகக் கல்வி பெறலாம்.
3. குழந்தைகளுக்கு எதிராகக் குற்றங்கள் நடப்பதைத் தடுப்பது, போக்சோ சட்டம்.
4. குழந்தைத் திருமணத்தைத் தடைசெய்ய சட்டம் இல்லை.
5. நுகர்வோரின் நலம் காப்பது, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்.

**3. சரியான விடையைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. நாம் வாக்களிக்கச் செல்லும் இடம் --------. (மருத்துவமனை / வாக்குச்சாவடி)
2. வாக்கு போட்டதற்கான அடையாள மையைத் தன் விரலில் வைத்திருந்தவர் ----------- (மஞ்சு / லதா)
3. வாக்குச் சீட்டில் தன் கையெழுத்தைப் போடத் தெரிந்தவர் ------. (லதா / மஞ்சு)


**4. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | முருங்கைக் கீரை | - | அ) வாய்ப்புண் நீக்கும் |
| 2. | கீழாநெல்லி | - | ஆ) கிருமி நாசினி |
| 3. | பொன்னாங்கண்ணி | - | இ) இரும்புச்சத்து மிக்கது |
| 4. | மஞ்சள் | - | ஈ) கண் பார்வை |
| 5. | மணித்தக்காளி | - | உ) மஞ்சள் காமாலை நீக்கும் |

**5. .பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

1. பொன்னம்மாள் அரசியை ஏன் கடிந்து கொண்டார்?
2. வயது வந்தோர் கல்வித்திட்டத்தினால் விளையும் நன்மை என்ன?
3. ஆணும் பெண்ணும் சமம் என்பதை உமா எவ்வாறு விளக்கினார்?

6. மணிமுள் இருக்கும் இடத்தைப் பார்த்து நேரத்தைக் கீழே உள்ள கட்டங்களில் எழுதுக.



7. நாட்காட்டியில் குறிப்பிட்ட நாள்களைக் குறித்தல்




1. காந்திஜெயந்தி எந்த நாளில் குறிப்பிடப்பட்டுள்ளது?

2. அக்டோபர் 2019 மாதத்தில் வரும் 3 ஆவது ஞாயிற்றுக்கிழமை எந்தத் தேதியில் உள்ளது?

3. APJ அப்துல்கலாம் பிறந்தநாள் எந்தத் தேதியில் வரும்?

4. அக்டோபர் 2019இல் மொத்தம் எத்தனை நாள்கள் உள்ளன?



Non Formal Book_15-19.indd 100 10-11-2020 13:05:08

பாடம் 20

# இணையவழிச் சேவை






Non Formal Book_20-24.indd 101 10-11-2020 13:05:50

பாத்திமா பாட்டி சென்னையில் வசிக்கிறார். அவரின் பிள்ளைகள் வெளியூரில் வேலை பார்க்கின்றனர். பேரன் கண்ணனும் பாட்டியும் மட்டுமே இங்கு வசிக்கின்றனர். ஒரு நாள் பாட்டிக்கு உடல்நலமில்லாமல் போய்விட்டது. பாட்டியால் சமைக்க முடியவில்லை. கண்ணனிடம் உணவு வாங்கிக் கொண்டு வா" என்றார் பாட்டி. உடனே அவன், நாம் ஏன் கடையைத் தேடிச் செல்ல வேண்டும்? நம்மை நோக்கி வர வைக்கிறேன் பாருங்கள் என்றான்.

கண்ணன் அலைபேசியை எடுத்தான். உணவு விற்கும் கடைகள் அடங்கிய செயலியைப் பதிவிறக்கம் செய்தான். இருவருக்கும் தேவைப்படும் உணவைத் தெரிவு செய்தான். சற்றுநேரத்தில் உணவு வீடு தேடி வந்தது. சுவையான உணவை இருவரும் உண்டனர்.

அடுத்த வாரம் மகனின் வீட்டுக்குப் போக வேண்டும். இப்போதோ பண்டிகை காலம். எப்படிப் பயணச்சீட்டு கிடைக்கும்? அலுத்துக் கொண்டார் பாட்டி. "கவலைப்படாதே பாட்டி, இதோ நான் இருக்கை முன்பதிவு செய்கிறேன் என்று அலைபேசியில் இணையவழி மூலம் பதிவு செய்தான் கண்ணன்.

இருக்கை கிடைத்தது. இனிமையாகப் பயணம் செய்து, மகன் வீட்டிற்குச் சென்றனர்.

## நலத்திட்டங்கள், இ–சேவை மையம்

| | | |
|---|---|---|
| கலையரசி | : | என்ன வேதா, மாப்பிள்ளை வீட்டுக்காரங்க பெண்ணைப் பிடிச்சிருக்குன்னு சொல்லிட்டுப் போய் ஒரு வாரமாச்சு, எப்போ கல்யாணம் வச்சிருக்க? |
| வேதவல்லி | : | கையில் காசில்ல. அதான் கொஞ்சம் கவலையாயிருக்கு. என்னதான் மாப்பிள்ளை வீட்ல எதுவும் வேணாம்னு சொன்னாலும் நம்ம பொண்ணு ஆசைப்பட்டதாவது செய்யணுமில்ல. |
| கலையரசி | : | உன் மகள் காலேஜ் படிப்பு படித்திருக்கிறாள்தானே? |
| வேதவல்லி | : | ஆமாம், கலையரசி. அவள் பி.ஏ. முடித்துவிட்டு மேல ஏதோ படிக்கிறாள். |
| கலையரசி | : | அப்புறமென்ன? கையில வெண்ணெய்யை வைத்துக்கொண்டு, ஏன் நெய்க்கு அலைகிறாய்? |
| வேதவல்லி | : | கலையரசி, நீ என்ன சொல்கிறாய்? |
| கலையரசி | : | ஆமாம், வேதா. உனக்கு இந்த விசயம் தெரியாதா? மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித் திட்டம் மூலம் பட்டப்படிப்பு முடித்திருந்தால் ரூ. 50,000க்கான காசோலையும் 4 கிராம் தங்கமும் தருகிறார்களே! |



Non Formal Book_20-24.indd 102 10-11-2020 13:05:50

வேதவல்லி : அப்படியா? இவற்றைப் பெற நாம் என்ன செய்யவேண்டும்?

கலையரசி : திருமண அழைப்பிதழ், ஆண்டு வருமானச் சான்றிதழ், பள்ளி மாற்றுச் சான்றிதழ், மதிப்பெண் சான்றிதழ் ஆகியவற்றை இணைத்து இ – சேவை மையத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும்.

வேதவல்லி : என் கவலை நீங்குவதற்கு நல்ல வழி சொன்னாய், கலையரசி. இனி மங்கள ஓசை தடையில்லாமல் என் வீட்டில் ஒலிக்கும்.

தேவையான சான்றிதழ்களோடு மகளையும் அழைத்துக்கொண்டு, புதுத் தெம்பு வந்தவளாய் இ–சேவை மையம் நோக்கி புறப்படலானாள் வேதவல்லி.

# இ–சேவை மையம் மூலம் வழங்கப்படும் சேவைகள்

### சான்றிதழ்கள்

வருமானச் சான்றிதழ்

சாதிச் சான்றிதழ்

இருப்பிடச் சான்றிதழ்

குடும்பத்தில் முதல் பட்டதாரி என்பதற்கான சான்றிதழ்

கணவனால் கைவிடப்பட்டோருக்கான சான்றிதழ்

### சமூக நலத் திட்டங்கள்

முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம்

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம்.

ஈ.வே.ரா மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித்திட்டம்

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம்.

அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம்



Non Formal Book_20-24.indd 103 10-11-2020 13:05:51

# கணக்கு

**பணம் – அறிமுகம்**

கவிதா தன் வீட்டிற்குத் தேவையான மளிகைப்பொருள்களைக் கடையில் வாங்கினாள். கடையில் வாங்குவதற்கு அவள் கடைக்காரரிடம் என்ன தரவேண்டும்?

## சில்லறையாக மாற்றுதல்



**குறிப்பு**
1ரூபாயில் 100 பைசாக்கள்உள்ளன.


## நோட்டுகள் (படம்)

| ரூ 10 | ரூ.20 | ரூ.50 | ரூ.100 | ரூ.200 | ரூ.500 |
|---|---|---|---|---|---|
|  |  |  |  |  |  |


பொருள்கள் குறிக்கும் விலை மதிப்பினை வட்டமிடுக

 ரூ. 20 

 ரூ. 10 

 ரூ. 5 

பணத்தைப் பல்வேறு வழிகளில் குறிப்பிடலாம்






Non Formal Book_20-24.indd 104 10-11-2020 13:06:01

நாணயம் மற்றும் பணம் பயன்படுத்திப் பொருள்களின் மதிப்பைப் பொருத்துதல்

## பயிற்சிகள்

**1. சொற்களை இணைத்து எழுதுக.**




**2. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. வேதவல்லியின் மகள் ----------படிப்பு முடித்திருந்தாள்.
2. கண்ணன், தன் அலைபேசியில் -----------வழி மூலம் இருக்கை முன்பதிவு செய்தான்.
3. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித் திட்டத்தில் வழங்கப்படும் தொகை ரூ.----------
4. வேதவல்லி, தேவையான சான்றிதழ்களை எடுத்துக்கொண்டு சென்ற இடம்--------.

**3. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. டாக்டர் முத்துலட்சுமிரெட்டி | – | அ) | ஆதரவற்ற பெண்களுக்கான நிதி உதவி |
| 2. ஈ வே. ரா. மணியம்மையார் | – | ஆ) | விதவை மறுமண நிதி உதவி |
| 3. அன்னை தெரேசா | – | இ) | கலப்புத் திருமண நிதி உதவி |
| 4. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் | – | ஈ) | விதவையர் மகள் திருமண நிதி உதவி |

**4. வினாக்களுக்கு விடையளிக்க.**

1. வேதவல்லிக்கு நலத்திட்டங்கள் பற்றிக் கூறியவர் யார்?
2. உணவு வாங்கிவரச் சொன்ன பாட்டியிடம் கண்ணன் என்ன கூறினான்?
3. தன் மகளின் திருமணம் குறித்து வேதவல்லி ஏன் கவலைப்பட்டாள்?



Non Formal Book_20-24.indd 105 10-11-2020 13:06:01

4. நமக்கு உதவும் நலத்திட்டங்களுள் எவையேனும் இரண்டு எழுதுக.

## கணக்கு

**5. வினாக்களுக்கு விடையளிக்க.**

**கொடுக்கப்பட்டுள்ள சில்லறை மற்றும் ரூபாய் நோட்டுகளின் மொத்த மதிப்பினை எழுதுக.**

| வ.எண் | ரூபாய் நோட்டுகள் சில்லறை | மொத்தம் |
|---|---|---|
| 1 |  | |
| 2 |  | |

## நாணயம் மற்றும் பணத்தாளினைப் பயன்படுத்திப் பொருள்களின் மதிப்பைப் பொருத்துதல்

 ரூ 25 

 ரூ40 



ரூ14 



Non Formal Book_20-24.indd 106 10-11-2020 13:06:03

பாடம்
21

# பேரிடர் மேலாண்மை





Non Formal Book_20-24.indd 107 10-11-2020 13:06:04

அந்தக் குறுகிய தெருவுக்குள் நுழைந்தது ஒரு தீயணைப்பு வண்டி. அதிலிருந்து தபதபவென இறங்கிய வீரர்கள், உடனடியாகக் குழாய்களைப் பொருத்தத் தொடங்கினார்கள். பற்றி எரிந்துகொண்டிருந்த அந்த வீட்டின் மீது குழாய்களிலிருந்து தண்ணீரைப் பீய்ச்சியடிக்கத் தொடங்கினார்கள். அக்கம்பக்கம் வீடுகளிலிருந்தவர்கள் எல்லாம் தெருவில் நின்றிருந்தார்கள். ஒரே கூச்சலும் குழப்பமுமாய் அந்தத் தெரு காட்சியளித்தது.

"வள்ளி, என்னாச்சு? ஏன் சீதா வீட்டில் தீப்பிடித்திருக்கு?" என்று கேட்டுக்கொண்டே தன் வீட்டிலிருந்து வெளியே வந்தாள் வனிதா.

"அதுதான் எனக்கும் தெரியலேக்கா. ஒவ்வொருத்தரும் ஒவ்வொன்று சொல்றாங்க" என்றாள் வள்ளி.

அவர்கள் பேசிக்கொள்வதைக் கவனித்த மாலதி, அவர்களுக்கு அருகில் வந்தாள். "எனக்குத் தெரியும், நான் சொல்லட்டுமா?" என்று மாலதி கேட்க, "சொல்லு மாலதி" என்றாள் வனிதா.

"நேற்று, சீதாவோட பிள்ளைங்க எல்லாரும் பாட்டி வீட்டுக்குப் போயிட்டாங்க. அன்று, இரவுகாட்சிக்குப்புதுப்படத்துக்கானஇரண்டுநுழைவுச்சீட்டு,சீதாவோடவீட்டுக்காரருக்குக் கிடைத்திருக்கு. புதுப்படத்துக்கு டிக்கெட் கிடைத்த சந்தோஷத்தில சீதாவும் அவங்க வீட்டுக்காரரும் உடனடியாகக் கிளம்பிப் படம் பார்க்க திரையரங்கத்துக்குப் போயிட்டாங்க. வீட்டுக்கு வர இரவு நேரமாயிட்டதினால, வெளியிலேயே உணவையும் சாப்பிட்டுட்டு வந்து படுத்திட்டாங்களாம்."

"அப்புறம், என்னாச்சு மாலதி அக்கா?" என்றாள் வள்ளி.

"விடியற்காலையில இயற்கைக் கடனைக் கழிக்க அவங்க வீட்டுக்காரரு எழுந்திருக்க, சத்தம் கேட்டு சீதாவும் எழுந்துட்டாளாம். கழிவறையோட விளக்கை அவங்க வீட்டுக்காரரு போட்ட அதே நேரத்தில சீதா வாசல் கதவைத் திறக்கவும் சரியா இருந்திருக்கு. 'டமால்' என்று சமையலறையிலிருந்த எரிவாயு உருளை வெடித்துச் சிதறவும் அடுத்த நொடி இரண்டுபேரும் வாசலுக்கு வெளியே விழுந்து கிடக்கவும் ஒரே போர்க்களம்தான் வள்ளி" என்றாள் மாலதி.

"நல்லகாலம், யாருக்கும் காயமில்லையே, பொருள் போனாப் போகுது. அப்புறமாச் சம்பாதித்துக் கொள்ளலாம். உயிர்போனால் வராதே"என்று கூறித் தனக்குத்தானே சமாதானம் செய்துகொண்டாள் வனிதா.

"நீ சொல்றது சரிதான் வனிதா. ஆனால், உயிரோ பொருளோ இழப்புக்கு நாமே



Non Formal Book_20-24.indd 108 10-11-2020 13:06:04

காரணமாகக் கூடாதல்லவா?" என்றாள் மாலதி.

"மாலதி அக்கா, நீங்க என்ன சொல்றீங்க? தீ விபத்துக்குச் சீதா அக்காதான் காரணமா? கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்கக்கா" என்று கேட்டாள் வள்ளி.

"ஆமாம், வள்ளி. கணவரோட திரைப்படத்துப் போற அவசரத்தில இருந்த சீதா, டீ போட அடுப்பைப் பற்றவைச்சிருக்கா. கணவருக்கு டீ போட்டுக் கொடுத்ததும், அடுப்போட பர்னரை மட்டும் அணைத்துவிட்டு, எரிவாயு உருளையோட திருகை அணைக்காம விட்டிருக்கா. இரவு வேறே தாமதமா வந்திருக்கா. வீட்ல எரிவாயு கசிவு பரவியிருப்பது இரண்டு பேருக்கும் தெரியல. படம் பார்த்த களைப்பில அசந்து தூங்கிட்டாங்க. அந்த வாயு கொஞ்சம் கொஞ்சமா வீடு முழுக்க பரவியிருந்திருக்கு. அவங்க வீட்டுக்காரரு காலையில மின்விளக்கைப் போட, குமிழியை அழுத்தியதும் மின்சாரம் பரவி எரிவாயு அழுத்தத்திலே 'டமால்னு' வெடித்துவிட்டது."

"அப்படியா இந்த விபத்து ஏற்பட்டது?" சரி, மாலதி அக்கா, இப்படி விபத்து ஏற்படாம இருக்க நாம என்ன செய்யணும்?"

"நாம் எரிவாயு அடுப்பையும் உருளையையும் இணைப்புக் குழாயையும் கவனமாகக் கையாள வேண்டும். அடிக்கடி சரிபார்த்து ஏதேனும் பழுது இருந்தால் உடனடியாக நீக்கிவிட வேண்டும். நாம் காட்டும் சிறு அலட்சியமும் நமக்குப் பேரிடரைத் தந்துவிடும். ஒவ்வொரு முறையும் எரிவாயு உருளை வாங்கும்போது, அதனைக்கொண்டு வருபவரிடம் கசிவு ஏதேனும் உள்ளதா எனச் சரிபார்த்துத் தரும்படி கேட்பது நமது கடமை. அவர்கள் சொல்வதைக் கவனத்திற்கொண்டு, ஆறுமாதத்திற்கு ஒருமுறை ரப்பர் இணைப்புக் குழாயை மாற்றவேண்டும். இல்லையெனில் அதில் இலேசாக வாயுக் கசிவு ஏற்பட்டாலும் நமக்குத் தெரியாமல் போய்விடும்."

"எரிவாயு அடுப்பைப் பயன்படுத்துவதிலே இவ்வளவு கவனமாகச் செயல்படணும்னு நீங்க சொல்லித்தான் தெரிந்துகொண்டேன் அக்கா"என்றாள் வள்ளி.

வெளியில் நடப்பதை வேடிக்கை பார்க்கும் அவசரத்தில் தான் அடுப்பை மட்டும் அணைத்துவிட்டு, எரிவாயு உருளையின் திருகை மூடாமல் வந்துவிட்டது நினைவுக்கு வர, "ஒரு நிமிடம் இருங்க, இதோ வர்றேன்"என்று சொல்லிக்கொண்டே தன் வீட்டிற்குள் ஓடினாள் வனிதா.


**பேரிடர் வராமல் தடுத்துக் கொள்வதற்கு வள்ளியும் வனிதாவும் தயாராயிட்டாங்க, அப்போ நீங்க?**



Non Formal Book_20-24.indd 109 10-11-2020 13:06:04

# கணக்கு

**பணம் – கூட்டல், கழித்தல்**



இறைவி, கதிர், வாஞ்சி, முகில் ஆகியோர் தங்கள் குடும்பத்துடன் சுற்றுலாப் பொருட்காட்சிக்குச் செல்கின்றனர். அவர்கள் விரும்பி விளையாடிய சில விளையாட்டுகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.



இராட்டினம் ₹20



இரங்க ராட்டினம் ₹30



கப்பல் விளையாட்டு ₹25



மோதும் மகிழுந்து ₹15

பின்வருவனவற்றிற்கு விடையளி:

1. கதிர்  நான்கு விளையாட்டுகளையும் விளையாடுகிறான் எனில் அவன் செலுத்த வேண்டிய மொத்த பணம் எவ்வளவு?

2. முகில்  இரங்கராட்டினம் இருமுறை விளையாடினாள். அவள்  +  செலுத்தினாள் எனில், அவள் மீதம் பெற வேண்டிய தொகை எவ்வளவு?

3. கதிர் , வாஞ்சி  மற்றும் முகில்  ஆகிய மூவரும் ஒருமுறை இராட்டினம் விளையாடினர் எனில், அவர்கள் செலுத்த வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?



Non Formal Book_20-24.indd 110 10-11-2020 13:06:08

## பயிற்சிகள்

**1. பின்வரும் சொற்களைச் சொல்லக் கேட்டு எழுதுக.**

1. தீயணைப்பு வீரர்கள்
2. நுழைவுச் சீட்டு
3. எரிவாயு
4. மின்விளக்கு
5. வேடிக்கை
6. வாயுக் கசிவு
7. இணைப்புக் குழாய்
8. விடியற்காலை
9. பேரிடர் மேலாண்மை
10. மின்சாரம்

**2. பின்வரும் தொடர்களைப் படித்துக்காட்டுக.**

1. எதிர்பாராமல் தீ விபத்து ஏற்பட்டால், தீயணைப்பு நிலையத்திற்குத் தகவல் கொடுக்கவேண்டும்.
2. சமையலறை, காற்றோட்டமானதாக இருக்கவேண்டும்.
3. ஒவ்வொரு முறை வாங்கும்போதும் எரிவாயு உருளையில் கசிவு உள்ளதா எனச் சரிபார்க்க வேண்டும்.
4. சமையல் முடிந்ததும், எரிவாயு அடுப்பை அணைப்பதுடன், உருளையின் திருகையும் மூடிவைக்க வேண்டும்.
5. வாயுக் கசிவு பரவியிருப்பதாக உணர்ந்தால், மின் குமிழிகளைப் பயன்படுத்தாமல், உடனடியாகத் தீயணைப்பு நிலையத்தைத் தொடர்பு கொள்ளவேண்டும்.

**3. பின்வரும் பொருள்களுள் எவையெவை முதலுதவிப் பெட்டியில் இடம்பெறும்?**

| | | | | | |
|---|---|---|---|---|---|
|   |  |  |   |  |   |
|  |  |  |  |  |  |



Non Formal Book_20-24.indd 111 10-11-2020 13:06:09

4. வாங்கிய பொருட்களின் விலையை உற்றுநோக்கவும். உங்களிடம் உள்ள பணத்தை எண்ணி, செலவு செய்த பணத்தையும், மீதம் உள்ள பணத்தையும் கணக்கிடுக.

| வாங்கிய பொருள்கள் | உங்களிடம் உள்ள பணம் | நீங்கள் செலவு செய்த பணம் | | உங்களிடம் மீதமுள்ள பணம் | |
|---|---|---|---|---|---|
| | | ப | ஒ | ப | ஒ |
|  ₹ 15 ₹ 20 |  | | | | |
| | | 1 | 5 | 4 | 0 |
| | | 2 | 0 | 3 | 5 |
| | | | | | |
| | 40 | 3 | 5 | | 5 |
|  ₹ 20 ₹ 5 |  | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
|  ₹ 10 ₹ 20 |  | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
|  ₹ 5 ₹ 6 |  | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
|  ₹ 20 ₹ 10 |  | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |



Non Formal Book_20-24.indd 112 10-11-2020 13:06:25

பாடம்
22

# பணமில்லாப் பரிமாற்ற உலகம்





Non Formal Book_20-24.indd 113 10-11-2020 13:06:25

"எங்கே கிளம்பிட்ட சிவா?"

"மகளோட தேர்வுக்குப் பணம் கட்ட வங்கிக்குப் போறேன் இராசு".

"அட, இதுக்காகவா வங்கிக்குப் போற? உன் போன்ல இருந்தே நிமிடத்தில் அனுப்பிடலாமே!"

"அப்படியா? எனக்குத் தெரியாதே! ATM ல் பணம் எடுக்க மட்டும்தான் தெரியும். இணையவழியில் எப்படிப் பணம் அனுப்புவது? எனக்குத் தெரியாதே?"

"அட, என்ன சிவா, இதுகூடத் தெரியாதா? கொண்டு வா உன் திறன்பேசியை. அதற்கென்று ஒரு செயலி இருக்கிறது. அதை முதலில் உன் திறன்பேசியில் பதிவு செய்தால் போதும்பா...."

எப்படிச் செய்யவேண்டும் என்று இராசு சொல்லிக் கொடுக்க, சிவா தன் வங்கிக் கணக்கிலிருந்து இணையவழி மூலம் தம் மகளின் தேர்வுக்குக்குரிய தொகையைக் கட்டுகிறார்.

"ரொம்ப நன்றி, இராசு. பணமில்லாப் பரிமாற்றம் மூலம் எனக்கு நேரமும் அலைச்சலும் மிச்சம்".

"நல்லது சிவா. அதுமட்டுமா? நாம் பயன்படுத்தும் மின்சாரம், தொலைபேசி, குடிநீர் போன்றவற்றிற்கான கட்டணத் தொகையைக்கூட, இணையவழிப் பணப் பரிமாற்றம் மூலமாகக் கட்டிவிடலாமே" என்றார் இராசு.

"புரிந்துகொண்டேன் இராசு. இணையவழி மூலம், பணப்பரிமாற்றம் மிகவும் எளிதாகச் செய்யமுடிகிறதே!"

"சரியாகச் சொன்னாய், சிவா. இன்னொன்று சொல்லட்டுமா? நீ எங்கேயாவது பயணம் போகணும்னாக்கூட, இணையவழி மூலம் முன்கூட்டியே பயணச்சீட்டையும் பதிவு செய்யலாம். அட, அவ்வளவு ஏன்? நீ திரைப்படம் பார்க்க விரும்பினால் முன்கூட்டியே உன் இருக்கையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். சற்றுத் தொலைவிலுள்ள கடைத்தெருவுக்குச் செல்ல விரும்பினால், அங்கு நம்மை ஏற்றிச் செல்லும் வண்டியைக்கூடத் தேர்ந்தெடுத்துப் பதிவு செய்யலாம்"என்றார் இராசு.

ஓ! இனி, என்னோட எல்லாத் தேவைக்கும் நான் இணையவழிப் பணப் பரிமாற்றத்தையே பயன்படுத்தப் போகிறேன்"என்று மகிழ்ச்சியுடன் கூறினார் சிவா.




Non Formal Book_20-24.indd 114 10-11-2020 13:06:25

# கணக்கு

### காசோலை

வங்கிக் காசோலையைப் பணப்பரிமாற்றம் செய்வதற்காகப் பயன்படுத்துகிறோம். காசோலையின் மாதிரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.




காசோலையில் பயன்பெறுபவரின் பெயரும் தேவைப்படும் தொகையும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். குறிப்பிட்ட இடத்தில் கையொப்பம் இட்டிருக்க வேண்டும்.

காசோலை வழங்கப்பட்ட தேதியிலிருந்து 3 மாதம் வரை செல்லுபடியாகும்.

பயனாளியின் பெயர், தேதி, தொகை, கையொப்பம்

### பயிற்சிகள்

1. **கீழ்க்காணும் சொற்களைச் சொல்லக் கேட்டு எழுதுக.**

   1. பணமில்லாப் பரிமாற்றம்
   2. வங்கிக் கணக்கு எண்
   3. திறன்பேசி
   4. மின்கட்டணம்
   5. தொடர்வண்டிப் பயணம்

2. **இடம் மாறியுள்ள எழுத்துகளை ஒழுங்குபடுத்திச் சொல்லாக்குக.**

| | | | | |
|---|---|---|---|---|
| கி | ங் | வ | – | வங்கி |

| | | | | |
|---|---|---|---|---|
| ண | ப | ம் | – | |

| | | | | |
|---|---|---|---|---|
| ய | செ | லி | – | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ய | ணை | ம் | இ | – | |



Non Formal Book_20-24.indd 115 10-11-2020 13:06:25

3. வினாக்களுக்கு விடையளிக்க.


1. தாம் எங்குச் செல்வதாகச் சிவா, இராசுவிடம் கூறினார்?

2. இணையவழிச் சேவையைப் பயன்படுத்த, நாம் திறன்பேசியில் எதனை நிறுவவேண்டும்?

3. பணமில்லாப் பரிமாற்றத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டு தருக.

4. பணமில்லாப் பரிமாற்றத்தை நீங்கள் பயன்படுத்துவதாக இருந்தால், எவற்றிற்கெல்லாம் முன்னுரிமை கொடுப்பீர்கள்? பட்டியலிடுக.

4. பின்வரும் காசோலையைப் பூர்த்தி செய்க.


भारतीय स्टेट बैंक
State Bank Of India
D D M M Y Y Y Y
PAY ________________ या धारक को OR BEARER
रुपये RUPEES ________________
________________ अदा करें ₹
खाता सं.
A/c No.
Please sign above



Non Formal Book_20-24.indd 116 10-11-2020 13:06:25

பாடம்
23

# பசுமைத் தோட்டம்



"வா, மாணிக்கம்! என்ன, இந்தப்பக்கம்?"

"ஜேசிபி வண்டி ஒன்று வேண்டும். ஒரு மணி நேர வேலைதான், சதாசிவம்."

"எதுக்கு அண்ணே ஜேசிபி.?"

"ஒன்றுமில்லை. வீட்டுக்கு எதிரில் இருக்கும் மரத்தை வேரோடு எடுக்கப் போறேன்." சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்தார் மாணிக்கம்.

"அடடா.... செல்லங்களா! எப்போ வந்தீங்க?" என்று தன் வீட்டுக்கு வந்திருந்த பேரக்குழந்தைகளிடம் நலம் விசாரித்தார் மாணிக்கம்.

"இங்கே வந்தால் சுதந்தரமா விளையாடலாம். அதனாலதான், விடுமுறை வந்தா போதும். உடனே, தாத்தா வீட்டுக்குப் போகணும்னு இங்கே ஓடி வர்றாங்க மாமா" என்றார் அவருடைய மருமகள் வான்மதி.

"தாத்தா, தாத்தா.. மரத்தில் ஊஞ்சல் கட்டிக் கொடுங்க தாத்தா" என்றனர் அபியும் அகிலும்.

" அட, பிள்ளைங்களா, இந்த மரத்தை வெட்டுவதற்கு ஆள் கூப்பிடத்தான் நான் போயிருந்தேன்... இன்னுங்கொஞ்ச நேரத்தில ஆளுங்க வந்திடுவாங்க." என்றார் மாணிக்கம்.

"இதைக் கேட்டபடியே வந்த மகன் கோபி, "என்னப்பா நீங்க, சருகு விழுந்து குப்பையாகுது என்றா மரத்தை வெட்ட நினைக்கிறீங்க...? நம்மால் இவ்வளவு பெரிய மரத்தை உடனடியாக உருவாக்க முடியுமா? வாசலில் நிழல் தருது. தூய்மையான காற்று கிடைக்குது. மாலை நேரத்தில நம்ம வீடே குளிர்ச்சியா இருக்குப்பா..." என்றான் கோபி.

"ஆமாம் மாமா. அவர் சொல்றது சரிதான். சோறு தண்ணிகூட இல்லாமல் சிலநாள் இருக்கலாம். காற்றில்லாமல் நம்மால் உயிர்வாழ முடியுமா? மரம்தானே நமக்குச் சுவாசிக்க பிராணவாயுவைத் தருது..." என்றாள் மருமகள் வான்மதி.

"நீங்க சொல்றது எல்லாம் சரிதான். ஆனால், அம்மாவால் நாள்தோறும் விழுகின்ற சருகுகளைப் பெருக்கித் தள்ள முடியலேன்னு முணுமுணுக்கறாங்களே..."



Non Formal Book_20-24.indd 118 10-11-2020 13:06:28

"தாத்தா அணில், காகம், மைனா, கிளி இவற்றிற்கு வீடு மரம்தானே! மரத்தை வெட்டிவிட்டால் அவையெல்லாம் எங்கே போய்த் தங்கும்?" குழந்தைகள் முக வாட்டத்துடன் கேட்டனர்.

"அதுமட்டுமில்லை, மாமா. மரம் இருக்கிறதால மழையினால ஏற்படற மண் அரிப்பைத் தடுக்குது. வெப்பத்தினால பூமி சூடாவதைத் தடுக்குது. எல்லாவற்றையும் விட இந்தச் சாலை வழியாகப் போகிறவர்கள் மழைக்கும், வெயிலுக்கும் ஒதுங்க முடிகிறதே! அவர்களுக்கு நாம் செய்கின்ற பெரிய பயன் அல்லவா மாமா?" இன்னொன்றும் சொல்லட்டுமா? உங்க பேரக்குழந்தைங்க நகரத்திலிருந்து இங்க வருவதற்குக் காரணமே இந்த மரம்தான் மாமா. இந்த மரத்தடியிலே நாள் முழுவதும் விளையாட அவர்கள் மிகவும் விரும்புகிறார்கள். நகரத்தில் எங்கள் வீட்டைச் சுற்றி எந்த மரமும் இல்லை. இந்த வீடும் மரம் இல்லையென்றால் அப்படித்தான் இருக்கும் என்று நினைப்பார்கள். இனிமேல் இங்கு வருவதற்கும் யோசிப்பார்கள் மாமா" என்றாள் வான்மதி.

"அப்பா, இதற்கு நான் ஒரு வழி சொல்லட்டுமா?. வாசல் பக்கம் நீண்டு இருக்கும் கிளையில் இருக்கும் இலைகளை மட்டும் கழிச்சி விடுங்கப்பா. இலையுதிர் காலத்தில் மட்டும்தானே சருகுகள் உதிரும். பிறகு பச்சைப்பசேல் என்று செழித்து வளர்ந்திடும்" என்றான் கோபி.

இவர்கள் பேசுவதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அம்மாவும் தன் தவற்றை உணர்ந்தார். "ஆமாங்க, எனக்கு ஏற்பட்ட சின்ன சங்கடத்துக்காக இவ்வளவு பயன் தரக்கூடிய ஒரு மரத்தையே அழிக்க நினைத்துவிட்டேன்" என்னை மன்னிச்சிடுங்க, மரத்தை வெட்ட வேண்டாங்க. அதுவும் ஓர் உயிர்தானே" என்று மெல்லிய குரலில் அம்மா, அப்பாவிடம் கூறிக்கொண்டிருந்தார்.

தாத்தா வீட்டிற்கு வரும்வழியில் இருந்த நர்சரி தோட்டத்திலிருந்து சிறிய மாங்கன்று ஒன்றை தந்தையிடம் அடம்பிடித்து வாங்கி வந்த அபி, அந்த மரத்துக்கு அருகில் நடுவதற்காக ஆவலுடன் ஓட, "நான் உனக்கு உதவி செய்கிறேன்" என்றவாறே அம்மாவும் பின்தொடர்ந்தாள்.



Non Formal Book_20-24.indd 119 10-11-2020 13:06:28

# கணக்கு

## அஞ்சலகத்தில் பணம் எடுக்கும் படிவம்

**WITHDRAWAL FORM (SB-7)**

| PASSBOOK MUST ACCOMPANY THIS FORM IF ACCOUNT STAND AT BO. APPLICATION SIDE (To be filled by depositor) | PAYMENT ORDER (For office use only) |
|---|---|
| Name of Post Office Chennai Date 22/01/2020 | Date______ |
| Type of account-SB/RD/TD/MIS/NSS/ etc. SB | Pay Rs.________(In figures)________ |
| Account No. 4365894577853 | ________________(in words) |
| **NATURE OF WITHDRAWAL** (please Tick)<br>Interest<br>RD Half withdrawal<br>Any other (Please specify) | Signature of Postmaster |
| Please pay to self/messenger (whose name and signatures are given below) the sum of | Date Stamp |
| Rs. 20,000/- (In figures) Rs Twenty thousands only (In words) | |
| Balance after withdrawal Rs. 10,000/- (in figures) | **Acquittance** (To be filled by depositor/messenger) |
| Signature or thumb impression of depositor<br>Name of Messenger Anandan | Received Rs.________ (both in words and figures) |
| Signature of Messenger ______ | |
| Signature or thumb impression of depositor (Required only if payment is required through messenger) | Signature or thumb impression of depositor |
| Initial of PA Initial of APM | Date______ |

- அஞ்சலகக் கிளை
- தேதி
- கணக்கின் வகை
- கணக்கு எண்
- எடுக்கும் பணம் எண்ணால்
- எடுக்கும் பணம் எழுத்தால்
- அஞ்சல் தூதுவரின் கையொப்பம்

### பயிற்சிகள்

**1. பின்வரும் சொற்களைப் படித்துக்காட்டுக.**

| | | |
|---|---|---|
| 1. சுதந்தரம் | 2. ஊஞ்சல் | 3. குளிர்ச்சி |
| 4. முணுமுணுப்பு | 5. ஆக்ஸிஜன் | 6. பச்சைப்பசேல் |

**2. பின்வரும் தொடர்களைச் சொல்லக் கேட்டு எழுதுக.**

1. மரம் மண் அரிப்பைத் தடுக்கிறது.
2. அபியும் அகிலும் ஊஞ்சலில் ஆடினர்.
3. சுற்றுச்சூழல் காத்திடுவோம்; சுகமாய் வாழ வழிசெய்வோம்.
4. நாம் உயிர் வாழ்வதற்குப் பிராண வாயு தேவை.
5. மரக்கன்று நடுவோம்; மழை பெறுவோம்.

**3. உறவுப் பெயர்களை எழுதிக்காட்டுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அம்மா | அப்பா | தாத்தா | பாட்டி | சிற்றப்பா | சித்தி |
| மாமா | மாமி | மகன் | மகள் | மருமகள் | பெயரன் |

**4. வினாக்களுக்கு விடையளிக்க.**

1. மாணிக்கம் எதற்காக ஜேஸிபி கேட்டார்?
2. பறவைகளின் வீடு எது?
3. உயிர் வாழத் தேவையான வாயுவின் பெயர் என்ன?
4. மரத்தை வெட்ட அம்மா சொல்லிய காரணம் என்ன?
5. மரத்தைக் காக்க கோபி சொல்லிய திட்டம் என்ன?



Non Formal Book_20-24.indd 120 10-11-2020 13:06:28

**5. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. மரத்தில் ---------- கட்டி விளையாடலாம்.
2. நாம் உயிர் வாழ்வதற்குத் தூய்மையான ------ தேவை.
3. பூமி------------ஆவதைத் தடுக்கிறது மரம்.
4. மண் அரிப்பைத் தடுக்க ----------- உதவுகிறது.
5. அபி, நடுவதற்காக வாங்கி வந்த மரக்கன்று ---------.

**6. பின்வரும் அட்டவணையிலுள்ள மரங்களின் பயன்களை எழுதுக.**

| மரங்கள் | பயன்கள் |
|---|---|
| வாழை மரம் | |
| வேப்ப மரம் | |
| பனை மரம் | |
| தென்னை மரம் | |
| மாமரம் | |

**7. பின்வரும் தொடர்களைப் படித்து, நம் வாழ்வில் கடைப்பிடிப்போம்.**

1. ஆளுக்கொரு மரம் நடுவோம்.
2. மரம்தான் மண்ணின் சிறந்த வளம்
3. மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!
4. மரம் நமக்கு வரம்

**8 அஞ்சலகத்தில் பணம் எடுக்கும் படிவத்தைப் பூர்த்தி செய்க**

WITHDRAWAL FORM (SB-7)

PASSBOOK MUST ACCOMPANY THIS FORM
APPLICATION SIDE
(To be filled by depositor)

Name of Post Office..........................................Date...........................
Type of account - SB/RD/TD/MIS/PPF/NSS/SCSS..............
Account No...............................................

NATURE OF WITHDRAWAL (please Tick)
- Interest
- RD Half withdrawal
- Any Other (Please Specify)

Please pay to self/messenger(whole name and signatures are given below) the sum of Rs..................(in figures) Rs.................................................................(in words)
Balance after withdrawal Rs..................................(in figures)

Signature or thumb impression of depositor

Name of Messenger.......................................
Signature of Messenger..................................
Signature or thumb impression of depositor
(Required only if payment is required through messenger)

Initial of PA Initial of APM

PAYMENT ORDER
(For office use only)

Date...............................
Pay Rs........................... (in figures)................................
.........................................................................(in words)

Date Stamp

Signature of Postmaster

Acquittance
(To be filled by depositor/messenger)

Received Rs........................................................................
(both in words and figures)

Signature or thumb impression

Date..........................



Non Formal Book_20-24.indd 121 10-11-2020 13:06:29

பாடம் 24

# சாலைப் பாதுகாப்பு – முதலுதவி






Non Formal Book_20-24.indd 122 10-11-2020 13:06:29

அஃது ஒரு தேசிய நெடுஞ்சாலை. இளவரசன், தான் புதிதாக வாங்கிய இரு சக்கர வண்டியில் தன் நண்பனுடன் சென்று கொண்டிருந்தான். திடீரென 'டமார்' என்னும் சத்தம் கேட்டது. சாலையில் சென்று கொண்டிருந்தவர்கள் திடுக்கிட்டுத் தத்தமது வண்டிகளை ஓரமாக நிறுத்திச் சத்தம் வந்த திசைநோக்கி ஓடினர். இளவரசனும் தன் வண்டியை நிறுத்திவிட்டுத் தன் நண்பனுடன் ஓடினான். என்ன நடந்தது என்று, அவர்கள் சென்று பார்ப்பதற்குள் அங்கு ஒரு கூட்டமே கூடிவிட்டது.

அங்கு ஒரு மகிழுந்து சாலையோரத்திலிருந்த கல்லில் இடித்து நின்றிருந்தது. அங்குக் கூடியிருந்த கூட்டத்திலிருந்து சிலர், தமது திறன்பேசியில் நடந்ததைப் படம் பிடித்துக் கொண்டிருந்தனர். சிலர், சுய ஒளிப்படம் (Selfi) எடுத்துக் கொண்டிருந்தனர். வேறு சிலரோ முகநூலில் நேரடியாக ஒளிபரப்பு செய்து கொண்டிருந்தனர்.

கூட்டத்தை விலக்கிவிட்டு, உள்ளே நுழைந்த இளவரசன், மகிழுந்தில் மயங்கிய நிலையில் இருவர் இருப்பதைக் கண்டான். சற்றும் நேரங்கடத்தாமல், உடனடியாக 108 எண்ணுக்கு அழைப்பு விடுத்துச் செய்தியைக் கூறினான். அவசர ஊர்தி வருவதற்குள், மகிழுந்தின் கதவைத் திறக்க முயற்சி செய்தான். ஆனால், முடியவில்லை. அப்போது, உள்ளே இருந்தவர் மெல்ல அசைந்தார். அவரைப் பார்த்துக் கையசைத்து, மெதுவாகக் கதவைத் திறக்குமாறு இளவரசன் கூறினான். அவரும் தட்டுத்தடுமாறி மகிழுந்தின் கதவைத் திறந்தார்.

தலையிலும் முகத்திலும் காயத்தோடு காணப்பட்ட அவர், அருகிலிருந்த தம் மகளை நோக்கினார். அந்தச் சிறுமிக்குக் கைகளில் காயம் இருக்க, அச்சத்தால் எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தாள். நல்லவேளையாக, இருவரும் சுயநினைவுடன் இருந்ததால், காயத்தின் அளவு குறைவாக இருக்கும் என இளவரசன் ஊகித்தான். அடிபட்டவரிடம், விபத்து எப்படி ஏற்பட்டது எனக் கேட்டான்.

"என் சொந்த வேலை காரணமாகக் காலையில் ஊருக்குச் சென்றேன். அந்தப் பணி முடிய மாலை நேரமாகிவிட்டது. அதனால், எப்படியாவது இரவுக்குள் மீண்டும் வீடு திரும்பிவிடலாம் என நினைத்து வண்டியை வேகமாக இயக்கினேன். விபத்து நடந்த இந்த இடத்திற்கு முன் ஒரு வளைவு இருந்தது. அந்த வளைவில் வண்டியை வேகமாகத் திருப்பியபோது, சாலையோரத்திலிருந்த கல்லைக் கவனிக்கத் தவறிவிட்டேன். கட்டுப்பாட்டை இழந்து என் வண்டி, அந்தக் கல்லில் மோதி நின்றுவிட்டது. வளைவில் வேகமாகத் திருப்பியதாலேயே இவ்விபத்து ஏற்பட்டது. என் மகள் அச்சத்தில் மிகவும் நடுங்கிக் கிடக்கிறாள்" என்று அவர், மெல்லிய குரலில் கூறி முடிக்கவும், அவசர ஊர்தி ஒலியெழுப்பிக் கொண்டே வந்து நிற்கவும் சரியாக இருந்தது.



Non Formal Book_20-24.indd 123 10-11-2020 13:06:29

அடிபட்டவரிடமிருந்து அவரது முகவரியையும் செல்பேசி எண்ணையும் கேட்டு, மறக்காமல் குறித்துக்கொண்டான் இளவரசன். அடிபட்டவரும் அவருடைய மகளும் அவசர ஊர்தியில் ஏறுவதற்கு இளவரசனும் நண்பனும் உதவினர். பின்னர், அவரிடமிருந்து பெற்ற அந்தச் செல்பேசி எண்ணுக்குத் தகவல் தெரிவித்தனர்.

வீட்டுக்கு வந்த இளவரசனிடம், அவன் தந்தை "என்னப்பா, புது வண்டி எப்படி இருக்கு? நன்றாக ஓட்டுவதற்குக் கற்றுக் கொண்டாயா?" எனக் கேட்டார். அதற்கு இளவரசன், "ஓ! நன்றாக ஓட்டுவது இருக்கட்டும். எப்படி ஓட்டக்கூடாது என்பதையும் நான் கற்றுக்கொண்டேன், அப்பா!" என்று கூறியவனை வியப்புடன் நோக்கினார் தந்தை. அப்போது, சாலைப் பாதுகாப்பு, நம் உயிர்ப் பாதுகாப்பு" என்று இளவரசனின் தங்கை பாடிக்கொண்டே சென்றாள். "அப்பா, புதுவண்டியுடன் எனக்குப் புதுத் தலைக்கவசமும் வாங்கிக் கொடுங்கள்" என்று இளவரசன் கூற, தந்தையின் முகத்தில் புன்னகை அரும்பியது.


### அறிந்துகொள்வோம்

**போக்குவரத்தினால் ஏற்படும் விபத்தினைத் தவிர்க்க உதவும் பத்துக் கட்டளைகள்**

| | |
|---|---|
| விதிகளை மதி | கோட்டுக்குள் ஓட்டு |
| கவனமாக ஓட்டு | இரவில் மிகையொளி பாய்ச்சாதே |
| முந்திச் செல்வதனைத் தவிர் | வண்டி ஓட்டும்போது, செல்பேசியில் பேசாதீர் |
| வேகத்தைக் குறை | மது அருந்திவிட்டு வண்டி ஓட்டாதீர் |
| நில் கவனி செல் | காவல்துறையோடு ஒத்துழை |

# கணக்கு

### அஞ்சலகத்தில் பணம் போடும் படிவம்




1 அஞ்சலகக் கிளை

2 தேதி

3 கணக்கு எண்

4 எடுக்கும் பணம் எழுத்தால்

5 எடுக்கும் பணம் எண்ணால்


6 கையொப்பம்



Non Formal Book_20-24.indd 124 10-11-2020 13:06:30

## பயிற்சிகள்

1. **கீழே கொடுக்கப்பட்ட படங்களில், நீங்கள் காணும் தவறுகளைப் பட்டியலிடுங்கள்.**

| | | |
|---|---|---|
|  |  |  |
|  |  |  |

2. **பொருத்துக.**

1. காவல்துறை – 108
2. தீயணைப்புத் துறை – 103
3. தீயணைப்புத் துறை ஊர்தி – 100
4. போக்குவரத்துக் காவல் துறை – 101
5. உடனடித் தேவைக்கான ஊர்தி – 102

2. **கீழ்க்காணும் படங்களைக் காணுங்கள். இத்தகைய விபத்துகள் நேர்ந்தால், என்னென்ன பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்? அவற்றுள் எவையேனும் ஐந்தைக் குறிப்பிடுக.**

| | |
|---|---|
|  |  |
| தீ விபத்து (கட்டடம் இடிந்து விழுதல்) | சாலைப் போக்குவரத்து விபத்து |



Non Formal Book_20-24.indd 125 10-11-2020 13:06:30

4. **பொருத்தமான சொல்லால் நிரப்புக.**

1. சாலையில் எப்போதும் -------- செல்லவேண்டும். (வலப்பக்கமாக/ இடப்பக்கமாக)
2. மகிழுந்தில் செல்லும்போது ------- அணிந்திருக்கவேண்டும். (கைக்கடிகாரம்/ இருக்கைப் பட்டை)
3. இரவில் மிதிவண்டியிலோ, இருசக்கர வண்டியிலோ செல்பவர்--------ஆடை அணிந்திருத்தல் நல்லது. (வெள்ளை/ கறுப்பு)
4. தொடர்வண்டிகள் செல்லும் இருப்புப்பாதையில் நாம் நடந்து --------(செல்லலாம்/ செல்லக்கூடாது.)

## கணக்கு

5. **பின்வரும் பற்றுச்சீட்டுகளைப் பூர்த்தி செய்க.**

1. அஞ்சலகக்கிளை
2. சேமிப்புக் கணக்கு எண்
3. தேதி
4. கணக்கு வைத்திருப்பவரின் பெயர்
5. செலுத்தும் தொகை
6. பணம் / காசோலை

| SB 103 | SB 103 |
|---|---|
| SB/RD/MIS<br>**POST OFFICE SAVINGS BANK**<br>………………………. Post Office<br>Account No : ………………………..<br>Date : ……………………<br>…………………………….. Paid into the credit of<br>…………………….. Rupees<br>…………………….<br>……………………………… Rs.<br>by cash/cheque No :<br>……………………………..<br>Date : …………………… by : ……………<br>bject to realisation)<br>SB Assistant ……………..<br>Date Stamp | **POST OFFICE SAVINGS BANK**<br>…………………………………….. Post Office<br>Account No. ……………………… Date : ……………………<br>…………………………...…………………………..……….. Paid into the credit of<br>Rupees ………………………….. Rs.<br>………………………………………………………<br>by cash/cheque No………… Date : ……………………<br>(Particulars of the cheque)<br>Balance after transaction ……………………………………………<br>SB Assistant …………………………<br>Date Stamp by ………………………….. |



Non Formal Book_20-24.indd 126 10-11-2020 13:06:30

## மதிப்பீடு – 5

**1. பின்வரும் சொற்களைச் சொல்லக் கேட்டு எழுதுக.**

1. தீயணைப்பு வீரர்கள்
2. நுழைவுச் சீட்டு
3. எரிவாயு
4. மின்விளக்கு
5. வேடிக்கை

**2. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. வேதவல்லியின் மகள் -----------படிப்பு முடித்திருந்தாள்.
2. கண்ணன், தன் அலைபேசியில் ------------வழி மூலம் இருக்கை முன்பதிவு செய்தான்.
3. நாம் உயிர் வாழ்வதற்குத் -----------காற்று தேவை.
4. மண் அரிப்பைத் தடுக்க, மரம் உதவுகிறது.

**3. பொருத்துக.**

1. டாக்டர் முத்துலட்சுமிரெட்டி – ஆதரவற்ற பெண்களுக்கான நிதி உதவி
2. ஈ வே. ரா. மணியம்மையார் – விதவை மறுமண நிதி உதவி
3. அன்னை தெரேசா – கலப்புத் திருமண நிதி உதவி
4. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் – விதவையர் மகள் திருமண நிதி உதவி

**4. வினாக்களுக்கு விடையளிக்க.**

1. வேதவல்லிக்கு நலத்திட்டங்கள் பற்றிக் கூறியவர் யார்?
2. மரத்தை வெட்டாமலிருக்க, கோபி சொல்லிய காரணம் என்ன?
3. பணமில்லாப் பரிமாற்றத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டு தருக.
4. நமக்கு உதவும் நலத்திட்டங்களுள் எவையேனும் இரண்டு எழுதுக.

**5. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. மரத்தில் ----------- கட்டி விளையாடலாம்.
2. நாம் உயிர் வாழ்வதற்குத் தூய்மையான ------ தேவை.
3. பூமி-------------ஆவதைத் தடுக்கிறது மரம்.
4. மண் அரிப்பைத் தடுக்க ------------ உதவுகிறது.
5. அபி, நடுவதற்காக வாங்கி வந்த மரக்கன்று ----------.



Non Formal Book_20-24.indd 127 10-11-2020 13:06:30

6. பின்வரும் பற்றுச்சீட்டைப் பூர்த்தி செய்க.

1. அஞ்சலகக்கிளை
2. சேமிப்புக் கணக்கு எண்
3. தேதி
4. கணக்கு வைத்திருப்பவரின் பெயர்
5. செலுத்தும் தொகை
6. பணம் / காசோலை.

SB 103

SB/RD/MIS

**POST OFFICE SAVINGS BANK**

………………………. Post Office

Account No : ………………………..

Date : ……………………

…………………………….... Paid into the credit of

…………………….. Rupees

…………………….

……………………………… Rs.

by cash/cheque No :

……………………………..

Date : …………………… by : ……………

bject to realisation)

SB Assistant ……………..

Date Stamp

SB 103

**POST OFFICE SAVINGS BANK**

…………………………………….. Post Office

Account No. ……………………… Date : ……………………

…………………………...……………………………...……….. Paid into the credit of

Rupees ………………………….. Rs.

…………………………………………………………

by cash/cheque No………… Date : ……………………

(Particulars of the cheque)

Balance after transaction ……………………………………………..

SB Assistant …………………………

Date Stamp by …………………………..



Non Formal Book_20-24.indd 128 10-11-2020 13:06:30

பாடம் 25

# பெண் கல்வி

**(மாலை நேரம். தேநீர்க் கடையொன்றில், தங்கராசுவும் நம்பியும் சந்தித்து உரையாடுகின்றனர்.)**

தங்கராசு : அட, நம்பியா, எப்படி இருக்கிறாய்? வீட்டில எல்லாரும் நலமா? ஆங்..... உன் பெண், பன்னிரண்டாம் வகுப்பு படிக்கிறாள் என்று சொல்லியிருந்தாயே? படிப்பெல்லாம் முடிந்ததா? எந்தக் கல்லூரியில் சேர்க்கப் போறப்பா?

நம்பி : எங்கேயும் சேர்க்கப் போறதில்ல.. படித்தது போதும். வீட்டு வேலையையும் கற்றுக் கொள்ளணுமில்ல....

தங்கராசு : என்னப்பா.. நீ,.. உம் பொண்ணு நன்றாகப் படிக்கிறாள் என்று நீ பெருமையாகச் சொன்னதுகூட எனக்கு நினைவிருக்கிறதே, மேலே படிக்க வை நம்பி.

நம்பி : இல்லப்பா... அவங்கம்மாவுக்கும் முன்னப்போல வேலையெல்லாம் செய்ய முடியல, பொம்பளப் பிள்ளை. அதுமட்டுமில்லாம, வேற வீட்டுக்குப் போகவேண்டிய பிள்ளை, நல்லா சமைக்கக் கத்துக்கணுமில்லே. கணக்குவழக்கு தெரிய, ஒரு கடுதாசி வந்தாப் படிக்க, வங்கியில பணம் போட, எடுக்க இதெல்லாம் தெரிந்தால் போதாதா? பன்னிரண்டாம் வகுப்பே போதும்பா.

தங்கராசு : இந்தக் காலத்துல இப்படி ஓர் அறியாமையா? பெண்ணோ, ஆணோ கல்வி மிகவும் அவசியம், நம்பி. மேற்படிப்பு படிக்கச் செல்லும்போதுதான், அவர்கள் வெளி உலக அனுபவம் பெறுகிறார்கள்.

நம்பி : அட, போப்பா, என்ன தெரிந்துகொண்டு என்ன ஆகப் போகுது?

தங்கராசு : அப்படிச் சொல்லாதே, நம்பி. உலக நடப்புகள் தெரியணும். அப்போதான் உலகோடு ஒன்றி வாழமுடியும் . சமூகத்தோடு இயைந்து வாழ, பொதுஅறிவு அவசியம் தெரியுமா? அதுமட்டுமில்லாமல் யாரிடம் என்ன திறமை இருக்கு என்று அடையாளம் காணவும் முடியும். அவர்களோட திறமை, புதிய கண்டுபிடிப்புகளாக இருக்கலாம். இல்லையென்றால் பங்களிப்பாக இருக்கலாம். அதனால் நாட்டுக்கும் வீட்டுக்கும் நன்மை. இதையும் நீ புரிஞ்சிக்கணும். யார் கண்டது? உம் பொண்ணும் ஒரு சாதனைப் பெண்ணா வரலாம் இல்லையா?

நம்பி : நீ சொல்வதெல்லாம் சரி. என் நிலைமையைக் கொஞ்சம் யோசி. இன்னும் இரண்டு ஆண்டிலே அவளுக்குத் திருமணம் செய்யணும். அதற்குப் பணம் சேர்க்கணும். இவளுக்கு அடுத்து இருக்கற பிள்ளையையும் படிக்க வைக்கணும். என் ஒருவன் வருமானத்தை வைத்துக்கொண்டு, மூன்று வருடமோ நாலு வருடமோ படிக்க வைக்கமுடியுமா? போக்குவரத்துச் செலவுக்கெல்லாம் கணக்கைப் போட்டா, என்னால தாங்கமுடியாது. அதனால, சொல்றது எளிமை. செய்யறது கடினம் தங்கராசு. என்னால் அவதிப்பட முடியாது.

தங்கராசு : அட, என்ன நம்பி, உனக்குமா வெளி உலகம் தெரியலே? நம்ம அரசாங்கம், படிக்கிற பிள்ளைகளுக்காக நிறைய இலவசமெல்லாம் அறிவித்திருக்காங்க அதனால, இது எதுக்குமே நீ கவலைப்படத் தேவையில்லை. உயர்கல்விக்குக் கட்டணம் இல்லை. அரசுக் கல்லூரிகளில் படிக்கும் பெண்குழந்தைகளுக்கு ஊக்க ஊதியம் வழங்கப்படுகிறது. மேலும், பேருந்தில் செல்ல, இலவசமாகப் பயண அட்டையும் அரசு கொடுக்கிறதே!

நம்பி : அப்படியா?

தங்கராசு : அதுமட்டுமா? படித்த பெண்ணுக்குத் திருமண உதவியாகப் பணமும் அரசு கொடுக்கிறது.

நம்பி : சரி, தங்கராசு. இவ்வளவு செய்தி சொல்லியிருக்க. அதனால என் பெண்ணைக் கல்லூரியில் கட்டாயம் சேர்க்கிறேன். ஆனா, பொண்ணு படிச்சா அதுக்குத் தகுந்த படிப்பு உள்ள பையனைப் பார்க்கணுமே! அந்தக் கவலை எனக்கு இருக்குப்பா.

தங்கராசு : இவற்றையெல்லாம் நினைத்துக் குழப்பமடையாதே! படித்த பெண் தெளிவாகவே இருப்பாள். பையனும் படித்தவனாக இருக்கும்போது எந்தச் சிக்கலும் வராது. 'கல்லாத பெண் களர்நிலம் அங்கே புற்கள் விளையலாம்; நல்ல புதல்வர்கள் விளைவதில்லை' என்று பாரதிதாசன் பாடியுள்ளார். அதனால, அச்சப்படாம தைரியமா உன் பெண்ணைக் கல்லூரியில சேர்க்கப்பாரு நம்பி.

நம்பி : சரி, நண்பா. என் கண்ணைத் திறந்திட்டீங்க. நீங்க சொல்றமாதிரியே நான் நடந்துகொள்கிறேன்.

தங்கராசு : இன்னொரு விஷயம், நம்பி. உன் பெண் என்ன படிக்க விரும்புகிறாளோ அதைப் படிக்க வை. உன் விருப்பத்துக்கு சேர்த்துவிடாதே! இந்தக் காலத்துக் குழந்தைகள் எல்லாம் நம்மைவிடத் தெளிவாகவே இருக்கிறார்கள். நல்ல முடிவெடுக்கும் திறனும் அவர்களிடம் இருக்கிறது. என்னப்பா, புரிந்துகொண்டாயா?

நம்பி : உம். . . நன்றாகப் புரிந்துகொண்டேன். சரிப்பா, நான் வருகிறேன் என்றபடி மிதிவண்டியை மிதிக்கத் தொடங்கினார் நம்பி.

உங்கள் வீட்டிலும் கல்லூரி செல்லும் வயதில் பெண்குழந்தைகள் உள்ளனரா? இன்னும் ஏன் யோசிக்கிறீங்க? மேற்படிப்பு படிக்க வைக்க முயற்சி செய்யுங்க.

# கணக்கு

**பட விளக்கக் காட்சி – தகவல் திரட்டுதல்**

ரகு தனது குடும்பத்தில் நடைபெறும் குடும்ப விழாவிற்காக தேவையான பழங்களை பழக்கடையில் வாங்கினார். அவற்றின் விவரங்கள் பின்வருமாறு.

| வரிசை எண் | பழங்களின் பெயர்கள் | அளவு (எண்ணிக்கையில்) |
|---|---|---|
| 1 | வாழைப்பழம் | 30 |
| 2 | பப்பாளிப்பழம் | 15 |
| 3 | கொய்யாப்பழம் | 18 |
| 4 | மாம்பழம் | 20 |
| 5 | சீத்தாப்பழம் | 12 |



**பின்வரும் கேள்விகளுக்கு விடையளிக்கவும்**

1. ரகு மொத்தம் எத்தனை வகை பழங்கள் வாங்கினார்?
2. எந்தப் பழம் அதிக எண்ணிக்கையில் வாங்கப்பட்டது?
3. எந்தப் பழம் குறைவாக வாங்கப்பட்டது?
4. எண்ணிக்கையில் 18 என வாங்கப்பட்ட பழம் எது?
5. முக்கனிகளில் இருகனிகளான வாழைப்பழம் மற்றும் மாம்பழங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

## பயிற்சிகள்

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

(ஊக்க ஊதியம், தங்கராசு, பன்னிரண்டாம், நம்பி, பாரதிதாசன்)

1. நம்பியின் மகள் -------------------------- வகுப்பில் படிக்கின்றாள்.
2. 'இந்தக் காலத்தில் இப்படி ஓர் அறியாமையா?' எனக் கூறியவர்----------.
3. 'சொல்வது எளிமை, செய்வது கடினம்' எனக் கூறியவர் ---------------.
4. அரசுக் கல்லூரிகளில் படிக்கும் பெண்களுக்கு ----------வழங்கப்படுகிறது.
5. 'கல்லாத பெண் களர்நிலம்...' என்று கூறியவர் ----------------------.



Non Formal Book_25-27.indd 131 10-11-2020 13:06:34

2. **கொடுக்கப்பட்ட சொல்லிலிருந்து புதிய சொல்லைக் கண்டுபிடித்து எழுதுக.**

1. தேநீர் – நீர்
2. வீட்டுவேலை – ---------
3. திருமணம் – ---------
4. பொதுஅறிவு – ---------
5. உயர்கல்வி – ---------
6. களர்நிலம் – ---------

3. **படத்தையும் பெயரையும் பொருத்துக.**

| | | |
|---|---|---|
|  | | தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலட்சுமி ரெட்டி |
|  | | கவிக்குயில் சரோஜினி தேவி |
|  | | இந்தியாவின் முதல் பெண் பிரதமர் |
|  | | தங்க மங்கை பி. டி. உஷா |
|  | | விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா |
|  | | கருணை அன்னை தெரேசா |

4. **வினாக்களுக்கு விடையளிக்க.**


1. நம்பி, தன் மகளை மேற்படிப்பு படிக்க வைக்க ஏன் விரும்பவில்லை?
2. தன் மகள் பன்னிரண்டாம் வகுப்பு படித்ததே போதும் என நம்பி ஏன் கூறினார்?
3. தங்கராசு மேற்படிப்பு படித்தால் என்ன பயன் விளையும் எனக் கூறினார்?
4. பெண்கல்வியின் தேவை குறித்துப் பாரதிதாசன் என்ன கூறியுள்ளார்?



Non Formal Book_25-27.indd 132 10-11-2020 13:06:34

5. செவ்வக வரைபடம்

**இதழ்கள் படிப்போரின் விவரப்பட்டியல் கீழேஉள்ள செவ்வக விளக்கப்படத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.**




**பின்வரும் விவரங்களுக்கு விடையளிக்க**

1. விளக்கப்படத்தில் எத்தனை இதழ்கள் குறிக்கப்பட்டுள்ளன?
2. எத்தனை பேர் தினசரி இதழ்கள் வாசிக்கின்றனர்?
3. 300 பேர் எந்த இதழை வாசிக்கின்றனர்?
4. மிகக்குறைவான எண்ணிக்கையில் வாசிக்கப்படும் இதழ் எது?
5. தினசரி இதழ் மற்றும் வார இதழ் வாசிப்போர்களின் எண்ணிக்கைக்கு இடையே உள்ள வித்தியாசம் எவ்வளவு?



Non Formal Book_25-27.indd 133 10-11-2020 13:06:35

பாடம்
26

# திருவிழாவில் ஒரு விழா

இராமு வழக்கம்போல் காலையிலேயே எழுந்து குளித்துவிட்டு நல்ல உடை உடுத்திக் கொண்டார். அவர் மனைவி கனகாவும் பார்த்த பார்த்து நல்ல புடைவையாக உடுத்திக் கொண்டார். இருவரும் வீட்டைவிட்டு வெளியே கிளம்பினார்கள்.

அந்த நேரம் பக்கத்து வீட்டு சுப்பு, "என்ன ராமுண்ணா? இருவரும் வெளியே கிளம்பிவிட்டீர்கள் போலும். இன்று வேலைக்குப் போகவில்லையா?" என்று கேட்டார். அதற்கு இராமு, "தினமும்தான் வேலைக்குப் போகிறோம். இன்று ஒரு நாளாவது நம் கிராம மக்களுக்காக, நமக்காகப் பேசுவோம் என்றுதான் கிராமசபை கூட்டத்திற்குப் போகிறோம்". அதுமட்டுமில்லாம, கிராம சபை கூட்டம் ஆண்டுக்கு நாலுமுறைதான் கூடும். அதாவது,

குடியரசு தினம் – ஜனவரி 26

தொழிலாளர் தினம் – மே 1

சுதந்திர தினம் – ஆகஸ்ட் 15

காந்தி பிறந்த நாள்– அக்டோபர் 2.

R7M8Q6

ஆகிய நாள்களில் மட்டும்தான். இன்று குடியரசு நாள் அல்லவா, அதனால்தான் கிராம சபை கூட்டத்தைக் கூட்டியுள்ளார்கள் என்றார்.

"ஆமாம். இராமுண்ணா, கூட்டம் கூடுவதற்கு 7 நாளுக்கு முன்பே நம் கிராமத்தில தகவல் கொடுத்தார்களே. அப்படியென்றால், நீங்கள் இருவரும் கிராம சபைக்குத் தான் போறீங்களா?" என்று கேட்டார் சுப்பு.

"ஆமாம் தம்பி. எனக்கு நேரம் ஆகிவிட்டது. மீதியை நாங்க வந்த பிறகு பேசிக்கொள்வோம்" என்று கூறிவிட்டுக் கிராம சபை கூட்டம் நடக்கும் இடம்நோக்கி, இருவரும் நடக்க ஆரம்பித்தனர்.

இருவரும் கிராம சபை கூட்டத்திற்குள் நுழையும் நேரத்தில் பஞ்சாயத்துத் தலைவர் தலைமையேற்றுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்தார். கூட்டத்தில் எல்லாப் பிரிவு மக்களும் கலந்து கொண்டனர். இடையிடையே மக்கள் கிராம நலன் சார்ந்த வினாக்களைக் கேட்டனர். கூட்டத்தில் ஆண்டு வளர்ச்சித்திட்டம், வரவுசெலவு கணக்குத் தணிக்கைக்கு ஒப்புதல் தருதல் போன்ற நிகழ்வுகள் நடந்தன. கிராம இளைஞர்களுக்கான படிப்புதவி, வேலை வாய்ப்பு வசதி, சுகாதார வசதி, சாலை வசதி முதலியவற்றைப் பற்றி விவாதித்தனர்.

கூட்டத்தில் கலந்துகொண்ட கனகா, "ஐயா, நான் நாள்தோறும் காலை 5.00 மணிக்கே வேலைக்குப் போயிடறேன். என்கூட கலா, விமலா, ஆனந்தி எல்லாரும் வர்றாங்க. நீங்கள் தண்ணீர் திறந்துவிடுவதற்குள் நாங்கள் போய்விடுவதால். பிள்ளைகளால் முழுமையாகத் தண்ணீர் பிடிக்க முடியல. அதனால், நாங்கள் இருக்கும் நேரத்திலேயே தண்ணீர் திறந்துவிட்டால் நன்றாக இருக்கும்"



Non Formal Book_25-27.indd 134 10-11-2020 13:06:35

என்று கூற, எல்லாரும் "ஆமாம், ஐயா" என்றனர். கிராம சபாவும் அதை ஏற்றுக்கொண்டது.

அரசு வளர்ச்சி நலத்திட்டங்கள், செயல்பாடுகள் பற்றிக் கூட்டத்தில் ஆய்வு செய்தனர். பலருடைய கருத்துகள் வரவேற்கப்பட்டன. அனைவரிடமும் கையொப்பம் வாங்கினர். தீர்மானங்கள் வட்டார வளர்ச்சி அலுவலகத்துக்கும் (பி.டி.ஓ) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கும் அனுப்ப முடிவுசெய்யப்பட்டன. கூட்டம் நிறைவு பெற்றதும் அனைவரும் கலைந்து சென்றனர். இராமுவும் கனகாவும் கிராமசபை கூட்டத்தில் பங்கு கொண்ட மனநிறைவோடு தம் வீட்டிற்குச் சென்றனர்.

# கணக்கு

### அலைபேசி ரீசார்ஜ் திட்டங்களை அறிதல்

கபிலன் : ( கடைக்காரரிடம்) 78 ரூபாய் ரீசார்ஜ் செய்யுங்கள்.

பாரி : வாங்க, அண்ணே! ஒருகிலோ அரிசி தாங்க.

கபிலன் : அடடே! பாரி எப்படி இருக்கே?

பாரி : நல்லாயிருக்கேன் அண்ணே. நீங்க எப்படி இருக்கீங்க?

கபிலன் : எங்கப்பா? வரவுக்கும் செலவுக்கும் சரியா இருக்கு. பாரு, நேற்றுத்தான் 78 ரூபாய் ரீசார்ஜ் செஞ்சேன். மறுபடியும் இன்னைக்குப் பண்றேன்.

பாரி : என்ன திட்டம் (plan) அண்ணா ரீசார்ஜ்?

கபிலன் : ஆ, அது என்னப்பா, நான் 78 ரூபாய்க்குத்தான் ரீசார்ஜ் பண்னேன்.

பாரி : அண்ணா, நீங்க 78 ரூபாய்க்குப் பண்ணாலும் அந்த 78 ரூபாய்க்கு எந்தத் திட்டத்தில போட்டிருக்கிறீங்க என்பதைப் பொருத்து இருக்கு. உங்களுக்கு விளக்கமாச் சொல்றேன், கேளுங்கள்.

ரீசார்ஜ் செய்வதற்கு அலைபேசி நிறுவனங்கள் பல ரீசார்ஜ் திட்டங்கள் கொண்டுள்ளன. நம் பயன்பாட்டிற்குத் தகுந்த திட்டத்தைத் தேர்ந்தெடுத்து ரீசார்ஜ் செய்தால் செலவு குறையும்.

ரீசார்ஜ் திட்டத்தைத் தேர்ந்தெடுக்க நாம் சில விஷயங்களைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

- உள்ளூர் எண்களுக்கு / வெளிமாநில எண்கள் வெளிநாட்டு எண்கள்
- இணையப் பயன்பாடு
- நாள்கள்

நான் அதிகம் பயன்படுத்துவதால் திட்டம் 1 ஐத் தேர்ந்தெடுக்கிறேன். நீங்கள் எந்தத் திட்டத்தைத் தேர்ந்தெடுப்பீர்கள்?

| SI NO | Data STV/Data Combo Voucher in Rs. (Inclusive of Service Tax) | Existing Total Bundled Free Usage | **Revised Total Bundled Free usage** | Validity of Freebies (In calendar Days ) |
|---|---|---|---|---|
| 1 | 78 | 1 GB | **2 GB** | 5 |
| 2 | 98 | 650 MB | **1 GB** | 14 |
| 3 | 155 | 1 GB | **2 GB** | 15 |
| 4 | 156 | 2 GB | **3 GB** | 10 |
| 5 | 198 | 1 GB | **3 GB** | 24 |
| 6 | 292 | 2 GB | **8 GB** | 30 |
| 7 | 444 | 3 GB | **8 GB** | 60 |
| 8 | 451 | 2 GB + Rs 80 TV | **6 GB + Rs 80 TV** | 60 |
| 9 | 549 | 10 GB | **15 GB** | 30 |
| 10 | 561 | 5 GB | **11 GB** | 60 |
| 11 | 821 | 6 GB | **15 GB** | 60 |
| 12 | 3099 | 15 GB + unlimited on net+ 500 min off net (Local/STD/Roaming) OG Voice calls | **20 GB + Unlimited Local/STD (On net/offnet) (Home/National Roaming)+ 3000 SMS any net** | 60 |



Non Formal Book_25-27.indd 135 10-11-2020 13:06:35

## பயிற்சிகள்

### 1. பின்வரும் தொடர்களை எழுதிக்காட்டுக.

1. இராமுவும் கனகாவும் கிராமசபை கூட்டத்திற்குச் சென்றனர்.

   ------------------------------------------

2. கிராமசபை கூட்டம் ஆண்டுக்கு நான்குமுறைதான் கூடும்.

   ------------------------------------------

3. கிராமசபை கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

   ------------------------------------------

### 2. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. குடியரசு நாள் | – | அக்டோபர் 2 |
| 2. தொழிலாளர் நாள் | – | ஜனவரி 26 |
| 3. காந்தி பிறந்த நாள் | – | ஆகஸ்டு 15 |
| 4. விடுதலை நாள் | – | மே 1 |

### 3. சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கிராமசபை ஆண்டுக்கு -------முறைதான் கூடும். (மூன்று / நான்கு)
2. கிராமசபை கூட்டம் கூடுவதற்கு ------நாளுக்கு முன்பே தகவல் தெரிவிப்பர். (6 / 7)
3. கூட்டத்திற்குத் தலைமையேற்றவர்---------- (பஞ்சாயத்துத் தலைவர்/ இராமு)
4. காலையில் 5 மணிக்கே வேலை செல்வதாகக் கூறியவர் -------(கலா/ கனகா)
5. இராமுவும் கனகாவும் ------ வீட்டுக்குச் சென்றனர். (வருத்தமுடன் / மனநிறைவுடன்)

### 4. வினாக்களுக்கு விடையளிக்க.

1. இராமுவும் கனகாவும் எங்குச் சென்றனர்?
2. இராமுவின் பக்கத்து வீட்டில் வசித்தவரின் பெயர் என்ன,
3. கிராமசபை கூட்டத்தில் எவற்றைப் பற்றி விவாதித்தனர்?
4. கூட்டத்தில் கனகா என்ன கூறினாள்?
5. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை யாருக்கெல்லாம் அனுப்பினர்?



Non Formal Book_25-27.indd 136 10-11-2020 13:06:35

## 5. பின்வரும் திட்டங்களில் ஏற்றதைத் தேர்ந்தெடுக்க.

**ரீசார்ஜ்**

1. இரவி தன் வீட்டுப்பாடம் செய்ய நிறைய படங்கள் பதிவிறக்கம் செய்யவேண்டும்.
2. ஹரி தன் கடையை விரிவாக்கம் செய்ய அதிகம் உள்ளூர் வாடிக்கையாளரிடம் பேசவேண்டும்.
3. மீனா தம் ஊரிலிருந்து சிங்கப்பூர் சுற்றுலா சென்றுள்ள தன் தந்தையிடம் பேசவேண்டும்.

**திட்டம் 1**

| Data STV/Data Combo Voucher in Rs. (Inclusive GST) | Total bundled free Usage | Validity of freebies (in calendar days)# | Data Charges after freebies*** |
|---|---|---|---|
| Minipack 7 | 1 GB | 1 | |
| Minipack 16 | 2 GB | 1 | |
| 56 | 1.5 GB/day | 14 | 3p/10KB |
| 109(EZ only)**/ | 1536 MB + free PRBT | 25 | 3p/10KB |
| 198(including SZ)* | 2 GB/day + free PRBT | 54 | 3p/10KB |
| 1098 | Unlimited data without speed restriction+ Unlimited Voice (Home/National Roaming)+ free 100 SMS/day + free PRBT | 84 | 3p/10KB |
| 1498 | 91 GB | 365 | 3p/10KB |

**திட்டம் 2**

| Price of Prepaid discount deal/coupon product STVs (In Rs.) (inclusive of GST) | Data/Voice/PRBT content value | Additional content value(Rs. 5/-) | Validity in Calender days from the date of activation |
|---|---|---|---|
| 104/- | As per existing prepaid STV Rs 99/- | One national discount deal/coupon product daily | 26 days |
| 192/- | As per existing prepaid STV Rs 187/- | One national discount deal/coupon product daily | 28 days |

**திட்டம் 3**

| Data STV in Rs. (Inclusive GST) | Free data download | Free no. of TV Channels | Validity of freebies(in Calendar days)# |
|---|---|---|---|
| 223 | 1 GB | 80 free channels provided by M/s. SITI Networks | 28 |
| 182 | 1 GB | 50+channels provided by M/s. Apalya | 17 |
| 179 | 1 GB | All channels provided by M/s Digivive | 17 |
| 178 | 1 GB | 70 channels provided by M/s. P.K. Online | 17 |
| 103 | 1 GB | 140+ Channel provided by M/s Digivive | 5 |
| 82 | 450 MB | All channels provided by M/s Exnxt | 12 |
| 17 | 100 MB | 30+ channels provided by M/s. Apalya | 2 |

பாடம்
27

# தூய்மை பாரதம்

"என்ன வெளியில் ஒரே சத்தம்?"

"ஏதோ ஊர்வலம் போறாங்க பசங்க. கூடவே வாத்தியாரம்மா, நர்சம்மா எல்லாரும் போறாங்க..." எட்டிப் பார்த்தார் கண்ணம்மா.

"சுத்தம் சோறு போடும்", " வீட்டைச்சுற்றி நீர் தேங்காமல் பார்த்துக்கொள்வோம்", "குடிநீர் பாத்திரங்களை மூடி வைத்துப் பயன்படுத்துவோம்" இம்மாதிரியான பதாகைகளை ஏந்தியபடி மாணவர்கள் வந்த குழுமினர்.

கண்ணம்மா வீட்டின் அருகிலிருந்த பெரிய பாதாம் மரத்தின்கீழ் அவர்கள் அனைவரும் ஒன்று கூடினர். அத்தெருவிலுள்ள பெண்கள் அனைவரும்'என்ன நடக்கிறது இங்கே' என்றபடி நெருங்கி வந்தனர்.

சுகாதாரத்துறை அலுவலர் சுத்தமாக இருப்பதைப் பற்றிப் பேசினார். இதைக்கேட்டுக் கொண்டிருந்த மரகதம்மாள், "ஏன் சார், நாங்க சுத்தமாகத் தானே இருக்கோம்? நாள்தோறும் குளிக்கிறோம். வீட்டைக் கழுவி, துணிமணிகளைத் தோய்த்து நல்லாத்தானே இருக்கோம்? இதைப் போய் சொல்ல வந்துட்டீங்களே?" என்றார்.

"சரிம்மா, நாம சுத்தமானவங்கதான். ஆனால், சில சமயம் அலட்சியமா இருந்திடறோம். அதனால, பல உயிர்க்கொல்லி நோய்கள் ஏற்பட்டு, நம் உயிரைக்கூட இழக்க நேரிடுகிறதே? சரி, இப்ப நான் கேட்கறதுக்குக் கொஞ்சம் பதில் சொல்லுங்க, நம்ம வீட்ல மாவு அரைக்க, அரிசி குத்த, சட்டினி அரைக்க என்று அம்மி, ஆட்டுக்கல், உரல் இதெல்லாம் பயன்படுத்தியிருப்போம்ல, இப்ப அதெல்லாம் எங்க வச்சிருக்கீங்க?"

"அது பழைய காலம் சார், இப்போ கிரைண்டர், மிக்ஸி இயந்திரங்கள் எல்லாம் வந்தாச்சு. அதனால, நீங்க சொல்ற அம்மியும் ஆட்டுக்கல்லும் தோட்டத்துல கெடக்கு சார்" என்று மரகதம் பதில் சொன்னாள்.

"சுத்தமா இருக்கோம்னு சொன்னீங்களே, இப்ப நீங்க பயன்படுத்தாம இருக்கிற அந்தப் பொருள்களில் இருக்கிற குழிகளிலே மழைத் தண்ணீர் தேங்கியிருக்கும். அந்தத் தண்ணீரில் கொசு முட்டையிடும். பின்பு நம்மைக் கடிக்கும். அதேபோலப் பயன்படுத்திட்டுத் தூக்கி எறிந்த தேங்காயின் ஓடு, நெகிழி (பிளாஸ்டிக்) கிண்ணங்கள், ரப்பர்க் குழாய்கள் (டயர்) இவற்றிலெல்லாம்கூடத் தேங்கி நிற்கிற தண்ணீரில கொசுக்கள் முட்டையிடுவதால், கொசுக்களோட எண்ணிக்கை பெருகும்."

"ஏன் சார், சாக்கடைத் தண்ணியிலதான கொசுமுட்டை இடும். மழைத் தண்ணி நல்ல தண்ணிதானே சார்?" கேள்வி கேட்டார் மங்கை.

"நல்லாக் கேட்டீங்கம்மா. இந்த மாதிரி நல்ல தண்ணியிலதான் 'ஏடிஸ், ஏஜிப்தி, கொசு' உருவாகும். அதனால, நாம குடிப்பதற்குப் பயன்படுத்துகின்ற தண்ணீர்ப் பாத்திரம்முதல் மேல்நிலைத் தண்ணீர்த்



Non Formal Book_25-27.indd 138 10-11-2020 13:06:36

தொட்டிவரை மூடி வைக்கவேண்டும். நாள்தோறும் அவற்றைத் தூய்மைப் படுத்தவேண்டும். நம்மைச் சுற்றி எந்த இடத்திலும் எந்தப் பொருளிலும் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தக் கொசு பகலில்தான் நம்மைக் கடிக்கும்."

"அட, கடித்துவிட்டுப் போகட்டும் விடுங்க. கொசுதானே… என்னாகப் போகுது" என்றார் செல்வராசு.

"நான் சொல்றத கவனமாகக் கேளுங்க. இந்த 'ஏடிஸ்' கொசுவால்தான் 'டெங்கு காய்ச்சல்' உருவாகிறது. இதனை நாம் அலட்சியப்படுத்தினால், உயிரிழப்புகூட ஏற்படலாம்."

"அப்படியா? இந்த டெங்கு காய்ச்சல் ஏற்பட்டிருக்கிறத நாங்க எப்படித் தெரிந்துகொள்வது? என்றார் வள்ளியம்மாள்.

"காய்ச்சல், சோர்வு, தலைவலி, உடல்வலி, வாந்தி, வயிற்றுவலி, கண்ணுக்குப் பின்புறம் வலி, எலும்பு, மூட்டுகளில் வலி' இதெல்லாம் இந்தக் காய்ச்சலோட அறிகுறிகள். மேலும், காய்ச்சல் வந்தவருக்கு இரத்தத் தட்டணுக்களின் எண்ணிக்கை 3 இலட்சத்திலிருந்து 20 ஆயிரத்துக்கும் கீழே குறைந்துவிடும். இதனால் உயிரிழப்பு ஏற்படும் ஆபத்து உண்டு."

"அப்படியும் காய்ச்சல் வந்துட்டா என்ன செய்வது சார்?"

"உடனடியாக அரசு மருத்துவமனைக்குச் செல்லவேண்டும். மருத்துவர் ஆலோசனைப்படி இரத்தப் பரிசோதனை செய்து கொள்ளவேண்டும். மருந்துக் கடைகளில் நாமாகவே மாத்திரைகளை வாங்கி உட்கொள்வதைத் தவிர்க்கவேண்டும். மருத்துவர் ஆலோசனையைப் பின்பற்றவேண்டும்."

"ரொம்ப நன்றிங்க ஐயா, பயன்படுத்தாம கிடக்கும் உடைந்த பொருள்கள், தொட்டிகள் என்று எதிலும் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்கிறோம் என்றார் செல்வராசு.

நாட்டு மக்களின் நலனுக்காகவே நமது பாரதப் பிரதமர் அவர்கள் "தூய்மை பாரதம்" என்னும் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளார். இத்திட்டம், வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகிறது என்றார்."

சுகாதார அலுவலர் கூறிய செய்தியைப் பொதுமக்கள் மட்டுமின்றி, மாணவர்களும் கவனமாகக் கேட்டனர். 'டெங்கு காய்ச்சல்' தோன்றுவதற்கான காரணத்தையும் அதனைத் தவிர்க்கும் முறைகளையும் தெளிவாக அறிந்துகொண்டனர். தங்களுடைய வீடுகளை மட்டுமின்றிப் பள்ளியையும் தூய்மையாக வைத்துக்கொள்வோம் என்று ஆசிரியர்களிடம் உறுதி கூறினர்.

# கணக்கு

### பீம் செயலி – (BHIM)

செல்வி : கயல், நாளை என் பேத்தியின் காதணிவிழா, அவளுக்கு நகை வாங்கவேண்டும்.

கயல் : சரி அக்கா, வாங்கிவிடலாம்.

செல்வி : ஆனால், கயல் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆயிற்றே! நான் வங்கியிலிருந்து பணம் எடுக்கமுடியுமா?

கயல் : கவலைப்படாதே, அக்கா. உன் வங்கிக் கணக்கிலிருந்து கடைக்காரர்க்குச் செயலிவழியாகக் கொடுக்கலாம்.



Non Formal Book_25-27.indd 139 10-11-2020 13:06:36

செல்வி : என்ன செயலியா?

கயல் : ஆமாம், அக்கா.அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட அலைபேசி செயலி (BHIM) பீம் ஆகும்

BHIM
BHARAT INTERFACE FOR MONEY

(BHIM) பீம் என்பது, இந்தியா அரசால் பணமில்லாப் பரிமாற்றத்தை ஊக்குவிக்க ஏற்படுத்தப்பட்ட செயலி. இதன்வழியாக எளிமையாகவும், பாதுகாப்பாகவும் பணமில்லாப் பரிவர்த்தனைகள் பரிமாற்றம் செய்யமுடியும்.

பீம் செயலிவழியாகச் செய்யக்கூடிய பரிவர்த்தனைகள்

K6G3U4

- ❖ பணம்கொடுத்தல் / பெறுதல்
- ❖ தொலைபேசிக் கட்டணம் / அலைபேசிக் கட்டணம்
- ❖ மின்கட்டணம்
- ❖ சமையல் எரிவாயு
- ❖ இணையக் கட்டணம்
- ❖ தண்ணீர்க் கட்டணம்

செயலியைப் பயன்படுத்த முதலில் அதனை பதிவு செய்யவேண்டும்.

பதிவு செய்யும்போது, பயன்படுத்தும் அலைபேசியில், வங்கிக்கணக்கில் இணைக்கப்பட்ட அலைபேசிஎண் இருக்கவேண்டும்.

முதன்முதலாகச் செயலியைப் பயன்படுத்தும்போது, உங்கள் வங்கிக்கணக்கிற்கான (டெபிட்கார்ட்) கடன்அட்டையைக் கொண்டுதான் செயல்படுத்த வேண்டும்.

செயலியைத் தரவிறக்கம் செய்தல் | மொழியைத் தேர்ந்தெடுத்தல் | எச்சரிக்கையுடன் பயன்படுத்துதல்



1





2



3



Non Formal Book_25-27.indd 140 10-11-2020 13:06:36

| பயன்பாட்டைத் தேர்ந்தெடுத்தல் | மாதாந்திர கட்டணம் செலுத்தும் திரை | கடைகளில் பணம் செலுத்தும் திரை |
|---|---|---|
|  |  |  |







## பயிற்சிகள்

**1. பின்வரும் சொற்களைப் படித்துக்காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| குடிநீர் | பாத்திரங்கள் | பதாகை | சுகாதாரத் துறை |
| அலுவலர் | காய்ச்சல் | இயந்திரம் | தூய்மை பாரதம் |

**2. தூய்மை தொடர்பான பழமொழிகளைப் படித்து எழுதுக.**

1. கூழானாலும் குளித்துக் குடி
2. கந்தையானாலும் கசக்கிக் கட்டு
3. சுகாதாரம் நாட்டைக் காக்கும்.
4. சுத்தம் சுகம் தரும்.
5. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

**3. படம் பார்த்துப் பெயர் எழுதுக.**

| | | |
|---|---|---|
|  |  |  |
| | | |



Non Formal Book_25-27.indd 141 10-11-2020 13:06:38

**4. குறுக்கெழுத்துப் புதிரை நிரப்புக.**

1. _______________

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ம | |
| பா | த் | தி | | ம் |
| | | | ம் | |

2. _______________

| | | | |
|---|---|---|---|
| | | உ | |
| தோ | ட் | | ம் |
| | | ல் | |

**5. வினாவிற்கு விடையளிக்க.**

1. டெங்கு காய்ச்சலைப் பரப்பும் கொசுவின் பெயரை எழுதுக.


2. கொசு உற்பத்தியாகும் இடங்களுள் ஒன்றைக் குறிப்பிடுக.

3. பயன்படுத்தாத அம்மி, ஆட்டு உரல் போன்றவற்றை என்ன செய்யவேண்டும்?


4. டெங்கு காய்ச்சலுக்குரிய அறிகுறிகள் யாவை?


5. டெங்கு காய்ச்சலைப் பரப்பும் கொசு, நம்மை எப்பொழுது கடிக்கும்?

**6. படிகளை வரிசைப்படுத்துக.**









○ ○ ○ ○



Non Formal Book_25-27.indd 142 10-11-2020 13:06:38

## மதிப்பீடு – 6

**1. பின்வரும் சொற்களைப் படித்துக்காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| குடிநீர் | பாத்திரங்கள் | பதாகை | சுகாதாரத் துறை |
| அலுவலர் | காய்ச்சல் | இயந்திரம் | தூய்மை பாரதம் |

**2. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

(ஊக்க ஊதியம், தங்கராசு, பன்னிரண்டாம், நம்பி, பாரதிதாசன்)

1. நம்பியின் மகள் -------------------------- வகுப்பில் படிக்கின்றாள்.
2. 'சொல்வது எளிமை, செய்வது கடினம்' எனக் கூறியவர் ---------------.
3. அரசுக் கல்லூரிகளில் படிக்கும் பெண்களுக்கு ----------வழங்கப்படுகிறது.

**3. கொடுக்கப்பட்ட சொல்லிலிருந்து புதிய சொல்லைக் கண்டுபிடித்து எழுதுக.**

1. தேநீர் – ---------
2. பொதுஅறிவு – ----------
3. உயர்கல்வி – ----------

**4. வினாக்களுக்கு விடையளிக்க.**

1. நம்பி, தன் மகளை மேற்படிப்பு படிக்க வைக்க ஏன் விரும்பவில்லை?
2. இராமுவும் கனகாவும் எங்கே சென்றனர்?
3. தங்கராசு மேற்படிப்பு படித்தால் என்ன பயன் விளையும் எனக் கூறினார்?
4. டெங்கு காய்ச்சலைப் பரப்பும் கொசுவின் பெயர் என்ன?
5. டெங்கு காய்ச்சலுக்குரிய அறிகுறிகளை எழுதுக.

**5. பின்வரும் தொடர்களை எழுதிக்காட்டுக.**

1. இராமுவும் கனகாவும் கிராமசபை கூட்டத்திற்குச் சென்றனர்.

---------------------------------------------

2. கிராமசபை கூட்டம் ஆண்டுக்கு நான்குமுறைதான் கூடும்.

---------------------------------------------



Non Formal Book_25-27.indd 143 10-11-2020 13:06:38

**6. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | குடியரசு நாள் | – | அக்டோபர் 2 |
| 2. | தொழிலாளர் நாள் | – | ஜனவரி 26 |
| 3. | காந்தி பிறந்த நாள் | – | ஆகஸ்டு 15 |
| 4. | விடுதலை நாள் | – | மே 1 |


**7. ரகு தனது குடும்பத்தில் நடைபெறும் குடும்ப விழாவிற்காகப் பழக்கடையில் பழங்கள் வாங்கினார். அவற்றின் விவரம் பின்வருமாறு:**

| வ.எண் | பழங்களின் பெயர்கள் | அளவு (எண்ணிக்கையில்) |
|---|---|---|
| 1 | வாழைப்பழம் | 30 |
| 2 | பப்பாளிப்பழம் | 15 |
| 3 | கொய்யாப்பழம் | 18 |
| 4 | மாம்பழம் | 20 |
| 5 | சீதாப்பழம் | 12 |

அட்டவணையைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.


1. எத்தனை பழங்கள் கொடுக்கப்பட்டுள்ளன?
2. எந்தப் பழம் அதிக எண்ணிக்கையில் வாங்கப்பட்டது?
3. எந்தப் பழம் குறைவாக வாங்கப்பட்டது?

**8. படிகளை வரிசைப்படுத்துக.**















Non Formal Book_25-27.indd 144 10-11-2020 13:06:38

பாடம் 28

# விண்ணப்பம்

## வங்கிக் கடன் வேண்டி விண்ணப்பித்தல்

திருவூர்
05 – 05 – 2020

அனுப்புநர்

கா. மணியம்மாள், க/பெ. கார்த்திகேயன்
27, பூந்தோட்டத் தெரு,
திருவூர் ஊராட்சி
திருவள்ளூர் மாவட்டம்.
அஞ்சல் குறியீட்டு எண் – 602 025.

பெறுநர்

பொது மேலாளர்
இந்தியன் வங்கி,
திருவூர் கிளை.
திருவள்ளூர் மாவட்டம்.

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள் : சுயதொழில் மேம்படுத்த, வங்கிக் கடன் வேண்டுதல் – சார்பாக.**

வணக்கம். நான் திருவூர் ஊராட்சியில் சொந்த வீட்டில் வசித்து வருகின்றேன். தையல் கடை மூலம் நிரந்தர வருமானம் ஈட்டுகிறேன். சுயதொழிலை மேலும் விரிவு செய்வதற்குத் தையல் இயந்திரங்கள் வாங்க விரும்புகிறேன். ஆகையால், பிரதம மந்திரியின் முத்ரா யோஜனா திட்டத்தின்கீழ் ரூ. 50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம்) மட்டும் தனிநபர் கடன்வகை மூலம் வழங்குமாறு வேண்டுகிறேன்.

இவ்விண்ணப்பத்துடன் தேவையான ஆவணங்களின் நகல்களையும் இணைத்துள்ளேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
(கா. மணியம்மாள்)

இணைப்பு

1. வீட்டுவரி கட்டிய பற்றுச்சீட்டு
2. கடன் நிலுவையில் இல்லை என்பதற்கான உறுதிச்சான்று



Non Formal Book_25-27.indd 145 10-11-2020 13:06:39

## சாலை வசதி கேட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விண்ணப்பம் எழுதுக

அனுப்புநர்

கா. மணியம்மாள், க/பெ. கார்த்திகேயன்
27, பூந்தோட்டத் தெரு,
திருவூர் ஊராட்சி
திருவள்ளூர் மாவட்டம்.
அஞ்சல் குறியீட்டு எண் – 602 025.

பெறுநர்

மாவட்ட ஆட்சித் தலைவர்
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
திருவள்ளூர் மாவட்டம்.

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள் : சாலை வசதி வேண்டுதல் – சார்பாக.**

தங்கள் உண்மையுள்ள,



Non Formal Book_25-27.indd 146 10-11-2020 13:06:39

# கற்போர் இறுதி மதிப்பீடு

## (மதிப்பீடு – 7)

கற்போர் பெயர் : ____________________ கிராமம் / வார்டு :____________

ஒன்றியத்தின் பெயர் : ____________________ மாவட்டம்:_________________

### அ. படித்தல் (மொத்தம் 40 மதிப்பெண்கள்)

**1. பின்வரும் தொடர்களைப் படித்துக்காட்டுக. (5 x 2 = 10 மதிப்பெண்கள்)**

1.1 தம்பி பழம் பறித்தான்

1.2 கற்போர் வாழ்வில் ஏற்றம் உண்டு.

1.3 வாக்களிப்பது நம் உரிமையும் கடமையும் ஆகும்.

1.4 எழுத, படிக்கக் கற்றுக்கொள்வதற்கு வயது தடையில்லை.

1.5 உடல்நலம் காக்கும் உணவுகளையே உண்ணவேண்டும்.

**2. செய்தித்தாளில் இடம்பெற்றுள்ள தொடர்களைப் படித்துக்காட்டுக. (5 x 3 = 15 மதிப்பெண்கள்)**

2.1 தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு 1993 முதல் நடத்தப்படுகிறது.

2.2 மாநகராட்சியின் நடவடிக்கைகளால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

2.3 மருத்துவ உபகரண உற்பத்தி பூங்காவை நிறுவ மத்திய அரசு அனுமதியளித்தது.

2.4 ஒலிம்பிக்கில் பங்கேற்க, இந்திய வீரர் தோமர் தகுதி பெற்றுள்ளார்.

2.5 காற்று மாசற்ற பயணம் மேற்கொள்ள மெட்ரோ ரெயில் நிறுவனம் அழைக்கிறது.

**3 .உரைப்பகுதியைப் படித்து, வினாக்களுக்கு விடையளித்திடுக. (5 x 3 = 15 மதிப்பெண்கள்)**

பாத்திமா பாட்டி சென்னையில் வசிக்கிறார். அவரின் பிள்ளைகள் வெளியூரில் வேலை பார்க்கின்றனர். பேரன் கண்ணனும் பாட்டியும் மட்டுமே இங்கு வசிக்கின்றனர். ஒரு நாள் பாட்டிக்கு உடல்நலமில்லாமல் போய்விட்டது. பாட்டியால் சமைக்க முடியவில்லை. கண்ணனிடம் உணவு வாங்கிக் கொண்டு வா" என்றார் பாட்டி. உடனே அவன், நாம் ஏன் கடையைத் தேடிச் செல்ல வேண்டும்? நம்மை நோக்கி வர வைக்கிறேன் பாருங்கள் என்றான். கண்ணன் அலைபேசியை எடுத்தான். உணவு விற்கும் கடைகள் அடங்கிய செயலியைப் பதிவிறக்கம் செய்தான். இருவருக்கும் தேவைப்படும் உணவைத் தெரிவு செய்தான். சற்றுநேரத்தில் உணவு வீடு தேடி வந்தது. சுவையான உணவை இருவரும் உண்டனர்.

3.1 உரைப்பகுதியில் இடம்பெற்றுள்ள பாட்டியின் பெயர் என்ன?

______________________________________________

3.2 பாட்டியின் பிள்ளைகள் எங்கு வேலை பார்க்கின்றனர்?

______________________________________________



Non Formal Book_25-27.indd 147 10-11-2020 13:06:39

3.3 பாட்டி ஏன் உணவு சமைக்கவில்லை?

---

3.4 நாம் கடையைத் தேடிப் போகவேண்டா எனக் கண்ணன் ஏன் கூறினான்?

---

3.5 கண்ணன் எப்படி உணவை வரவழைத்தான்?

---

## ஆ. எழுதுதல் (மொத்தம் 30 மதிப்பெண்கள்)

**4. வாக்காளருக்கான பெயர் சேர்ப்புக்கான விண்ணப்பத்தில் தேவைப்படும் தகவல்களை நிரப்புக.** மொத்தம் 10 மதிப்பெண்கள்

4.1 பெயர் ----------------------- ( 2 மதிப்பெண்)

4.2 வயது ----------------------- ( 2 மதிப்பெண்)

4.3 பாலினம் ----------------------- ( 2 மதிப்பெண்)

4.4 வீட்டு முகவரி ----------------------- ( 4 மதிப்பெண்)

**5. அன்றாட வாழ்வில், நீங்கள் பயன்படுத்தும் பொருள்களுள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.** **( 5 x 2 = 10 மதிப்பெண்)**

5.1 ஏதேனும் ஒரு பழத்தின் பெயர் ---------------------

5.2 ஏதேனும் ஒரு காயின் பெயர் ----------------------

5.3 உங்கள் சமையலறைக் கருவிகளுள் ஒன்று ---------------

5.4 நீங்கள் அணியும் அணிகலன்களுள் ஒன்று ----------------

5.5 உங்களுக்கு மிகவும் பிடித்த உணவுப்பொருள் --------------.



Non Formal Book_25-27.indd 148 10-11-2020 13:06:39

**6. உங்கள் பகுதியில் நூலகம் அமைத்துத் தரவேண்டி, நூலக ஆணையருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக.** **(10 மதிப்பெண்)**

அனுப்புநர் இடம் :

நாள் :

பெறுநர்

மதிப்பிற்குரிய ஐயா/ அம்மையீர்,

பொருள் :

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,



Non Formal Book_25-27.indd 149 10-11-2020 13:06:39

## இ. எண்ணறிவு (மொத்தம் 30 மதிப்பெண்கள்)

7.1 விடுபட்ட எண்களை எழுதுக. ( 6 x 1 = 6 மதிப்பெண்கள்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 90 | | | 93 | | 95 | 96 | | | 99 | |

பின்வரும் கணக்குகளுக்கு விடை காண்க. (7 x 2 = 14 மதிப்பெண்கள்)

7.2 கூட்டல்

1) 6
+ 8
-----
-----

2) 5 ரூபாய்
+ 20 ரூபாய்
---------
---------

7.3 கழித்தல்

3) 7 லிட்டர்
– 4 லிட்டர்
-----
-----

4) 45 பழம்
– 28 பழம்
---------
---------

7.4 பெருக்கல்


5) 5
x 4
----------
----------

6) 15
x 9
---------
---------

7.5 வகுத்தல்

7) 10 ÷ 2 =

7.6 மணிமுள் இருக்கும் இடத்தைப் பார்த்து நேரத்தைக் கீழே உள்ள கட்டங்களில் எழுதுக. (5 x 1 = 5 மதிப்பெண்கள்)



7.7 நிரப்புக. (5 x 1 = 5 மதிப்பெண்கள்)

1. ஒரு கிலோ மீட்டர் = --------- மீட்டர்
2. ஒரு மீட்டர் = --------- சென்டிமீட்டர்
3. முக்கால் மீட்டர் = --------- சென்டிமீட்டர்
4. அரை மீட்டர் = --------- சென்டிமீட்டர்
5. கால் மீட்டர் = --------- சென்டிமீட்டர்



Non Formal Book_25-27.indd 150 10-11-2020 13:06:39

| கற்போம் எழுதுவோம் இயக்கம்<br>கற்றல் விளைவுகள் | | |
|---|---|---|
| **எழுத்தறிவு** | **எண்ணறிவு** | **கூடுதல் திறன்கள்** |
| • எழுத்துகளை அடையாளம் கண்டு படிக்கும் திறன் பெறுவர்.<br>• தம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் சொற்களின் வரிவடிவத்தைப் புரிந்துகொள்வர்.<br>• தாம் காணும் விளம்பரங்கள், நாளிதழ்கள், புத்தகங்கள் போன்றவற்றில் இடம்பெற்றுள்ள செய்திகளைப் பிறர் உதவியின்றித் தாமே படித்துக்காட்டுவர்.<br>• நிமிடத்திற்கு 40 சொற்களை வாய்விட்டும், 50 சொற்களை மனத்திற்குள்ளும் படித்துக்காட்டும் திறன் பெறுவர்.<br>• எழுத்துகளின் வரிவடித்தைப் புரிந்துகொண்டு, உரிய முறையில் எழுதிக் காட்டுவர்.<br>• அன்றாட வாழ்வில் தம் தேவைகளுக்காக விண்ணப்பம்/ கடிதம்/ படிவம் போன்றவற்றை எழுத அறிவர்.<br>• தற்காலத் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, திறன்பேசி, கணினி போன்றவற்றைப் பயன்படுத்தவும் எழுத்துருக்களைப் பயன்படுத்தவும் அறிவர்.<br>• தன்னம்பிக்கையுடன் கையொப்பம் இடுவதற்கு அறிவர்.<br>• தமக்கு வரும் கடிதங்களைப் படித்து, அவற்றிற்குப் பதிலளிப்பர்.<br>• படிப்பதிலும் எழுதுவதிலும் உள்ள இடர்ப்பாடுகளைக் களைந்து, சமுதாயத்தில் எழுத்தறிவு பெற்று, வாழ்வில் முன்னேற்றம் காண்பர். | • 1 முதல் 1000 வரை எண்களை எழுத அறிவர்.<br>• ஓரிலக்கக் கூட்டல், கழித்தல் கணக்குகளைச் செய்துகாட்டுவர்.<br>• நீட்டல், நிறுத்தல், முகத்தல் போன்ற அளவைகளை அறிந்துகொண்டு, தம் அன்றாட வாழ்க்கைக் கணக்குகளில் பொருத்திப் பார்ப்பர்.<br>• கடிகாரத்தில் நேரமறிதல், தொடர்வண்டி நிலையம் போன்ற இடங்களில் பயன்பாட்டிலிருக்கும் 24 மணி நேரத்தைப் புரிந்துகொள்வர்.<br>• வார நாள்கள், மாதங்கள், நாள்காட்டி, பருவங்கள் போன்றவற்றை அறிந்துகொள்வர்.<br>• பயணச்சீட்டு முன்பதிவு, வங்கி சேமிப்புக் கணக்குப் புத்தகம், காசோலை, வங்கி/ அஞ்சலகப் படிவங்கள், செல்பேசி ரீசார்ஜ் திட்டங்கள், பீம் செயலி போன்றவற்றை அன்றாட வாழ்வில் பயன்படுத்த அறிந்துகொள்வர். | 1. சட்ட அறிவு<br>• பெண்களுக்கான சட்டங்கள்<br>• இளைஞர் நீதிச் சட்டம்<br>• போக்சோ சட்டம் இலவசக்<br>• கல்வி உரிமைச் சட்டம்<br>• தகவல் அறியும் உரிமைச் சட்டம்<br>• குழந்தைத் திருமணத் தடுப்புச் சட்டம்<br>• பாலியல் தொல்லை தடுப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டம்<br>• வரதட்சணை தடுப்புச் சட்டம்<br>• அரசு நலத் திட்டங்களுக்கான விண்ணப்பித்தல்<br>2. வாக்காளர் உரிமை, கடமை<br>3. பேரிடர் மேலாண்மை<br>4. சுற்றுப்புறச் சூழலறிவு<br>• இயற்கை உணவுகள்<br>• மரக்கன்று நடுதல்<br>• மண்வளம், நீர் மேலாண்மை<br>5. உடல்நலமும் சுகாதாரமும்<br>6. பணமில்லாப் பரிமாற்றம்<br>• ஏடிஎம் மூலம் பணமெடுத்தல்<br>• பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பற்ற பணப்பரிமாற்றங்கள் விழிப்புணர்வு<br>• திறன்பேசி துணையுடன் இணையவழிச் சேவைகளைப் பயன்படுத்துதல்<br>• அரசின் நலத்திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு, விண்ணப்பித்தல்<br>7. தூய்மை பாரதம் விழிப்புணர்வு<br>8. இணையவழி மூலம் இருக்கை முன்பதிவு – பேருந்து/ தொடர்வண்டி/ உணவகம்/ தங்குமிட வசதிகள் |



Non Formal Book_25-27.indd 151 10-11-2020 13:06:39




மரக்கன்று நடுவோம்



மழைநீர் சேமிப்போம்

**வாக்களிப்பது**
**நம் உரிமையும்**
**கடமையுமாகும்**




**சிறார் உதவி மைய எண்**
(Child Help Line)
**1098**
(24 x 7)



**CALL 14417**
**கல்வி**
**தகவல் மையம்**



Non Formal Book_25-27.indd 152 10-11-2020 13:06:42